தரத்தில் முதலிடம்!!!
100 வருட பாரம்பரியம்
7999
சாரங்கள்
மற்றும்
உள்ளாடைகள்
இது வெறும் நம்பரல்ல நம்பிக்கை!
நாடளாவிய ரீதியில் விநியோகம்

VIRAKESARI
வீரகேசரி
THE PREMIER NATIONAL TAMIL DAILY IN SRI LANKA
Registered as a Newspaper at the G.P.O No. QD/133/News/2021 www.virakesari.lk
பிராந்திய, நகரப்பதிப்பு

தரத்தில் முதலிடம்!!!
100 வருட பாரம்பரியம்
7999
சாரங்கள்
மற்றும்
உள்ளாடைகள்
இது வெறும் நம்பரல்ல நம்பிக்கை!
நாடளாவிய ரீதியில் விநியோகம்

மலர் :92 இதழ்: 96 கொழும்பு பிலவ வருடம் கார்த்திகை மாதம் 11 ஆம் திகதி சனிக்கிழமை (27.11.2021) ஹிஜ்ரி –1443 ர.ஆகிர் 21 விலை :ரூ.30 பக்கங்கள் :20

ஆளுந்தரப்பு குப்பைகளை அவர்களே கிளறுகின்றனர்

நாட்டின் சாபக்கேடு என்ன என்பதை இப்போதாவது விளங்கிக்கொள்ள வேண்டும் என்கிறார் அநுரகுமார

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

ஆளுங்கட்சி குப்பையை அவர்களே கிளறும் நிலையில் இந்த நாட்டுக்கு ஏற்பட்டுள்ள சாபக்கேடு என்ன என்பதை அறிந்துகொள்ள முடியும். இந்த குப்பைகளை நீங்களே கிளற வேண்டும் என்பதையே நாமும் விரும்புகின்றோம் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க சபையில் தெரிவித்தார். 10

உரப்பிரச்சினையில் என்னவானாலும் சீன–இலங்கை நட்புறவே முக்கியம்

துக்கத்திலும் சந்தோசத்திலும் எம்முடன் கைகோர்த்த சகோதரனை அந்நியப்படுத்த வேண்டாம்; சஷீந்திர ராஜபக்ஷ

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

சீன உர இறக்குமதியில் அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன் வைத்து மக்களை குழப்பிய காரணத்தினால் துக்கத்திலும் சந்தோசத்திலும் எம்முடன் கைகோர்த்த நண்பனும் சகோதரனுமான சீன இராச்சியம் அதிருப்தியில் அந்நியப்பட்டுள்ளது. சீன இலங்கை நட்புறவு சகலதையும் விட உயர்வானது. உர விவகாரத்தில் என்ன தீர்மானம் எடுத்தாலும் அதனை தாண்டி இரு நாடுகளுக்கு 09

பிரபாகரனுக்கு சபையில் வாழ்த்து

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் 67 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, பாராளுமன்றத்தில் பிரபாகரனுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கமத்தொழில் அமைச்சு மற்றும் நீர்ப்பாசன 10

பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின் ஐக்கிய மகளிர் சக்தியினால் நேற்று கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான போராட்டத்தின்போது பிடிக்கப்பட்ட படம். (படப்பிடிப்பு :திஎெத் சமல்க)

காந்தியின் வாசகங்களை வடகிழக்கில் உதித்த வீர தமிழனுக்கு சமர்ப்பிக்கிறேன்

சபையில் சி.வி. விக்கினேஸ்வரன் தெரிவிப்பு

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

"இந்தியாவுக்கு ஆற்றிய சேவையின் நிமித்தம் நேதாஜி என்றென்றும் சிரஞ்சீவியாக மக்கள் மனதில் வாழ்வார்'' என்ற காந்திஜியின் வாசகங்களை இலங்கையில் வடக்கு, கிழக்கை மையமாக வைத்து அங்கு உதித்த வீரத்தமிழனின் இன்றைய பிறந்தநாளன்று அவர் 10

நியாயமான அரசியல் தீர்வை காண்பதற்கு பிரித்தானியாவின் ஒத்துழைப்பு தொடரும்

சுமந்திரனிடத்தில் பொதுநலவாய வெளிவிவகார அமைச்சர் தாரிக் அஹமட் தெரிவிப்பு

(ஆர்.ராம்)

இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறலைச் செய்வதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இணை அனுசரணை நாடுகளின் தலைமையேற்று 10

வலுவான ஒற்றையாட்சியில் சிங்கள பௌத்த அரசியலமைப்பே உருவாகும்

அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரிடம் சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு

(ஆர்.ராம்)

தற்போதைய ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்டு வரும் புதிய அரசியலமைப்பு ஒற்றையாட்சிக் கட்டமைப்பை வலுவாகக் கொண்ட சிங்கள, பௌத்தத்தினை முன்னிலைப்படுத்திய அரசியலமைப்பாகவே உருவாகும் சாத்தியம் அதிகமுள்ளதாக புளொட் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 10

எரிபொருளின் விலையை நிர்ணயிக்க விலை நிர்ணய நிதியம் உருவாக்கம்

அமைச்சர் உதய கம்மன்பில அறிவிப்பு; விலை சூத்திரமும் வரும் என்கிறார்

(இராஜதுரை ஹஷான்)

எரிபொருளின் விலையை நிர்ணயதன்மையில் பேணுவதற்காக வலுசக்தி அமைச்சின் மேலதிக செயலாளர் தலைமையில் 'விலை நிர்ணய நிதியம்' ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இனி வரும் காலங்களில் எரிபொருளின் விலையை இந்நிதியம் தீர்மானிக்கும். உலக சந்தையில் எரிபொருளின் விலை 09

பூஜித் ஜயசுந்தரவுக்கு எதிரான வழக்கு

பொலிஸ் மா அதிபரை திங்களன்று நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

(எம்.எப்.எம்.பஸீர்)

உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலை குண்டுத்தாக்குதல்களை தடுப்பதற்கு அல்லது அதன் தாக்கங்களை குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை 10

யுகதனவி நிலைய ஒப்பந்தத்தை சவாலுக்கு உட்படுத்தும் மனுக்கள்

பரிசீலனைக்கு பிரதம நீதியரசர் தலைமையில் ஐவர் கொண்ட நீதியரசர்கள் குழு

(எம்.எப்.எம்.பஸீர்)

கெரவலப்பிட்டி யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் அரசுக்கு சொந்தமான பங்குகளில் 40 வீதமானவற்றை அமெரிக்க நிறுவனத்திற்கு வழங்க 09

சிலிண்டர் வெடிப்பு தொடர்பில் பரிசோதனைகள் முன்னெடுப்பு

லிட்ரோ நிறுவனத்தின் சுகாதார பாதுகாப்பு பிரிவு

(இராஜதுரை ஹஷான்)

வீடுகள் மற்றும் வணிக நிலையங்களில் உள்ள எரிவாயு சிலிண்டர் பாதுகாப்பானதா என மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. எரிவாயு சிலிண்டர் வெடித்து அதனால் 10

7 மில்லியன் டொலரை கோரியுள்ள சீன தூதரகம்

சபையில் எதிர்க்கட்சி

(ஆர்.யசி,எம்.ஆர்.எம்.வசீம்)

நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட தரம் குறைந்த உரத்தை திருப்பியனுப்பினாலும் அதற்கான நஷ்டஈடாக 7 மில்லியன் டொலர் வழங்கவேண்டும் என சீன தூதரகம் தெரிவித்திருக்கின்றது. அதனால் அரசாங்கம் திருப்பி அனுப்பிய கழிவுப்பொருட்கள் அடங்கிய உரத்தை மீண்டும் நாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்துவருகின்றது என 10

கட்சியிலிருந்து விலகியவர்கள் மீண்டும் இணையலாம்

சிறிலங்கா சுதந்திர கட்சி அழைப்பு

(எம்.மனோசித்ரா)

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசாங்கத்திற்குள் காணப்பட்டாலும், கட்சி என்ற ரீதியில் அரசியலில் 09

'டிங்கர் லசந்த' சுட்டுக்கொலை

(எம்.எப்.எம்.பஸீர்)

பாதாள உலக உறுப்பினர் சன்ஷைன் சுத்தாவின் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான டிங்கர் லசந்த என அழைக்கப்படும் லுணுவிலகே லசந்த 09

கொவிட் வில்லைகளை இறக்குமதி செய்யுங்கள்

அமைச்சருக்கு ஜனாதிபதி கோட்டாபய பணிப்பு

(எம்.மனோசித்ரா)

கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பிரித்தானியா உள்ளிட்ட சில நாடுகளில் தற்போது 09

35,000 பில்லியன் ரூபா நிதிக்கு என்னவானது?

சபையில் எதிர்க்கட்சி கேள்வி

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

சேதன பயிர்செய்கைக்காக 35,000 பில்லியன் ரூபாவை ஒதுக்குவதாக 09

சவேந்திர சில்வாவுக்கு எதிராக தடைவிதியுங்கள்

பிரிட்டன் எம்.பி.க்கள் வலியுறுதல்

(நா.தனுஜா)

மனித உரிமை மீறல்களை ஒருபோதும் சகித்துக்கொள்ளமுடியாது என்றும் எனவே அமெரிக்காவைப்போன்று இலங்கையின் இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக தடையை விதிக்குமாறும் பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

போர்க்குற்றங்களுடன் 10

உலக தமிழ் செய்தி வரலாற்றில் 90 வருட பாரம்பரியத்தை கொண்டுள்ள,
இலங்கையின் முதன்நிலை முதற்தர செய்தி வழங்குனர்
வீரகேசி செய்திகள்
நடந்தவற்றை அப்படியே திரிபு இல்லாமல்
உள்ளது உள்ளபடியே உங்களுக்காக!

STAR தமிழ் TELEVISION
UHF 46 | DIALOG TV 22 | PEO TV 21
ASK CABLE 48 | CITY CABLE
தினந்தோறும் இரவு 7 மணிக்கு
காணத்தவறாதீர்கள்

நிக்கவரெட்டிய பகுதியிலும் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு

பல சம்பவங்கள் பதிவு – அச்சத்தில் மக்கள்

(எம்.மனோசித்ரா)

நாட்டில் அண்மைக்காலமாக சமையல் எரிவாயு கசிவின் காரணமாக அடுத்தடுத்து வெடிப்பு சம்பவங்கள் பதிவாகிக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் குருணாகல் நிக்கவரெட்டி பொலிஸ் பிரிவில் கந்தேகெதர பிரதேசத்திலும் நேற்றைய தினம் சமையல் எரிவாயு வெடிப்பு சம்பவமொன்று பதிவாகியுள்ளது. குறித்த பிரதேசத்திலுள்ள வீடொன்றில் நேற்று முற்பகல் வேளையில் இந்த வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வெடிப்பு இடம்பெற்ற போது வீட்டில் எவரும் இருக்கவில்லை என்பதால் உயிர் ஆபத்துக்கள் ஏற்படவில்லை என்றும் எனினும் வீட்டிலுள்ள உடைமைகள் சேதமடைந்துள்ளதாகவும் நிக்கவரெட்டிய பொலிஸார் தெரிவித்தனர். சமையல் எரிவாயு கசிவின் காரணமாகவே இந்த வெடிப்பு இடம்பெற்றுள்ளதாக வீட்டு உரிமையாளர்கள் தெரிவித்ததாகவும் நிக்கவரெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் பொலன்னறுவை மாவட்டம் வெலிகந்த சுதுன்பிட்டி பிரதேசத்தில் சமையல் எரிவாயு கசிவினால் ஏற்பட்ட வெடிப்பு சம்பவத்தில் யுவதியொருவர் உயிரிழந்துள்ளார். கடந்த 13 ஆம் திகதி வீட்டில் தனித்திருந்த குறித்த யுவதி எரிவாயு அடுப்பினை தீக்குச்சியால் பற்றவைக்க முயற்சித்த போதே வெடிப்பு இடம் பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று வீட்டில் உறவினர்கள் இருக்கவில்லை. எனவே அயலவர்களால் அவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். இவ்வாறு கடந்த 13 ஆம் திகதி முதல் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் , நேற்று முன்தினம் வியாழக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த இரு சம்பவங்களுடன் இணைத்து இம்மாத்திலும் மாத்திரம் சமையல் எரிவாயு கசிவின் காரணமாக 6 வெடிப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. கடந்த 4 ஆம் திகதி வெலிகம கப்பரதொட்ட பகுதியிலும் கடந்த 16 ஆம் திகதி இரத்தினபுரி பகுதியில் அமைந்துள்ள ஹோட்டலொன்றிலும் 20 ஆம் திகதி கொழும்பிலுள்ள குதிரை பந்தய திடலின் பார்வையாளர் கூடத்திற்கருகிலிருந்த உணவகத்திலும் அடுத்தடுத்து வெடிப்பு சம்பவங்கள் பதிவாகின.

இந்த வெடிப்பு சம்பவங்களுக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று பிரதான சமையல் எரிவாயு நிறுவனங்கள் தெரிவித்துள்ளதோடு, பாவனையாளர்களின் கவனயீனமே இதற்கான காரணம் என்றும் அவை குறிப்பிடுகின்றன. எவ்வாறிருப்பினும் இவ்வாறு தொடர்ச்சியாகப் பதிவாகிக் கொண்டிருக்கும் வெடிப்பு சம்பவங்களுக்கான உண்மை காரணியை அறிந்து நுகர்வோர் மற்றும் பாவனையாளரான பொது மக்களின் உயிர் பாதுகாப்பை அரசாங்கம் உள்ளிட்ட உரிய தரப்பினர் உறுதிப்படுத்த வேண்டும்.

நாடு திரும்ப விரும்புகின்ற இலங்கையர்கள் பூர்வீக இடங்களில் கௌரவமாக வாழலாம்

நடவடிக்கை எடுக்கப்படும் – அமைச்சர் டக்ளஸ் உத்தரவாதம்

இந்தியாவில் தங்கியிருக்கும் இலங்கையர்கள் நாடு திரும்ப விரும்புகின்ற பட்சத்தில் அவர்களை அவர்களுடைய பூர்வீக இடங்களில் மீள்குடியேறி இயல்பு வாழ்க்கையை தொடர்வதற்கு தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு தயாராக இருப்பதாக தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறித்த விடயத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ ஆகியோரின் பூரணமான ஒத்துழைப்புக் தனக்கு கிடைக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகளை நாட்டிற்கு அழைத்து வருதல் மற்றும் இந்தியக் கடற்றொழிலாளர்களின் விவகாரம் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் தொடர்பில், சென்னையில் அமைந்துள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திற்கான பிரதி உயர்ஸ்தானிகர் டி. வெங்கடேஸ்வரன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து விளக்கமளித்தார். இதன் போதே அமைச்சர் மேற்கண்ட விடயத்தை கூறினார்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் நேற்று இடம்பெற்ற விசேட சந்திப்பிலேயே குறித்த விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

குறிப்பாக இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் காரணமாக இடம்பெயர்ந்து சென்று இந்தியாவில் தங்கியிருக்கின்றவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் தொடர்பாக பிரதி உயர்ஸ்தானிகரினால் கடற்றொழில் அமைச்சருக்கு தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவில் இருந்து அழைத்து வரப்படவுள்ள இலங்கையர்களுக்கு பயண ஏற்பாடுகளை இலவசமாக வழங்குவதற்கும் பொருட்களை ஏற்றிவருவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்த பிரதி உயர் ஸ்தானிகர், அழைத்து வரப்படுகின்றவர்களின் செலவுகளுக்காக ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் முதல் கட்டமாக தலா 30,000 ரூபா வழங்குவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகவும், அடுத்த வருடம் சுமார் 7000 குடும்பங்களை அழைத்து வருவதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், அழைத்து வரப்படுகின்றவர்களின் பூர்வீகப் பிரதேசங்களில் சர்வதேச தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கும் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

குறித்த முயற்சிகளை வரவேற்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாட்டிற்கு வருவதற்கு விரும்புகின்ற இலங்கையர்கள், தங்களுடைய பூர்வீக இடங்களில் மீள்குடியேறி இயல்பு வாழ்க்கையை தொடர்வதற்கு தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு தயாராக இருப்பதாக தெரிவித்ததுடன் குறித்த விடயத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ல மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ ஆகியோரின் பூரணமான ஒத்துழைப்புத் தனக்கு கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.

மேலும், பல்வேறு காரணங்களுக்காக இந்தியாவின் சிறப்பு முகாம்களிலும் சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றவர்கள் தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடந்த மாதம் முல்லைத்தீவுக்கு விஜயம் மேற்கொண்டபோது சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் ஒரு பகுதியினரின் உறவினர்கள் தன்னை சந்தித்ததையை சுட்டிக்காட்டியதுடன், அதுதொடர்பாக ஏற்கனவே இந்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளமையையும் சுட்டிக்காட்டினார்.

கொவிட் தொற்றுக்கு பின் குருதி உறைதல் ஏற்பட்டால் பாரிய ஆபத்து

விசேட வைத்திய நிபுணர் ஆஷா சமரநாயக்க

(எம்.மனோசித்ரா)

கொவிட் தொற்றுக்குள்ளாகி 28 நாட்களின் பின்னர் 'கொவிட் தொற்றுக்கு பிந்தைய நிலைமை' ஏற்படுவதால் பாரிய ஆபத்துக்கள் ஏற்படக் கூடும். இவற்றில் குருதி உறைதல் நிலைமை ஏற்பட்டால் மாரடைப்பு போன்ற நோய் நிலைமை ஏற்படக் கூடும் என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் ஆஷா சமரநாயக்க தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

கொவிட் தொற்றுக்குள்ளாகி 28 நாட்களின் பின்னர் 'கொவிட் தொற்றுக்கு பிந்தைய நிலைமை' ஏற்படுதல் அதிகரித்துள்ளது. இதனால் பாதிக்கப்படும் பலர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளுக்கு வந்து மருத்துவ ஆலோசனை பெறுகின்றனர். 'கொவிட் தொற்றுக்கு பிந்திய நிலைமை' எனும் போது தொற்றின் போது காணப்பட்ட அறிகுறிகள், வேறு நோய் அறிகுறிகள் மற்றும் புதிய நோய் அறிகுறிகள் ஏற்படுகின்றன. இவை தவிர சிகிச்சையின் போது எடுத்துக் கொண்ட மருந்துகளாலும் பக்க விளைவுகள் ஏற்படக் கூடும்.

'கொவிட் தொற்றுக்கு பிந்திய நிலைமை' ஏற்படும் போது அதிக உடற்சோர்வு, தூக்கமின்மை மற்றும் உடல் வலி என்பன ஏற்படும். இதேவேளை சுவாசிப்பில் சிரமமும் ஏற்படும். இவை சிகிச்சைகள் மற்றும் மருத்துவ ஆலோசனைகளின் ஊடாக தீர்க்கக் கூடியவையாகும். எவ்வாறிருப்பினும் குருதி உறைதல் ஏற்பட்டால் அது ஆபத்தானதாகும்.

குருதி உறைதல் ஏற்பட்டால் இதயத்தின் இரத்தக்குழாய்களில் கட்டிகளைப் போன்ற நிலைமை தோற்றம் பெற்று மாரடைப்பு போன்ற நிலை ஏற்படவும் வாய்ப்புள்ளது. எனவே கொவிட் தொற்றுக்கு உள்ளாகாமல் இருப்பதே சிறந்ததாகும் என்றார்.

சமஷ்டி முறையான ஒரு அரசியல் யாப்பை உருவாக்கிக்கொடுங்கள்

பட்ஜட்டினால் வட,கிழக்கு தமிழ் மக்களுக்கு எந்தப்பயனுமில்லை என்கிறார் சி.வி.விக்னேஸ்வரன்

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசிம்)

நாட்டில் சமாதானமும் சுபிட்சமும் ஏற்பட வேண்டுமானால் "ஒரு நாடு ஒரு சட்டம்" என்று கூறித் திரிந்தால் அது ஏற்படாது. சுய நிர்ணய உரிமைக்குரியவர்களுக்கு சமஷ்டி முறையான ஒரு அரசியல் யாப்பை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களையும் சமமான முறையில் வரவேற்றால் தான் சமாதானமும் சுபிட்சமும் உதயமாகும் என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கமத்தொழில் அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சு உள்ளிட்ட 3 இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

அண்மையில் ஜனாதிபதியால் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் சேதன உரத்துக்கு மட்டுமே அரச நிவாரணங்கள் இனி கிட்டும் என்று குறிப்பிட்டிருந்தது.அதோடு சேர்த்து மேலும் ஒரு செய்தி வெளிவந்தது. சேதன அல்லது இரசாயன உரங்களை இனி யாரும் இறக்குமதி செய்யலாம். ஆனால் அவற்றைப் பாவிக்கும் விவசாயிகளுக்கு அரசின் மானிய உதவிகள் கிடைக்கமாட்டா என்பதே அதுவாகும்.

விவசாயிகளினதும் பொது மக்களினதும் ஆர்ப்பாட்டங்களின் பின்னர் இரசாயன உரங்களை இறக்குமதி செய்யலாம் அவற்றை அனுமதிக்கின்றோம் என்று கூற வந்த அரசாங்கம் அதனை வெளிப்படையாகக் கூறாது சேதன உரத்துக்கு மட்டுமே அரச நிவாரணங்கள் கிட்டும் என்று மறைமுகமாக கூற வந்ததன் நோக்கம் என்ன? அது மட்டுமல்லாமல் தற்போது களை கொல்லிகள்,கிருமிநாசினிகளையும் இறக்குமதி செய்ய அரசாங்கம் இடமளித்துள்ளது. இவற்றை முன்னரே ஆராய்ந்தறிந்து உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்திருக்கலாம். மக்களுக்கு மன உளைச்சல்களை ஏற்படுத்திய பின்னரே இவற்றைச் செய்வோம் என்று அரசாங்கம் கூறுமாப்போல் இருக்கின்றது.

இவ்வாறான அரசாங்கத்தின் நிச்சயமற்ற செயல்களால் பாதிக்கப்பட்டிருக்கும் விவசாயிகளுக்கு வரும் தைப்பொங்கல் காலத்தில் நட்டஈடு வழங்கப்படுமா? அடுத்து படையினருக்கு போர் முடிந்த பின்னரும் வருடாவருடம் கூடிய நிதிகளை வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கிவருவது எதற்காக. மாலைதீவோ இந்தியாவோ எமக்கெதிராகத் தாக்குதல்களை மேற்கொள்ள மாட்டா. நீங்கள் இந் நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய இன மக்களுக்கு எதிராகத் தான் படையினரைப் பாவிக்கப் போகின்றீர்கள். மக்கள் உங்களை வெறுக்கத் தொடங்க மேலும் மேலும் இராணுவ பலத்தைப் பாவிப்பதற்காகவா இந்தளவு பாரிய தொகையை படையினர் சார்பில் செலவிடுகின்றீர்கள்?

இந்தத் தொகைகளில் ஒரு பகுதியை யாவது எங்கள் பிறநாட்டுக் கடன்களை அடைக்கப்பாவிக்கலாம் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா? 308 பில்லியன் ரூபா ஒரு சிறிய நாடான இலங்கையின் பாதுகாப்புக்கு பாவிக்க முனைவது வியப்பை அளிக்கின்றது. அண்மையில் அரசாங்க ஊழியர்கள் எமது நிதியில் பெரும் பங்கை எடுத்துவிடுகின்றார்கள் என்று நிதி அமைச்சர் கூறியிருந்தார். இது தவறு. படையினர் தான் எமது வருமானத்தில் கூடிய பங்கை விழுங்கி வருகின்றார்கள்.

இந்த வரவு செலவுத்திட்டத்தால் வட,கிழக்கு தமிழ் மக்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கவில்லை என்றார்.

தினக்குரல் ஊழியரின் தந்தை காலமானார்



தினக்குரல் பத்திரிகையின் கணனிப்பிரிவு ஊழியர் பாமதி சேந்தனின் தந்தை நாகமுத்து வேணுகோபால் (வயது 87) நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் யாழ்ப்பாணம், பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் கொழும்பு மட்டக்களி காக்கைதீவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்தார்.

அன்னாரது பூதவுடல் 65/215 காக்கைதீவு மட்டக்களி எனும் விலாசத்திலுள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதிக் கிரியைகள் தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

விஷ உர இறக்குமதியின் பின்னணியில் ஜனாதிபதி

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசிம்)

விஷ உர இறக்குமதியின் பின்னணியில் அரசாங்கமே உள்ளது. ஜனாதிபதி, ஜனாதிபதி செயலாளர், விவசாயத்துறை அமைச்சர், உரிய அதிகாரிகள் பங்குபற்றிய கூட்டங்களிலேயே விஷ உரம் இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் (ஜே.வி.பி) அநுரகுமார திசாநாயக்க சபையில் குற்றம் சுமத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை, கமத்தொழில் அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

விவசாயத்திற்கான சகல இறக்குமதியையும் நிறுத்துமாறு முதலில் தீர்மானிக்கப்பட்டது. பின்னர் படிப்படியாக வர்த்தமானி அறிவித்தல்கள் விடுக்கப்பட்டு அவை மீளவும் பெற்றுக்கொள்ளப்பட்டு இறுதியாக இன்று தனியார் துறைக்காக யூரியா இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி தேர்தலில் கொடுத்த இலவச உர வேலைத்திட்டத்தை சமாளிக்க, அதில் இருந்து விடுபட நடத்திய நாடகமே இவை அனைத்தும் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

விவசாயிகள் தமது நிலத்தை தனியார் நிறுவனங்களுக்கு கொடுக்கவேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். பாரிய தனியார் நிறுவனங்கள் முன்னெடுக்கும் மாபியாவை நடத்தும் தரகர்களாக அரசாங்கம் மாறியுள்ளது. இதில் அரசாங்கத்திற்கு வெற்றி கிடைத்துள்ளது. சீன நிறுவனம் ஒன்றில் இலங்கைக்கு தேவையான 96 ஆயிரம் மெற்றிக் தொன் உரத்தை இறக்குமதி செய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளது. அதற்கமையவே அண்மையில் 20 ஆயிரம் மெற்றிக் தொன் உரம் இலங்கைக்கு கொண்டவரப்பட்டது. அந்த உரத்தின் தரம் மோசமானது என தெரிந்தும் அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்தே உர நிறுவத்தின் பக்கமே பிரதிநிதித்துவப்படுத்தியது.

இறுதியாக உரத்தை இறக்குமதி செய்ய முடியாது குறித்த நிறுவனத்திற்கு 9 பில்லியம் அமெரிக்க டொலர்களை நட்டஈடாக வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பேச்சுவார்த்தைகளுக்கு சென்றால் மேலும் அதிகமாக நட்டஈடு வழங்க வேண்டிவரும். இந்த நெருக்கடியை திசை திருப்ப நடேனா நைட்ரஜன் என்ற கதையை உருவாக்கினீர்கள். உண்மையில் இது நடேனா யூரியா. இதனை நீங்கள் மறைக்க முடியாது. இந்த கணக்குவழக்குகளை கையாள எந்த அனுமதியும் இல்லாது நிறைசேரி நிதியி கையாள பி.பி ஜெயசுந்தரவுக்கு இருக்கும் அதிகாரம் என்ன. அதையும் தாண்டி உடன்படிக்கை செய்ய முன்னர் நாணயக் கடிதத்தை நிறந்தது யார். பணம் அனுப்பப்பட்டது எவ்வாறு? இதற்கு அரசாங்கம் பதில் கூற வேண்டும். ஒரு குடும்பத்திற்கு பணம் தேடிக்கொடுக்கும் செயற்பாடுகளுக்கு மக்களின் பணத்தை எடுக்கும் உரிமை இல்லை. ஆனால் அதனையே பி.பி ஜெயசுந்தர முன் னெடுத்து வருகின்றார்.

பதில் அதிபராக நியமனம்

கொழும்பு மேட்டுத்தெரு புனித அன்னம்மாள் பெண்கள் பாடசாலையின் பதில் அதிபராக திருமதி எம்.ஜே.கோமல் நியமிக்கப்பட்டுள்ளார்.

அருட் சகோதரி வேர்ஜினியா ஒய்வு பெற்றுள்ளார். அவ்விடத்திற்கே திருமதி கோமல் பதில் அதிபராக நியமம் பெற்றுள்ளார்.

நீண்ட கால அனுபவமும் பாடசாலை வளர்ச்சிக்கும் பாடுபட்டவரான திருமதி கோமல் தனது பதவியை ஏற்றுள்ளார்.

சுபயோகம்

27.11.2021 மிலவ வருடம் கார்த்திகை மாதம் 11 ஆம் நாள் சனிக்கிழமை

கிருஷ்ணபட்ச அஷ்டமி திதி பின்னிரவு 1.09 வரை.அதன் மேல் நவமி திதி மகம் நட்சத்திரம் மாலை 5.48 வரை. பின்னர் பூசம் நட்சத்திரம். சிராத்த திதி தேய்பிறை அஷ்டமி. அமிர்தசித்த யோகம்.கீழ் நோக்குநாள். சந்திராஷ்டம நட்சத்திரங்கள் திருவோணம் அவிட்டம்.

சுபநேரங்கள் காலை 10.30 – 11.30, மாலை 4.30 –5.30, ராகுகாலம் 09.00 –10.30, எமகண்டம் 1.30 –3.00, குளிகை காலம் 6.30 – 7.30, வாரசூலம்–கிழக்கு. பரிகாரம்– தயிர்.

		ராகு	
குரு	தினசரி கிரகநிலை கார்த்திகை11 சனி		
சனி			
சுக்	குரு புத கேது	செவ்	

மேடம் – புகழ், பெருமை
இடபம் – உதவி, நட்பு
மிதுனம் – ஜெயம், வெற்றி
கடகம் – கீர்த்தி, செல்வாக்கு
சிம்மம் – அன்பு, பாசம்
கன்னி – வரவு, இலாபம்
துலாம் – அன்பு, இரக்கம்
விருச்சிகம் – பகை, விரோதம்
தனுசு –காரியசித்தி,அனுகூலம்
மகரம் – கவனம், எச்சரிக்கை
கும்பம் – தனம், சம்பத்து
மீனம் – புகழ், செல்வாக்கு

இன்று கால பைரவஷ்டமி. அத்துடன் சனி பகவான் விஷ்ணு வழிபாடு என்பன நன்று ஆறுமுகநாவலர் குருபூஜை செவ்வாய், சேது கிரகங்களின் ஆதிக்க நாளின்று

அதிர்ஷ்ட எண்கள் – 3, 5, 8
பொருந்தா எண்கள் – 7, 8, 2
அதிர்ஷ்ட வர்ணங்கள் –மஞ்சள், நீலம்

இராமரத்தினம் சோதி
(தெஹிவளை ஸ்ரீ விஷ்ணு கோயில்)

சுபயோகம்

28.11.2021 மிலவ வருடம் கார்த்திகை மாதம் 12 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை

கிருஷ்ண பட்ச நவமி திதி பின்னிரவு 12.30 வரை. அதன் மேல் தசமி திதி. பூரம் நட்சத்திரம் மாலை 5.55 வரை. அதன் மேல் உத்திரம் நட்சத்திரம். சிராத்த திதி தேய்பிறை நவமி. சித்தமிர்த யோகம் கீழ் நோக்கு நாள். சந்திராஷ்டம நட்சத்திரங்கள் அவிட்டம், சதயம்.

சுபநேரங்கள் காலை 9.30–10.30, ராகு காலம் 04.30 –06.00, எமகண்டம் 12.00 –1.30, குளிகை காலம் 3.00 – 04.30, வாரசூலம்– மேற்கு, பரிகாரம்– வெல்லம்.

		ராகு	
குரு	தினசரி கிரகநிலை கார்த்திகை12 ஞாயிறு இரவு 11.53 கன்னி சந்.		
சனி			சந்
சுக்	குரு புத கேது	செவ்	

மேடம் – தடை, சங்கடம்
இடபம் –பிரயாணம், செலவு
மிதுனம் –விவாதம், வாக்குவாதம்
கடகம் – நோய், செலவு
சிம்மம் – மகிழ்ச்சி, யோகம்
கன்னி –ரோகம், அவஸ்தை
துலாம் – சிந்தி, அனுகூலம்
விருச்சிகம் –கீர்த்தி, புகழ்
தனுசு – நட்பு, உதவி
மகரம் –பணம், வரவு
கும்பம் – அன்பு, பாசம்
மீனம் –வரவு, இலாபம்

அருளின் உயர்ந்த வடிவம் மௌனம். அதுவே உயர்ந்த உபதேசம்– ரமண மகரிஷி. இன்று அம்பிகை பார்வதி தேவியை வழிபடல் நன்று. சூரியன், சனி கிரகங்களின் ஆதிக்க நாளின்று

அதிர்ஷ்ட எண்கள் –01, 05
பொருந்தா எண்கள் – 08, 07
அதிர்ஷ்ட வர்ணங்கள்–மஞ்சள், வெளிர்நீலம்

இராமரத்தினம் சோதி
(தெஹிவளை ஸ்ரீ விஷ்ணு கோயில்)

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களதது கொவிட் தொற்று சுகாதார பாதுகாப்பு நலன் கருதி முன்னாள் மேலும்காண சபை உறுப்பினரும் விவேகா பயிற்சி நிலைய நிறுவனருமான கே.ரி. குருசாமி மற்றும் அதன் அமைப்பாளர்களான பழபுஷ்பநாதன் மற்றும் துரை இராஜரட்ணம் ஆகியோரின் ஏற்பாட்டில் ஒரு கட்டமாக வெள்ளவத்தை சைவ மங்கயர் வித்தியாலயம், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி இராமநாதன் மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு சென்டைசர், முகக்கவசங்கள் உள்ளிட்ட சுகாதார அத்தியாவசியப் பொருட்களை வழங்கிவைத்தபோது....

மாவீரர் தின நினைவுகூரல் விவகாரம்

பொலிஸாரின் விண்ணப்பம் முல்லை. நீதிமன்றினால் நிராகரிப்பு

(கே.குமணன்)

முல்லைத்தீவில் மாவீரர் நாளுக்கு தடையுத் தரவு கோரி பொலிசார் மீண்டும் நீதிமன்றில் செய்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது .

இறந்தவர்களுக்கு பொதுவான நினைவுகூரல்களை மேற்கொள்ள முடியும். இறந்தவர் யாராக இருந்தாலும் அவரை நினைவு கூருவது மானிடப்பண்பு என்று குறிப்பிட்டு மாவீரர் நிகழ்வுக்கு எதிரான கட்டளையை இறந்தவர்களை நினைவுகூருவதற்கு எந்த தடையும் இல்லை என்பதாக திருத்தியமைத்து முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா கட்டளையாக்கியிருந்தார் .

இந்நிலையில் நேற்று மீண்டும் முல்லைத்தீவு பொலிசாரினாலும் நகர்தல் பத்திரம் தாக்கல் செய்து குறித்த நினைவுகூரலுக்கான தடையுத்தரவை வழங்குமாறு மீண்டும் விண்ணப்பம் செய்தனர். இதன்போது இடம்பெற்ற வாதப் பிரதிவாதங்களை ஆராய்ந்த நீதிவான் பொலிஸாரின் விண்ணப்பத்தை நிராகரித்து உத்தரவிட்டார்

வவுனியாவில் நாவலர் குருபூசை

வவுனியா தமிழ்ச் சங்கமும் ஆதி விநாயகர் ஆலயமும் இணைந்து நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் குருபூசை இன்று ஆதி விநாயகர் ஆலய வசந்த மண்டபத்தில் மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது. தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நாவலர் திருவுருவ வழிபாட்டினை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஜெ.மயூரக் குருக்கள் நிகழ்த்த திருமுறை ஓதப்படும்.

நேற்றும் 26 கொவிட் உயிரிழப்புக்கள் பதிவு

(எம்.மனோசித்ரா)

நாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட 26 மரணங்களுடன் மொத்த கொவிட் மரணங்களின் எண்ணிக்கை 14258 ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்று உறுதிப்படுத்தப்பட்ட மரணங்களில் 16 ஆண்களும் 10 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்களில் 22 பேர் 60 வயதுக்கு மேற்பட்டோராவர். மேலும் நேற்று மாலை வரை 488 கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். அதற்கமைய இது வரையில் கொவிட் தொற்றுறுதி செய்யப்பட்டோர் எண்ணிக்கை 560345 ஆக உயர்வடைந்துள்ளது.

இவ்வாறு இனங்காணப்பட்ட தொற்றாளர்களில் 528806 பேர் குணமடைந்துள்ளனர். 17795 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பைனான்ஸ் பிஎல்சி

2021 செப்டெம்பர் 30 இல் நிறைவுற்ற ஆறு மாதங்களுக்கான இடைக்கால நிதிக்கூற்றுக்கள்

நிதி நிலைமைக் கூற்று ('000)

உள்ளவாறு	30.09.2021 ரூ.'000	30.09.2020 ரூ.'000 * மீள்குறிப்பிடு	31.03.2021 ரூ.'000 கணக்காய்வு செய்யப்பட்டது
சொத்துக்கள்			
காசும் காசுக்குச் சமானாவைகளும்	1,398,578	1,425,633	2,090,509
இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட் நிதி சொத்துக்கள் (இநநிபெ)	156,422	57,938	160,639
மூலாதார நிதிச் சொத்துக்கள்	122,204	-	198,046
வங்கிவைப்புக்கான கடன்கள் மற்றும் வருமதிகள்	2,019,444	2,679,739	2,966,711
நிதி நிறுவனங்களுடனான வைப்புக்கள்	2,927,398	4,673,535	3,003,275
வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள்	74,080,553	74,778,363	75,058,331
ஏனைய முதலீட்டுப் பிணையங்கள்	3,998,159	2,081,971	2,669,959
முதலீட்டுச் சொத்து	20,198	20,198	20,198
ஆதனம், பொறிக்தொகுதி மற்றும் உபகரணம்	3,026,138	2,986,731	3,090,338
அருவச் சொத்துக்கள்	125,857	100,520	116,476
ஒருங்கிணைப்பிலான நன்மதிப்பு	244,180	244,180	244,180
பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள்	738,200	795,891	797,001
ஏனைய சொத்துக்கள்	3,826,676	4,616,067	3,915,306
மொத்தச் சொத்துகள்	**92,684,007**	**94,460,766**	**94,330,969**
பொறுப்புக்கள்			
மூலாதார நிதிசார் பொறுப்புக்கள்	-	92,426	13,142
வாடிக்கையாளர்களின் வைப்புக்கள்	48,812,304	46,202,516	48,999,341
வழங்கப்பட்ட கடன் பிணையங்கள்	5,403,461	5,249,652	5,089,839
ஏனைய வட்டி தாங்கும் கடன் பெறுதல்கள்	19,296,248	25,736,321	21,719,986
குத்தகைப் பொறுப்புக்கள்	773,530	797,188	810,682
நடைமுறை வரிப் பொறுப்புக்கள்	845,475	635,684	1,220,992
ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள்	376,460	650,401	376,460
ஓய்வுக்கால நலன் கடப்பாடுகள்	71,098	62,932	9,098
ஏனைய பொறுப்புக்கள்	2,038,754	2,608,131	2,039,209
மொத்தப் பொறுப்புக்கள்	**77,617,330**	**82,035,251**	**80,278,749**
உரித்துவம்			
கூறப்பட்ட மூலதனம்	2,350,363	2,350,363	2,350,363
ஒதுக்கங்கள்	2,646,838	2,279,650	2,495,581
நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்கள்	10,069,476	7,795,502	9,206,276
மொத்த உரித்துவம்	**15,066,677**	**12,425,515**	**14,052,220**
		-	-
மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் உரித்துவம்	**92,684,007**	**94,460,766**	**94,330,969**
பங்கு ஒன்றிற்கான தேறிய சொத்துக்களின் பெறுமதி (ரூ.)	**215.88**	**174.54**	**201.34**

ஒழுங்குபடுத்தல்கள் தேவைப்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட செயற்திறன் வெளிப்படுத்துகை

	30.09.2021 உள்ளவாறு	31.03.2021 உள்ளவாறு
குறிப்பான்		
சொத்தின் தரம் (ரூ. 000)		
மொத்த – மறைமுகக் கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள்	5,734,713	5,412,289
மொத்த – மறைமுகக் கடன் மற்றும் முற்கொடுப்பனவு விகிதம்	7.47%	7.00%
தேறிய மறைமுகக் கடன் மற்றும் முற்கொடுப்பனவு விகிதம்	1.80%	2.21%
தேறிய மறைமுகக் கடன்கள் மற்றும் மைய மூலதனத்துக்கான விகிதம்	11.25%	15.35%
மாளியப் பாதுகாப்பு விகிதம்	77.33%	69.12%
நிரவத்தன்மை (ரூ. 000)		
தேவையான ஆகக்குறைந்த நிரவச் சொத்துக்களின் தொகை	5,966,728	3,201,119
கிடைக்கப்பெற்ற நிரவச் சொத்துக்களின் தொகை	7,820,182	7,361,866
தேவையான குறைந்தபட்ச அரசாங்கப் பிணையங்கள் தொகை	4,049,192	2,831,945
கிடைக்கப்பெற்ற அரசாங்கப் பிணையங்கள் தொகை	4,609,675	3,232,224
கிடைக்கப்பெற்ற நிரவச் சொத்துக்கள் மற்றும் தேவையான நிரவச் சொத்துகளுக்கான விகிதம் (குறைந்தபட்சம் 100%)	131.06%	229.98%
வெளியக நிதிக்கான நிரவச் சொத்துக்கள்*	10.64%	9.71%
மூலதனப் போதுமை		
மைய மூலதனம் (அடுக்கு 1 மூலதனம்)	11,556,788	10,888,267
மொத்த மூலதன அடித்தளம்	14,267,929	13,800,144
இடர்நேர்கை நிறையிப்பட்ட சொத்துக்களுக்கு மைய மூலதன விகிதம் (குறைந்தபட்சம் 7%)**	12.88%	12.10%
இடர்நேர்கை நிறையிப்பட்ட சொத்துக்களுக்கு மொத்த மூலதன விகிதம் (குறைந்தபட்சம் 11%)**	15.90%	15.34%
மொத்த வைப்புப் பொறுப்புக்களுக்கு மூலதன நிதியங்கள் விகிதம் (குறைந்தபட்சம் 10%)**	29.23%	28.16%
இலாபகரத்தன்மை		
தேறிய வட்டி விளிம்பு (ஆண்டுக்கான கணிப்பு)	8.28%	8.10%
சராசரி சொத்துக்களிலான பலன் - வரிக்கு பிந்தியது (ஆண்டுக்கான கணிப்பு)	2.97%	2.73%
சராசரி உரித்துவத்துக்கான பலன் - வரிக்கு பிந்தியது (ஆண்டுக்கான கணிப்பு)	19.08%	19.99%
வருமானத்துக்கான செலவு விகிதம்	41.54%	41.00%
குறிப்பாணை தகவல்கள்		
வெளியக கடன் தரப்படுத்தல்	BBB+	BBB+
ஊழியர்களின் எண்ணிக்கை	1,813	1,842
கிளைகளின் எண்ணிக்கை	70	70
சேவை நிலையங்களின் எண்ணிக்கை	1	1

*வைப்புகள் மற்றும் கடன்கள் உள்ளடங்கிய வெளியக நிதியங்கள்
**நடைமுறை ஆண்டின் கணக்காய்வு செய்யப்படாத இலாபத்தை உள்ளடக்கியது

இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று ('000)

செப்டெம்பர் 30 இல் நிறைவடைந்த ஆறு மாதங்களுக்கானது

	2021 ரூ.'000	2020 ரூ.'000 *மீள்கூறப்பட்டது	மாற்றம் %
வருவாய்	**8,144,257**	**8,300,680**	**-2%**
வட்டி வருமானம்	6,897,520	7,406,355	-7%
கழி: வட்டி செலவினங்கள்	3,025,174	4,002,400	-24%
தேறிய வட்டி வருமானம்	**3,872,346**	**3,403,955**	**14%**
கட்டணம் மற்றும் தரகு வருமானம்	138,746	261,091	-47%
ஏனைய செயற்பாட்டு வருமானம்	1,107,991	633,234	75%
மொத்த செயற்பாட்டு வருமானம்	**5,119,083**	**4,298,280**	**19%**
கழி: நிதி சொத்துக்களில் வலுக்குன்றல் கட்டணங்கள் மற்றும் ஏனைய கடன் நட்டங்கள்	712,711	762,788	-7%
தேறிய செயற்பாட்டு வருமானம்	**4,406,372**	**3,535,492**	**25%**
கழி: செயற்பாட்டு வருமானங்கள்			
ஆளணிக் கொடுப்பனவுகள்	888,921	695,058	28%
வாடகை, உபகரணம் மற்றும் ஸ்தாபனச் செலவுகள்	1,012,701	914,894	11%
ஏனையச் செலவுகள்	224,821	244,040	-8%
மொத்த செயற்பாட்டுச் செலவுகள்	**2,126,443**	**1,853,992**	**15%**
நிதிச் சேவைகளில் வரிக்கு முந்திய செயற்பாட்டு இலாபம்	2,279,929	1,681,500	36%
கழி: நிதிச் சேவைகளுக்கான வரி	355,929	269,317	32%
வரிக்கு முந்திய இலாபம்	1,924,000	1,412,183	36%
கழி: வருமான வரி செலவினம்	535,000	413,169	29%
குறித்த காலப்பகுதிக்கான இலாபம்	**1,389,000**	**999,014**	**39%**
ஏனைய விரிவான வருமானம்			
இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தப்படாத உருப்படிகள்			
மீள் மதிப்பீடு தொடர்பான பின் செலுத்தும் வரியிலான மாற்றம்	161,596	-	100%
ஏ.வி.வதிபெ இல் உரித்துவ முதலீடுகள் - நியாயப் பெறுமதியிலான தேறிய மாற்றம்	(33,904)	(33,935)	-100%
நிரணயிக்கப்பட்ட நலன் திட்டங்களிலான தேறிய காப்பீட்டுக் கணிப்பு இலாபம் / (நட்டம்)	(12,000)	(12,000)	0%
மொத்த ஏனைய விரிவான வருமானம்	115,692	(45,935)	-352%
குறித்த காலப்பகுதிக்கான மொத்த விரிவான வருமானம்	**1,504,692**	**953,079**	**58%**
பங்கொன்றிற்கான உழைப்பு			
பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்புகள் (ரூ.)	19.90	14.31	
பங்கொன்றிற்கான நிரந்த உழைப்புகள் (ரூ.)**	19.65	14.13	

அடைப்புக்குள் காணப்படுபவை கழிக்கப்படுதலை குறிக்கின்றன.

*2020 ஜுன் 30 இல் நிறைவுற்ற காலப்பகுதிக்கான ஒப்பீட்டுத் தகவல்கள் கூட்டிணைத்தலின் விளைவுகளை வெளிப்படுத்துவதற்காக மீள் குறிப்பிடப்பட்டுள்ளன.
**பங்கொன்றிற்கான நிரந்த உழைப்புகள் ஊழியர் பங்குத் தெரிவு திட்டத்தின் விளைவைக் கருத்திற்கொண்டே கணிக்கப்பட்டுள்ளது.

சான்றுரைத்தல்

சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பைனான்ஸ் பிஎல்சி இனது பிரதம நிறைவேற்று அதிகாரி, பிரதம நிதியியல் அதிகாரி மற்றும் உடன்பாட்டு அதிகாரி ஆகிய இங்கு கையொப்பமிட்டுள்ள நாம் இணைந்து இத்தால் சான்றளிக்கின்றோம்:

அ) மேலுள்ள நிதி அறிக்கைகள் 2007 இலக்கம் 07 ஆல் குறிப்பிடப்படும் கம்பனிகள் சட்டம் மற்றும் 2011 இலக்கம் 42 ஆல் குறிப்பிடப்படும் நிதி வணிகச் சட்டங்களின் தேவைப்பாடுகளுக்கு இணக்கமாக தயாரிக்கப்பட்டுள்ளன.

ஆ) இவ் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்டவை என உறுதிப்படுத்தப்பட்டாலன்றி அனுமதியளிக்கப்பட்ட நிதி நிறுவனத்தின் கணக்காய்வு செய்யப்படாத நிதி அறிக்கைகளிலிருந்து பெறப்பட்டுள்ளன.

சி.எம். நாணயக்கார
முகாமைப் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
2021 ஒக்டோபர் 20 – கொழும்பு

தமித் தென்னக்கோன்
பணிப்பாளர் / பிரதம நிதியியல் அதிகாரி

நரேஷன் அமரசிங்க
உடன்பாட்டு அதிகாரி

CDB
உங்கள் நண்பன்

கம்பனி பதிவிலக்கம்: PB 232 PQ.
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 1995 செப்டெம்பர் 07
2011ம் ஆண்டு 42ம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கி நாணயச்சபையினால் அனுமதி பெற்ற நிதி நிறுவனம்.
துரித அழைப்பு 0117 388 388

இன்றைய சிந்தனை

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. (திருக்குறள் 45)

ஒருவனுடைய இல்வாழ்க்கை மனைவி மீது கொள்ளத் தகுந்த அன்பும் பிறருடன் பகுத்துண்ணலாகிய அறனும் கொண்டு விளங்குமாயின் அதுவே இல்வாழ்க்கையின் பண்பும் பயனுமாக அமையும்.

VIRAKESARI
வீரகேசரி
2021 நவம்பர் 27 ஆம் திகதி சனிக்கிழமை
எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) பிரைவேட் லிமிட்டெட்,
267, ரஜ மாவத்தை, ஏக்கல, ஜா-எல. Tel. : 011 7322750, 011 7322751, 011 7322754, 011 7322755
Fax : 011 7322752 Web Site : www.virakesari.lk
E-mail : editordaily@virakesari.lk, kesari25@virakesari.lk
News On-line : onlinenews@virakesari.lk Advertisment : advertising@virakesari.lk
Circulation : circulation@virakesari.lk

கானல் நீராகும் பொறுப்புக்கூறல் குறித்த செயற்பாடுகள்

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பாக பொறுப்புக்கூறல், விசாரணைப்பொறிமுறை முன்னெடுக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று சர்வதேச மட்டத்திலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவை மட்டத்திலும் வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில் அதுதொடர்பாக இன்னும் ஒரு தெளிவற்ற நிலையே இலங்கையில் நீடித்து வருகின்றது. அரசாங்கம் உள்ளக ரீதியில் தான் இந்த பொறுப்புக்கூறல் பொறிமுறையை முன்னெடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதாக அறிவித்திருக்கின்றது. அதற்கான உத்தரவாதத்தை ஜெனிவா மனித உரிமை பேரவையில் அரசாங்கம் வழங்கி இருக்கின்றது. அதற்காக ஒரு சில நடவடிக்கைகளை இலங்கையில் மேற்கொண்டிருக்கிறது. அதாவது ஜனாதிபதி ஆணைக்குழு, காணாமல் போனோர் அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம் மற்றும் நல்லிணக்கத்தை ஒருங்கிணைப்பதற்கான செயலகம் என்பவற்றை இயக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

அதேபோன்று பயங்கரவாத தடைச்சட்டத்தையும் திருத்துவதாகவும் தெரிவித்திருக்கின்றது. ஆனால் சர்வதேச சமூகத்தை பொறுத்தவரையிலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையை பொறுத்தவரையிலும் இது தொடர்பாக முழுமையான நம்பிக்கை வைக்கக் நிலையை நீடித்து வருகின்றது. அரசாங்கமானது இந்த உள்ளக பொறிமுறை விடயத்தில் ஒரு நம்பிக்கைக்குரிய நம்பகரமான சுயாதீனமான செயற்பாட்டை வெளிக்காட்ட வேண்டும் என்றும் சர்வதேசம் வலியுறுத்தி வருகின்றது. எனவே நம்பகரமான சுதந்திரமான ரீதியில் இந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் சர்வதேச பங்களிப்புடன் கூடிய விசாரணை முன்னெடுக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது.

இலங்கையிலும் பாதிக்கபட்ட மக்களும் சர்வதேச பங்களிப்புடன் கூடிய ஒரு பொறுப்புக்கூறல் நல்லிணக்க வழிமுறை முன்னெடுக்கப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதை தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் இதில் ஒரு இணக்கப்பாடற்ற நிலைமை நீடித்து வருகின்றது. 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்து 12 வருடங்கள் கடந்துவிட்டபோதிலும் பதவியிலிருந்த அரசாங்கங்கள் இதுவரை இது தொடர்பாக ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கவில்லை. 2015 ஆம் ஆண்டில் இது தொடர்பாக ஒரு சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எனினும் பொறுப்புக்கூறல் பொறிமுறை விடயத்தில் நல்லாட்சி அரசாங்கம் திருப்தி அளிக்கக்கூடிய வகையில் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இந்த சூழலில் தற்போது கோட்டாபய ராஜபக் ஷ தலைமையிலான அரசு வர்த்தமானியை தவறாது தேடி தகவல் திரட்டும் இளைஞராக, அன்றைய நாட்களில் விளங்கினார். 1977 ஆம் ஆண்டு பேரினவாத வன்முறைகளால் விரட்டியடிக்கப்பட்டு, ஆத ரவற்றவர்களாக்கப்பட்ட மலையகத் தமிழ் மக்களை வடக்கிலும் கிழக்கிலும் பல பகுதி களிலும் மீளக் குடியமர்த்தி, அவர்கள் அமைய வருக்கும் புனர்வாழ்வளிக்கும் செயற்பாட்டில் காந்தியம் அமைப்புடன் இணைந்து செயற்பட் டவர்களுடனும், கிழக்கில் இயற்கை அனர்த் தத்தால் பேரழிவைச் சந்தித்த மட்டக்களப்புப் பிரதேசத்தில் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டி ருந்தவர்களுடனும் ஏற்பட்ட உறவுகள் அவரை தேசிய இன விடுதலைச் சிந்தனையுடன் செயற் பட வைத்தது.

சாந்தமான அவரது குணம், மிக எளிமை யான நடைமுறை, அயராத செயற்பாடு இர கசியங்களை பாதுகாப்பதில் அவர் காட்டிய உறுதி அனைத்துமே நாளடைவில் அவரைச் சுற்றியிருந்தவர்களின் மத்தியில் அவருக்கு பெரும் மதிப்பை ஏற்படுத்திக் கொடுத்திருந் தன. அக்காலத்தில் காந்தியம் அமைப்புடன் செருக்கமான உறவுகளைக் கொண்டிருந்த புளொட் அமைப்பின் தலைவர்களான உமாம கேஸ்வரன், சந்தியாபர் போன்றோருடன் வலு வான தொடர்புகளைக் கொண்டிருந்தார். தமிழ் மக்களது விடுதலைக்காக செயற்பட்ட அமைப் புகளும் அதன் உறுப்பினர்களும் தொடர்ச்சி யாக சந்தித்துவந்த செருக்கடிகளைப் போல அமரர் கு. சதானந்தம் செருக்கடிகளை சந்தித் திருந்தார். காந்தியம் அமைப்பு இலங்கை அர சினால் தடை செய்யப்பட்ட அமைப்பாக பிர கடனப்படுத்தப்பட்டு அதன் தலைவர்களான லவத்தியர் இராஜசுந்தரம், டேவிட் அய்யா ஆகியோர் உள்ளிட்ட பலர் கைது செய்யப் பட்ட வேளையில் தன்னை தலைமறைவு வாழ்க் கைக்கு மாற்றிக் கொண்டார். 1987இல் இந்திய, இலங்கை ஒப்பந்தத்தின் பின்பு விடு தலைப் போராட்டத்திற்கான மார்க்கங்கள் மாற்றமடைந்த தற்கமைய புளொட் அமைப்புக் தனது அரசியல் பிரிவை ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி எனும் பெயரில் அர சியல் கட்சியாக இலங்கைத் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்து கொண்ட சிறிது காலத்தின் பின்னர் அவ்வ மைப்பின் செயலாளராக நிய மிக்கப்பட்டிருந்தார்.

தனது கொள்கையிலும், நிதியுடன் தொடர் புடட் செயற்பாடுகளிலும் அவர் கொண்டி ருந்த பற்றுறுதியுடனான கேள்வியான செயற் பாடுகள் காரணமாக அவர் மீது அனைவரும் கொண்டிருந்த நம்பிக்கை ஒன்றே ஒரு கட் சியின் செயலாளர் பொறுப்பு அவரைத் தேடி வந் ததன் காரணமாகும். தனது இறுதி நாள் வரை சொந்த விருப்பு வெறுப்புகள் ஏதுமின்றி செயற் பட்ட அவரது பண்பு அமைப்புகளின் அனைத்து செயற்பாட்டாளர்களுக்கும் பக்பிளையாகும். தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளில் சமர சத்திற்கு இடமில்லாத உறுதியான கொள்கை, விடுதலலைய நோக்காகக் கொண்ட அமைப் புகளிடையேயான ஐக்கியம் என்பவற்றை தன்னைச் சுற்றியிருந்தவர்களிடம் தொடர்ந்து வலியுறுத்தி வந்த அவர், தனித் மனித வழிபாட் டுடனான பாசிசப் போக்கின் முடிவிடம் சரணா கதியே என்பதை விடுதலைப் பாராட்டத்தில் சகோதரப் படுகொலைகள் உச்சம் பெற்றி ருந்த எண்பதுகளின் நடுப்பகுதிக் காலம் தொடக்கம் வலியுறுத்த தவறவில்லை. விடு தலை உணர்வுக்கும் அப்பால் அவர் பலதுறைகளில் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். இடதுசாரிக் கொள்கையில் ஈடுபாடு கொண்டிருந்த அவர் கலைகளை இரசிப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். கணவி மூலமான செயற்பா டுகள் ஆரம்பமான காலங்களி லேயே தேர்ந்த பக்க வடிவமைப் பாளராக திகழ்ந்தார். யோகா கலையை கற்றுணர்ந்திருந்த அவர் தான் அறிந்தவை ஏனை யோருக்கு சொல்லிக் கொடுப் பவராக விளங்கினார்.

இளவயது முதல் விவசாயத்தில் நாட்டமுள் ளவராக விளங்கிய அவர் உவர்த்தன்மை கொண்ட வல்லைவெளிக்கருகில் வெற்றிகர மாக பயிர்ச்செய்கையில் ஈடுபட் டுவருகை இருந்தார். வடக்கு மாகாணசபையின் விவசாய அமைச்சில் குறிப்பிட்ட காலம் விவசாய அமைச் சரின் இணைப்புச் செயலாளராக செயற்பட்ட அவர் பொருத்தமான, பயனுள்ள ஆலோசனை களை வழங்கும் ஒருவராகவும் இருந்தார். தமிழ் மக்களின் விடுதலைப் பயண வரலாற்றை வெளிக் கொணரும் ஆவணங்களின் பாது காப்பில் எப்போதும் அதிக சிரத்தை எடுத்துக் கொண்ட அவர், ஞரும்பசிட் கனகரட்ணம் தம்பதிகளால் நீண்டகாலமாக பாதுகாக்கப் பட்டு வந்த ஆவணங்களை தொடர்ந்தும் பாது காக்க முடியாத ஒரு தருணத்தில் அவர்களது பணி தொடர்ந்து சிறப்பாக முன்னெடுத்துச் செல்ல அனைத்து வழிகளிலும் உதவி புரிந்தி ருந்தார்.

தனது பொது வாழ்வில் பல அமைப்புகளின் வளர்ச்சிக்கு ஆதாரமாக செயற்பட்ட அவர் தனக்கென எந்த ஆதாரத்தையும் தேட விரும் பாத உன்னதமானவர். இடப்பெயர்வுகள், தலைமறைவு வாழ்க்கை என்று காலங்கள் நகர்ந்தபோதும் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைகளை செவ்வனே நிறைவேற்றியவர்.

புனர்வாழ்வு அமைப்பின் செயற்பாட்டாள ராக, ஆயுதப் போராட்ட அமைப்பின் உறுப் பினராக, அரசியல் கட்சியின் செயலாளராக, மூன்று வெவ்வேறு வடிவங்களில், வெவ்வேறு காலகட்டங்களில் தொடர்ச்சியாக செயற்பட்டு எம்மை விட்டுப் பிரிந்துள்ள அவர் வாழ்க்கை வரலாற்றைப் புரிந்துகொள்ளும் ஒருவரால், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் தொடர்ச்சியான பரிணாமங்களையும் புரிந்து கொள்ளமுடியும்.

கடந்த சில காலமாகவே தனது முதுமை மற் றும் அதற்குரிய நோய்க் குணங்களை யதார்த் தமாகவே உணர்ந்திருந்த அவர், தனது வசமு ருந்த பொறுப்புகளை அடுத்த தலை முறையி னரிடம் கையளிக்க முடிவெடுத்திருந்ததோடு அதற்கான நாளையும் எண்ணிக் காத்திருந்தார். இருந்தும், அவரது உயர்வான எண்ணம் ஈடே றாமல் போனமை வருத்தத்திற்குரியது. தனி மனித ஒழுக்கம், நிலவரவர் பணி செய்தல், பதவி என அனைத்திலும் மிகச் சிறந்த உதார ணமாய் விளங்கிய அமரர் கு. சதானந்தம் போல வாழ்வதன் மூலம் மட்டுமே அவருக்கான அஞ்சலிகளை அர்த்தமாக்க முடியும்.

– குரு

பொன்மொழி

அறியாமையுடன் அடக்கமில்லாமல் நூறு வருடங்கள் வாழ்வதைவிட ஞானத்தோடு தியானம் புரிபவன் ஒரு நாள் வாழ்வது மேலானது. – புத்தர்

ஆறுமுக நாவலர் பெருமானின் இறுதி நிமிடங்கள்

இரண்டு நாட்களாக திருமுறைகளைப் பாடுவதோடு மட்டும் நேரத்தைச் செலவு செய்தார். செவ்வாய்க்கிழமை இரவு நோயினால் பாதிக்கப்பட்டவர் புதன்கிழமை எழுந்து நீராட முடியாதளவு போய்விட்டது. வேதாரணியத்து சைவ சிவாச்சாரியாரை அழைத்து நாவலர் நித்திய பூஜை செய்யும் ஆதிமார்த்த சிவலிங்கமூர்த்திக்கு பூஜைகள் நடைபெற்றன. பூக்களைக் கையிலெடுத்து ஒவ்வொன்றாகப் போட்டு தன்பாட்டிற்கு கும்பிட்ட வண்ணமிருந்தார் நாவலர்.

தன்னைச் சூழ இருந்தவர்களைப் பார்த்து தொடர்ந்து திருமுறைகளைப் பாடுங்கள் என்று கட்டளையிட்டார். எவரும் நாவலர் இறக்கப்போகின்றார் என்று கருதவில்லை. வெள்ளிக்கிழமை சிதம்பரம், காசி, மதுரை, திருச்செந்தூர் முதலிய புண்ணியத் தலங்களின் விபூதியை எடுத்து அணிந்தார். தான் அணியும் உருத்திராட்ச மாலைகளையும் அணிந்து கொண்டு தன் பூஜை அறையில் இருந்த கங்கைத் தீர்த்தத்தை பருகினார். சயனிக்கும் இடத்தில் தலையில் கைகளைக் கூப்பிய வண்ணமாகக் கண்களை மூடித் தியானஞ்செய்தார்.

கார்த்திகை மக நட்சத்திரத்தில் இரவு 10 மணியளவில் அன்னாரது உயிர் பிரிந்தது. இவர் உயிர் பிரிவதற்கு கொஞ்ச நேரத்திற்கு முன் இவரை அவதானித்த மாணாக்கர்கள், சுற்றத்தார்கள் இவருக்குச் சமீபமாகச் சென்று இவரிடம் சில விடயங்களைக் கேட்க முற்பட்டனர். வித்தியா சாலை விடயமாக என்ன செய்ய வேண்டும் என்று கேட்டனர். 'கைலாசபிள்ளையைக் கூப்பிடுங்கள்' இதுதான் அவரது கடைசி வார்த்தை. அதன்பின் அவர் பேசவே யில்லை. என்ன சொல்ல நினைத்தார் என்று இன்றுவரை தெரியவில்லை.

நாவலர் பெருமான் 56 வயது பதினொரு மாதம் 16 ஆம் நாளில் இப்பூவுலக வாழ்வை நிறைவு செய்தார். வெள்ளிக்கிழமை இரவு சிவபதமடைந்த நாவலருக்கு சனிக்கிழமை கைலாசபிள்ளையார் கோயிலுக்கு சமீப மாக உள்ள அவரது வீட்டில் அந்திமக் கிரியைகள் நடத்தப்பட்டன. பெருந்திர ளான மக்கள் கூடி நாவலர் பெருமானுக்கு கண்ணீர்க் காணிக்கை செலுத்தினர். வரணி, கரணவாய் ஆதீனத்தார் முன்னிலையில் வேதாரணியத்து அப்புக் குருக்கள் எனப் படும் நமச்சிவாய தேசிகரால் நிர்வாண அந் தியேட்டி செய்யப்பட்டு அவரது வீட்டிலும் வண்ணார்பண்ணை கோம்பயன் மணற் சுடலையிலும் தேசிகரால் கிரியைகள் நிறை வேற்றப்பட்டன.

நாவலரது இறுதி ஊர்வலத்திற்காக பூக் களினால் ஒரு பூந்தேர் செய்யப்பட்டு பூத வுடல் வைக்கப்பட்டு அதற்குப் பின்னால் நூற்றுக்கணக்கான அன்பர்கள் நாவலரது பிரிவுத்துயர் தாங்க முடியாது அங்கப் பிர தட்சணமாக சுமார் 3 1/2 மைல் தூரம் சென்று மயானத்தை அடைந்தனர் என்பது வரலாற்றில் மறக்கமுடியாத உருக்கமான ஒரு நிகழ்வு. கோம்பயன் மயானத்தில் இராத்திரிவேளை சந்தனக்கட்டைகள் அடு க்கி ஆயிரக்கணக்கான மக்கள் கதறியழ நாவலரின் பூதவுடல் அக்கினியோடு சங்க மமாகியது.

'நானுயிரோடிருக்கும் போதே உங்களுக் காக ஒரு சைவப் பிரசாரகரைத் தேடிக் கொள்ளுங்கள் உங்களிடத்துக் கைம்மாறு பெறுதலை சிறிதும் எண்ணாது 32 வரு டகாலம் சைவசமய உண்மைகளைப் போதித்து வந்தேன்' இவை நாவலரின் கடைசிப் பிரசங்க வாசகங்கள். நாவலரைப் போல் நமக்கு யாருண்டு.

நாவலரின் வாழ்வு உண்மையானது. நாவ லர் பெருமானுக்குப் பல நினைவுச்சின் னங்கள் இன்றுவரை நிறுவப்பட்டு வரு கின்றன. அவர் வாழுங்காலத்தில் அவருக்குச் சிலர் செய்த இடையூறுகளை நினைந்து நாம் வெட்கமடைய வேண்டும். அவரால் எம் சந்ததி பெற்ற பேறுகள் ஏராளம். ஈழ நாட்டில் சைவமும் தமிழும் இன்று நிலை பெற்று உள்ளதென்றால். அதற்கு இப் புண்ணியவானே முக்கிய காரணம் என் பதை உணரவேண்டும். அப்பெருமகனின் சரித்திரத்தை, சிறப்புக்களை சாதனைகளை அனைவரும் முழுமையாக படிக்க வேண் டும். சைவப் பாடசாலைகள், சைவ நிறுவ னங்கள், அனைத்திலும் நாவலர் நினைவுச் சின்னங்கள் நிறுவப்பட்டு நாவலர்பெரு மானை எம் சந்தி மீள நினைப்பதற்கு நாம் வழி செய்யவேண்டும்.

(சைவத்தமிழர்களின் கலங்கரை விளக்கம் எனும் நூலிலிருந்து.....)

– வி.ரி.சகாதேவராஜா

தமிழின விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட 'ஆனந்தி'

அரசியல் என்றால் என்னவென்ற கேள் விக்கு, தான் சார்ந்த சமூகத்தின் தேவைகளை பூர்த்தி செய்வது என்பதே பொருத்தமான பதி லாக இருக்கும். அவ்வாறான சமூகப் பணியை, அரசியலை, பலர் அதுவே தமது வாழ்க்கை என்கிறார்கள். குறிப்பிட்ட சிலர் மட்டுமே சமூகப் பணியை, அரசியலை, வாழ்வின் கடமை என்று எண்ணிச் செயற்படுகின்றனர்.

அரசியலுக்கான எமது வாழ்க்கை என்று கூறிக் கொள்பவர்களாலல்தான் அரசியல் இன்று சாக்க டையாக்கப்பட்டுள்ளது. இயல்தர காலத்திலும் கூட அரசியலைக் கைவிட, கைமாற்ற துணி கிறார்கள் இல்லை. தமது அந்திம காலத்தை எண்ணி அச்சப்படுகிறார்கள். அரசியல் வரப்பி ரசாதங்களை இழக்க மனமில்றியுள்ளனர்.

தனது கிராமத்திற்கான, பிரதேசத்திற்கான, இனத்திற்கான சமூகப் பணியை கடமையாக எண்ணி, மதித்து நிறைவேற்றிய அற்புதமான மனிதரே கொம்மாந்துறையைப் பூர்வீகமாகவும் கலுவஞ் கிராமத்தை சொந்த இடமாகவும் கொண்ட அமரர் சுப்பிரமணியம் சதாளந்தம் (ஆனந்தி) ஆவார்.

எழுபத்தாறு வயதில் இயற்கை எய்தும் வரையிலும், அன்றாட வாழ்வியலில் தமிழ் மக்கள் சந்தித்த நெருக்கடிகளில் இருந்து மீண்டெழுந்த அனைத்து சவாலுக்கும் ஈடுகொடுக்கும் இணைந்து பயணித்த இனப்பற்றாளர் அவர் என்றால் மிகையாகாது. இளவயதில் தன்னார் வத்துடன் தனது கிராமத்தினதும், கல்வி கற்ற பாடசாலையினதும் முன்னேற்றத்தில் அதீத அக்கறையுடன் செயற்பட்ட அவர், அரச கட்ட மைப்பின் ஊடாக பெற்றுவிடக்கூடிய நன்மை களை பெறுவதில் ஆர்வங்கொள்ள தன்னைச் சுற்றியிருந்த அனைவரையும், குறிப்பாக, சக வயது இளைஞர்களை ஊக்கப்படுத்தியுமிருக்க இருந்தார். கிராமத்தின் தபாலகத்துக்கு வரும்

தனது பொது வாழ்வில் பல அமைப்புகளின் வளர்ச்சிக்கு ஆதாரமாக செயற்பட்ட அவர் தனக்கென எந்த ஆதாரத்தையும் தேட விரும் பாத உன்னதமானவர். இடப்பெயர்வுகள், தலைமறைவு வாழ்க்கை என்று காலங்கள் நகர்ந்தபோதும் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைகளை செவ்வனே நிறைவேற்றியவர்.

புனர்வாழ்வு அமைப்பின் செயற்பாட்டாள ராக, ஆயுதப் போராட்ட அமைப்பின் உறுப் பினராக, அரசியல் கட்சியின் செயலாளராக, மூன்று வெவ்வேறு வடிவங்களில், வெவ்வேறு காலகட்டங்களில் தொடர்ச்சியாக செயற்பட்டு எம்மை விட்டுப் பிரிந்துள்ள அவர் வாழ்க்கை வரலாற்றைப் புரிந்துகொள்ளும் ஒருவரால், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் தொடர்ச்சியான பரிணாமங்களையும் புரிந்து கொள்ளமுடியும்.

கடந்த சில காலமாகவே தனது முதுமை மற் றும் அதற்குரிய நோய்க் குணங்களை யதார்த் தமாகவே உணர்ந்திருந்த அவர், தனது வசமு ருந்த பொறுப்புகளை அடுத்த தலை முறையி னரிடம் கையளிக்க முடிவெடுத்திருந்ததோடு அதற்கான நாளையும் எண்ணிக் காத்திருந்தார். இருந்தும், அவரது உயர்வான எண்ணம் ஈடே றாமல் போனமை வருத்தத்திற்குரியது. தனி மனித ஒழுக்கம், நிலவரவர் பணி செய்தல், பதவி என அனைத்திலும் மிகச் சிறந்த உதார ணமாய் விளங்கிய அமரர் கு. சதானந்தம் போல வாழ்வதன் மூலம் மட்டுமே அவருக்கான அஞ்சலிகளை அர்த்தமாக்க முடியும்.

– குரு

மற்றுமொரு முடக்கத்துக்கு இடமளித்துவிட வேண்டாம்

கொரோனா வைரஸ் தொற்று பரவல் விடயத்தில் நாடானது மற்றும் ஒரு அபாய நிலையை எதிர்கொள்வதற்கான சூழல் உருவாகி வருவதாகவும் எனவே சகலரும் மிகவும் எச்சரிக்கையுடனும் பொறுப்புடனும் நடந்து கொள்ள வேண்டிய அவசியம் இருப்பதாகவும் தொடர்ச்சியாக சுகாதார தரப்பினரால் கட்டுக் காட்டப்பட்டு வருகிறது. நாட்டில் கொவிட் 19 வைரஸ் தொற்று பரவலானது 15–20 வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும், நிலைமைகள் மோசமடையும் பட்சத்தில் இறுக்கமான தீர்மானங்களை எடுக்க நேரிடும் எனவும் சுகாதார தரப்பு மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது. தற்போதைய புதிய வைரஸ் பிறழ்வு காரணமாக சிறுவர்களே அதிகமாக பாதிக்கப்பட்டு வருவதாகவும் சுகாதார தரப்பினர் கட்டிக்காட்டியுள்ளனர்.

இது குறித்து சுகாதார நிபுணர்கள் எவ்வாறான விடயங்களை முன்வைக்கின்றனர் என்பது குறித்து கவனம் செலுத்தவேண்டும். அதாவது நாட்டில் மீண்டும் வேகமாக வைரஸ் பரவ ஆரம்பித்துள்ளது. நாடு திறக்கப்பட்டதன் பின்னர் பொதுமக்களின் செயற்பாடுகள் பொறுப்பற்ற விதத்தில் அமைந்துள்ளமையே இதற்கு காரணமாகும். அதேபோல் தடுப்பூசி ஏற்றிவிட்டோம் என்ற எண்ணப்பாட்டில் மக்கள் சுகாதார வழிமுறைகளை பின்பற்ற தவறுகின்றமை அதிகமாக அவதானிக்கப்பட்டுவரும் ஒரு காரணியாகும். தடுப்பூசி ஏற்றினாலும், எத்தனை தடவை ஏற்றிக்கொண்டாலும் அவற்றை விடவும் வைரஸின் வீரியம் அதிகமானது என்பதையே நாம் ஆரம்பத்திலிருந்து தெரிவித்துக்கொண்டுள்ளோம். நாம் தடுப்பூசி ஏற்றிவிட்டோம் என்பதற்காக வைரஸ் தொற்று பரவாமல் இருக்கப்போவதில்லை. எமது செயற்பாடுகள் காரணமாக வைரஸ் காவிச்செல்லப்பட்டு ஏனையோருக்கு பரவும் சாத்தியப்பாடுகள் அதிகமாகும். எனவே பொதுமக்கள் மிகக் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இப்போது வைரஸின் பரவல் வேகம் அதிகரித்துள்ளது என்று சுகாதார பணிப்பாளர் அசேல குணவர்த்தன கூறியிருக்கிறார்.

தற்போதைய நிலை

21 மில்லியன் சனத்தொகை கொண்ட இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இதுவரை 14 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கின்றனர். 560000 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர். தொடர்ந்தும் 20 என்ற வகையில் மரணங்கள் பதிவாகிக் கொண்டிருக்கின்றன. தொற்றாளர்களின் எண்ணிக்கையும் தற்போது 700 ஐ கடந்து சில தினங்களாக பதிவாகிக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. ஆரம்பத்தில் ஆகஸ்ட் மாதமளவில் 4 ஆயிரம் தொற்றாளர்கள் என்ற வகையில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து அதன் பின்னர் குறைவடைந்து. குறைந்தது 500 தொற்றாளர்கள் என்ற நிலைக்குக் கூட கடந்த வாரங்களில் நிலைமை வந்தது. ஆனால் மீண்டும் தற்போது தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதை காண முடிகிறது. இந்த நிலையில் மீண்டும் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துக் கொண்டு வருவதை எம்மால் அவதானிக்க முடிகிறது. இவ்வாறு சிறிய அளவில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டிருப்பதை யாரும் விளையாட்டாக கருதிவிடக் கூடாது. இது ஒரு அபாய நிலைமையின் சமிக்ஞையாகக்கூட இருக்கலாம். அதனால் மிகவும் எச்சரிக்கையுடன் சகலரும் நடந்துகொள்ள வேண்டிய ஒரு கடப்பாடு இருக்கின்றது.

மிக முக்கியமாக அண்மையில் டெல்டா வைரஸின் ஒரு புதிய திரிபு இலங்கையில் அடையாளம் காணப்பட்டிருந்தது. அது எவ்வாறு தற்போது நாட்டுக்குள் மக்கள் மத்தியில் பரவியிருக்கின்றது என்பது தெரியாது. ஆனால் ஒரு சில இடங்களில் அந்த திரிபு கண்டுபிடிக்கப்பட்டது. அதன் தீவிரமான நிலைமை எவ்வாறிருக்கும் என்பதை எதிர்வுகூற காலங்களில் கூற முடியும். எனவே ஒரு ஆபத்தான திரிபு கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்ற சூழலில் மக்கள் மேலும் கவனமாகவும் எச்சரிக்கையுடனும் தமது அன்றாட செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். முக்கியமாக சுகாதார அறிவுறுத்தல்களை, நடைமுறைகளை, வழிகாட்டல்களை, கட்டுப்பாடுகளை, ஆலோசனைகளை எக்காரணம் கொண்டும் புறந்தள்ளக் கூடாது முதலில் தமது பாதுகாப்பு தம்மிடம் இருக்கின்றது என்பதை மனதில் கொண்டு செயல்பட வேண்டிய ஒரு கட்டாயம் இருக்கின்றது. அதனை யாரும் மறந்துவிடக்கூடாது.

பாடசாலைகள் ஆரம்பம்

முக்கியமாக தொற்றாளர்களின் அதிகரிப்பு தொடர்பாக தொடர்ச்சியாக சுகாதார தரப்பினர் எச்சரிக்கைகளை விடுத்து வருகின்றனர். தற்போதைய சூழலில் சிறுவர்களுக்கு இந்த தொற்று பரவும் வேகம் அதிகமாக காணப்படுவதாகவும் மருத்துவ நிபுணர்கள் கூட்டிக் காட்டுவதை காண முடிகின்றது. எனவே சிறுவர்கள் விடயத்தில் பெற்றோரும் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். சிறுவர்களை சுகாதார ரீதியில் பாதுகாப்புடன் வைத்துக் கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான கடமை பெற்றோருக்கு இருக்கின்றது அந்த கடமையை பெற்றோர் புறக்கணித்து விடாமல் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். தற்போது பாடசாலைகள் முழுமையாக ஆரம்பித்திருக்கின்றன. பாடசாலைகளுக்கு மாணவர்கள் மிகவும் ஆர்வத்துடன் விருப்பத்துடன் செல்கின்றனர். அங்கே யாருக்காவது தொற்றிருப்பின் அது தொடர்பாக மிகவும் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். இந்த விடயம் தொடர்பாக கல்வி அமைச்சானது பாடசாலைகளுக்கு தேவையான ஆலோசனைகளையும் சுகாதார ரீதியான அறிவுறுத்தல்களையும் விடுத்திருக்கின்றது.

அவற்றை சரியான முறையில் கடைப்பிடித்து சகலரும் செயற்பட வேண்டிய ஒரு முக்கிய தேவை காணப்படுகின்றது. அதில் யாரும் விட்டுக்கொடுப்புடன் செயற்படக்கூடாது. சகலரும் இந்த விடயத்தில் மிகவும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், அதிபர்கள் என சகலருக்கும் இந்த விடயத்தில் மிகப் பாரியதொரு பொறுப்பு காணப்படுகின்றது என்பதை மறந்துவிடக்கூடாது. ஒரு சில இடங்களில் சிறு வயதில் உள்ளவர்களுக்கு தொற்று ஏற்படுவதை காண முடிகின்றது. அவ்வாறான நிலைமைகள் ஆபத்தானதாக அமைந்துவிடலாம். எனவே இந்த விடயத்தில் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். சுகாதார விதிமுறைகளை சரியான முறையில் பின்பற்றி செயற்படுவதன் ஊடாக அவற்றை கட்டுப்படுத்த முடியும். சுகாதார அணுகுமுறைகள் ஊடாக அதனை பரவாமல் தடுக்க முடியும் என்பது விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே இந்த அறிவுரைகளை கட்டுப்பாடுகளை பின்பற்றுவதற்கு யாரும் தயக்கம் காட்ட வேண்டிய அவசியம் இல்லை. அதனை பொறுப்புடன் சகலரும் பின்பற்றும் பட்சத்தில் நிச்சயமாக இதிலிருந்து வெளியே வர முடியும்.

சுகாதார தரப்பின் எச்சரிக்கைகள்

எனவே இந்த விடயத்தில் சகலரும் தமது பொறுப்பை உணர்ந்து செயற்படுவது மிக முக்கியமானதாக இருக்கின்றது. சுகாதாரத்துறையினர் தொடர்ச்சியாக எவ்வாறான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர் என்பது தொடர்பாக பார்க்க வேண்டியிருக்கின்றது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் பிரதம தொற்று நோயியல் நிபுணர் சுமித் கிளிசேகரமொழும், கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, அம்பாறை மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் தற்போது கொவிட் பரவல் அதிகரித்துள்ளமையின் காரணமாகவே இம்மாவட்டங்களில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு 3ஆம் கட்ட தடுப்புசி வழங்கல் துரிதமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மக்கள் ஒன்றுகூடல்கள் அதிகரித்துள்ளமையே கொவிட் தொற்று மீண்டும் அதிகரிக்கக் காரணமாகும். கிராம பகுதிகளிலேயே இவ்வாறு அதிகரிப்பு இனங்காணப்பட்டுள்ளது. இதே நிலைமை தொடர்ந்தால் மீண்டும் முடக்கத்திற்கே செல்ல வேண்டியேற்படும். நாட்டில் 16 வயதுக்கு மேற்பட்டோர் சனத்தொகை 16.2 மில்லியனாகும். இவர்களில் 15.8 மில்லியன் பேருக்கு முதற்கட்ட தடுப்புசி வழங்கப்பட்டுள்ளது. அதாவது 98 சதவீதமானோருக்கு முதற்கட்ட தடுப்புசியும், 84 சதவீதமானோருக்கு இரண்டாம் கட்ட தடுப்புசியும் வழங்கப்பட்டுள்ளது. தடுப்புசி வழங்கும் பணிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டாலும் சுகாதார விதிமுறைகள் முறையாகக்

ரொபட் அன்டனி

பின்பற்றாவிட்டால், தடுப்புசி மூலமான முழுப்பயனையும் பெற முடியாது. இனிவரும் காலங்களில் புதிய வைரஸ் பிறழ்வுகள் உருவாகினால் அவை ஆரம்பத்தில் இனங்காணப்பட்ட பிறழ்வுகளை விட அபாயம் மிக்கவையாகவே காணப்படும். வைரஸ் காரணமாக தொற்று நிலைமை ஏற்படும் போது புதிய பிறழ்வுகள் தோற்றம் பெறுவது இயல்பாகும். அவற்றை யாராலும் தவிர்க்க முடியாது. அவை மருத்துவ ரீதியாக அப்பாற்பட்டவையாகும். எனவே இவற்றிலிருந்து ஒவ்வொருவரும் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள சுகாதார விதிமுறைகளை பின்பற்ற வேண்டியது அத்தியாவசியமானதாகும் என்றும் அவர் கூட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சூழலில் 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் மூன்றாவது தடுப்புசியை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை அறிவித்திருக்கின்றது. அதனடிப்படையில் தற்போது அந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. முன்னுரிமை அடிப்படையில் பலவேறு தரப்பினர் தெரிவு செய்யப்பட்டு இவ்வாறு மூன்றாவது தடுப்புசி செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே இவங்கையானது 20 வயதுக்கு மேற்பட்ட அதிகமானோருக்கு இரண்டு தடுப்புசிகளை பெற்றுக் கொடுத்திருக்கிறது. இதனூடாக இலங்கையானது ஒரு மிக முக்கியமான அடைவு மட்டத்தை அடைந்திருப்பதாகவும் கட்டிக்காட்டப்படுகிறது.

மற்றுமொரு முடக்கம் வேண்டாம்

அதேவேளை மற்றுமொரு முடக்கத்துக்கு செல்லாத வகையில் சகலரும் செயற்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதியிலிருந்து இந்த நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று தாண்டமாடிக் கொண்டிருக்கின்றது. இதுவரை மூன்று அலைகள் நாட்டில் ஏற்பட்டிருக்கின்றன. முதலாவது அலை கமார் இரண்டு மாத காலத்தில் கட்டுப்படுத்தப்பட்டது. அப்போது கூட கமார் இரண்டு மாத காலம் நாடு முடக்கப்பட்டது. அதனால் பாரியதொரு பாதிப்பு நாட்டின் பொருளாதாரத்திற்கும் அன்றாடம் தொழில் செய்து தமது பொருளாதாரத்தை நடத்துகின்ற கமார் 45 லட்சம் மக்களுக்கும் ஏற்பட்டது. ஆரம்பத்தில் 5000 ரூபாய் நிவாரணம் மாதம் ஒன்றுக்கு குடும்பத்திற்கு வழங்கப்பட்டது. மீண்டும் கடந்த வருடம் ஒக்டோபர் மாதத்திலிருந்து இரண்டாவது தொற்று ஏற்பட்டது. அதனுடன் பாரிய பாதிப்புக்கள் நாட்டுக்கு ஏற்பட்டன. மக்களுக்கும் பாரிய நெருக்கடிகள் ஏற்பட்டன. அதன்பின்னர் இவ்வருடம் கடந்த மே மாதத்திலிருந்து மீண்டும் மூன்றாவது தொற்று அலை உருவாகியது. அதனூடாக மிகப்பெரியதொரு பாதிப்பு நாட்டின் பொருளாதாரத்துக்கும் மக்களுக்கும் ஏற்பட்டது.

மூன்றாவது முறையாகவும் நாடு கமார் 40 நாட்களுக்கு மேல் முற்றாக முடக்கப்பட்டது. மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து தடை மூன்று மாதங்களுக்கு மேல் நாட்டில் நடைமுறையில் இருந்தது. அதுடன் இரவு நேரத்தில் போக்குவரத்து கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. அந்தவகையில் ஒருவாறு இந்த முடக்க காலப்பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று பரவுதல் கட்டுப்படுத்தப்பட்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு முடக்கம் தளர்த்தப்பட்டது. அதன் பின்னர் தற்போது மக்கள் தமது பொருளாதார செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். ஒரு சில விடயங்களுக்கு வரையறைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. எனினும் தற்போது கூட தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். முக்கியமாக 700 க்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். எனவே இந்த விடயம் தொடர்பாக சுகாதார தரப்பினர் தொடர்ச்சியாக கரிசனையை வெளிப்படுத்தி வருகின்றனர். முக்கியமாக மக்கள் சில விடயங்களில் பொறுப்பற்று செயற்படுவதாகவும் சரியான முறையில் இந்த சுகாதார அறிவுறுத்தல்களை ஆலோசனைகளை பின்பற்றவது இல்லை என்றும் சுகாதார தரப்பினர் தொடர்ச்சியாக தெரிவித்து வருகின்றனர். தேவையற்ற ஒன்றுகூடல்கள் இடம்பெறுவதாக குறிப்பிடப்படுகின்றது. அதாவது அத்தியாவசியமற்ற வகையில் ஒன்றுகூடல்கள் வேண்டாம். அது ஆபத்தை ஏற்படுத்தும் என்ற வகையில் சுகாதார தரப்பினரின் அறிவுறுத்தல்கள் அமைந்திருக்கின்றன. இது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. தேவையற்ற வகையில் ஒன்றுகூடல்கள் வேண்டாம் என்று விடுக்கப்படும் கோரிக்கை தொடர்பாக சகலரும் கவனம் செலுத்துவது மிக அவசியமாக இருக்கின்றது.

என்ன செய்ய வேண்டும்?

மேலும் நாட்டில் மீண்டும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. மாணவர்கள் ஆர்வத்துடன் பாடசாலை செல்கின்றனர். இங்கிலலையில் பாடசாலைகளை மீண்டும் மூடிவிடும் நிலைமையை நாட்டில் யாரும் ஏற்படுத்திவிடக்கூடாது. தொழிலாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் பட்சத்தில் சிறுவர்களுக்கு தொற்று பரவுதல் அதிகரிக்கும் பட்சத்தில்

மற்றுமொரு முடக்கத்தை இந்த நாடு ஒருபோதும் தாங்காது என்பதை சகலரும் கருத்தில் கொள்ள வேண்டும். மற்றுமொரு முடக்கம் நாட்டில் ஏற்படும் பட்சத்தில் நிச்சயமாக 45 லட்சத்திற்கும் மேற்பட்டோர் தமது அன்றாட பொருளாதார செயற்பாடுகளை இழக்கும் நிலைமை ஏற்படலாம். மேலும் நாட்டில் மீண்டும் பாடசாலைகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன. மாணவர்கள் ஆர்வத்துடன் பாடசாலை செல்கின்றனர். இந்நிலையில் பாடசாலைகளை மீண்டும் மூடிவிடும் நிலைமையை நாட்டில் யாரும் ஏற்படுத்திவிடக்கூடாது.

நிச்சயமாக மீண்டும் பாடசாலைகளை மூட வேண்டிய சூழல் ஏற்படும். அதற்கு இடமளித்து விடக்கூடாது. கடந்த ஒன்றரை வருடங்களாக பாடசாலை மாணவர்களின் கல்வி நிலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இக்காலப்பகுதியில் இணைய வழியில் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும் கடந்த மே மாதத்திலிருந்து இணைய வழிக் கல்வியும் சரியான முறையில் இடம்பெறவில்லை. ஆசிரியர்களின் தொழிற்சங்க போராட்டம் காரணமாக அந்த நடவடிக்கை ஸ்தம்பிதமடைந்தது. எனவே எக்காரணம் கொண்டும் மீண்டும் பாடசாலைகள் மூடப்படுவதற்கு இடமளிக்கக்கூடாது.

அந்த வகையில் சகலருக்கும் இந்த விடயத்தில் பாரிய பொறுப்பு இருக்கின்றது என்பதை கவனத்தில் கொண்டு செயற்படுவது மிக முக்கியமாகும். மற்றுமொரு முடக்கம் நாட்டில் ஏற்படும் பட்சத்தில் நிச்சயமாக 45இலட்சத்திற்கும் மேற்பட்டோர் தமது அன்றாட பொருளாதார செயற்பாடுகளை இழக்கும் நிலைமை ஏற்படலாம். தற்போது குறிப்பிடத்தக்களவில் கற்றலாதுமுறை செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. அதுவும் மீண்டும் முற்றாக முடங்கும் அபாயமுள்ளது. முடக்கம் காரணமாக நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி பாதிக்கப்படலாம். அதேபோன்று விவசாய உற்பத்தி பாதிக்கப்படலாம். மீண்டும் ஒருமுறை இந்த நாடும் மக்களும் முடக்குதேத தாங்கிக்கொள்ள முடியாத நிலையே நீடிக்கின்றது என்பதை மறந்துவிட கூடாது. அதனால் சகலரும் சுகாதார விதிமுறைகளை உரிய முறையில் பின்பற்றி செயற்பட வேண்டும். ஒரு சமூகப் பொறுப்பை மக்கள் வெளிப்படுத்த வேண்டும். மேலும் மற்றும் ஒரு அலை குறித்த அபாயம் சுகாதார தரப்பினால் விடுக்கப்படுகின்றது. மற்றுமொரு முடக்கம் தொடர்பாக சுகாதாரத்துறை எச்சரிக்கின்றது. அதன் காரணமாக சகலரும் அதற்கு இடமளிக்காமல் சமூகப் பொறுப்புடன் செயற்படுவது மிக முக்கியமாக இருக்கின்றது. எனவே நாம் மீண்டு வருவது சகலரதும் நடவடிக்கைகளிலேயே தங்கி யிருக்கின்றது என்பதே யதார்த்தமாகும்.

TRINCOMALEE CAMPUS, EASTERN UNIVERSITY, SRI LANKA

Applications will be received from suitably qualified persons by me for the following posts at the Trincomalee Campus, Konesapuri, Nilavely, Trincomalee.

POST : MARSHAL GR. II

Qualifications :

1. A graduate of a recognized University/Higher Educational Institution

Physique:

Male - Height : 5' 5"
Chest : 32" deflated
Female - Height : 5'4"

Note:

Preference will be given to those who possess experience in Police/Armed forces and active participation in sports activities, social welfare activities within the university and at national level.

OR

2. A person who has experience in a post not below the rank of Major in the Armed Forces in Sri Lanka or not below the equivalent rank in Sri Lanka Police.

Age : Between 30 - 45 years
Salary Scale : U-MN 3 (II)
Rs. 42,885 - 18x660 - 54,765 p.m
Selection : By structured interview

POST : TECHNICAL OFFICER (AUDIO VISUAL) GRADE III

Qualifications :

(i) Should pass in three (3) subjects at the G.C.E. (A/L) examination in any Stream

AND

(ii) (a) Having obtained a certificate of proficiency not below than the N.V.Q Level 5 in the field of Electronic and Telecommunication/ Electronics/ Multimedia or Audio Visual Techniques from an Institution recognized by Tertiary and Vocational Educa-tion Commission or a Statutory Institution which has been established by an Act passed by the Parliament.

OR

(b) Having obtained technical qualifications in the field of Electronics and Telecommunication/ Electronics/ Multimedia or Audio Visual Techniques accepted as equivalent to the above qualification of (ii) (a) by Tertiary and Vocational Education Commission with one year experience in Audio Visual work in reputed organization.

Salary Scale : U-MT 1 (IIIA)
Rs. 31,625 – 7x300; 10x355 – 37,275 p.m.
Age : Between 18 - 45 years
Selection : By written and/or practical test and an interview.

POST : MANAGEMENT ASSISTANT GRADE III (SHROFF)

Qualifications :

1. Should have passed the G.C.E (O/L) Examination in six (06) subjects at one sitting with credit passes in:-
   I. Sinhala Language/Tamil Language
   II. English Language/English Literature
   III. Mathematics

AND

2. Should have passed in all subjects at G.C.E (A/L) Examination (expect the Common General Papers) at one sitting.
   a. Out of the three passes expected at the G.C.E (Advanced Level) Examination under the general educational qualifications mentioned in the Schemes of Recruitment, one shall be for Accountancy

Note: A security Deposit to be furnished as determined by the UGC/Higher Educational Institution.

Preference will be given to those who possess the following;

(a) An acceptable qualification in computer applications of not less than six (06) months duration obtained from a recognized institute.

AND

(b) Two years of experience in the use of computer application packages.

Salary Scale : U-MN 1 (III)
Rs. 30,725 – 17x300 – 35,825 p.m.
Selection : By written examination (75%) marks) of the following Subjects:
- Knowledge in Sinhala/Tamil & English Language
- Intelligent quotient and General Knowledge
- (Computer Literacy)
- Relevant Subject area.

AND

- Interview (25% marks)

Age : Between 18 – 30 years of age on the closing date of applications.

General Conditions

(a) Should be a citizen of Sri Lanka
(b) Should be of good character
(c) **Age:** Not more than 45 years (other than Management Assistant (Book-Keeping))

Age limit does not apply to the employees in the services of the Government Department, Statutory Boards, State Corporations and those who are applying for the above.

BENEFITS

➢ Selected candidate will contribute 10% of their monthly salary to the Universities' Provident Fund, while the employer will make a contribution of 15% of their salary of which 8% will be credited to the Universities' Pension Fund and 7% to the Universities' Provident Fund. In addition, they will become contributors to the Employees Trust Fund under which the University will contribute an amount equivalent to 3% of the salary.

METHOD OF APPLICATION

APPLICATION FORMS AND DETAILS IN GENERAL:

Those who wish to apply for the above posts could download application forms and relevant details from the University website **www.esn.ac.lk.** Downloaded application form should accompany with the paid Bank slip for the deposit of a sum of Rs. 100.00 credited to the Account No: 227-1001-4-0000024, at any branch of the People's Bank, drawn in favor of "Bursar, Eastern University, Sri Lanka". Those who wish to obtain application forms by post are requested to send a self-addressed stamped envelope (23cm x10 cm in size), along with the paid bank slip to the above address.

Applicants who are employees of Government Departments, State Corporations and Statutory Bodies should forward their applications through the Head of their respective institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for recruitment, if the application channeled through the Head of the Department is not received.

CLOSING DATE

Completed application forms along with the copies of the educational qualifications, additional qualification and working experience should be sent under registered cover to reach **"Deputy Registrar / Non-Academic Establishments, Eastern University, Sri Lanka, Vantharumoolai, Chenkalady"** on or before 17.12.2021.

Note: The University reserves the right to short list and interview only such applicants as the University may consider suitable for appointment.

Incomplete and illegible applications and applications received after the closing date will be rejected.

REGISTRAR
EASTERN UNIVERSITY, SRI LANKA
VANTHARUMOOLAI,
CHENKALADY **25.11.2021**

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 08 • 04 • 1987

இறைவன் அடியில் 08 • 12 • 2020

செல்வி கௌதமி அருளானந்தம்

திதி: தேய்பிறை அஷ்டமி

இம்மண்ணுலகில் பிறந்த உனக்கு
மகுடம் சூட்ட நினைத்தோம்
ஆனால் இம்மண்ணுலகில்
வாழ்ந்தது போதும் என்று
விண்ணுலகம் சென்று விட்டாய்.
எங்கள் கண்ணீர் அஞ்சலியை
மகுடமாக சூட்டுகிறோம்.

விமான நிலைய வீதி,
வளலாய் மேற்கு,
வளலாய், அச்சுவேலி.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்
077 768 4347

பாசமிகு நினைவுகள்
13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்
(தெசலோனிக்கேயர் 4 : 16)

மலர்வு 03 • 12 • 1978

உதிர்வு 27 • 11 • 2008

அமரர். திரு.
அருளையா விஜயகுமார்

அன்பின் இலக்கணமாய்
பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
வீரத்தின் எழுச்சியாய்
நாம் வாழ தம் வாழ்வை அர்ப்பணித்த மகனே!
தாமின்றி தனியாக என் செய்வேன்!
தம் பாசத்தின் வெள்ளத்தில் இறைவனும் அசந்பட்டானோ!
தமை புவியில் வாழ மனமின்றி தன்னுடன் சேர்த்தானோ!
ஆண்டுகள் பதிமூன்றானாலும் ஆறாது எம் மனம்.
உங்கள் ஆத்மா
சுர்த்தருக்குள் நித்திய இளைப்பாறல் அடையட்டும்.

தகவல்: த. கனகம்மா (தாய்)
தேவாலய வீதி, தாளங்குடா-03, மட்டக்களப்பு.
தொ.பே: 0775822987

மரண அறிவித்தல்

மலர்வு 01 • 08 • 1951

உதிர்வு 24 • 11 • 2021

திரு. சோமசுந்தரம் கோகுலானந்தன்
(புகையிரத பொறியியலாளர்)

யாழ்.அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு.சோமசுந்தரம் கோகுலானந்தன் அவர்கள் 24.11.2021 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் கதிரவேலு செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவபாக்கியம் (சிவபாலினி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நிர்மலானந்தனின் அன்புச் சகோதரனும் நந்தினியின் மைத்துனரும் தனஞ்செயன், தனுஜாவின் பாசமிகு அன்புத் தந்தையும் ஜனனி, மகேஸ்வராராஜா அவர்களின் அன்பு மாமனாரும் கோபீஷன், நிபீஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 27.11.2021 இன்று சனிக்கிழமை இல.115, Raymond House (ரேமண்ட் ஹவுஸ்) இல் அஞ்சலிக்காக (D.S.சேனநாயக்க, கொழும்பு - 08) காலை 9.30 இல் இருந்து வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 28.11.2021 நாளை குரியிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெற்று காலை 10.30 மணிக்கு தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
0112337351, 071 4133706

தகவல்:
குடும்பத்தினர்

பாலாறும் தேனாறும் ஓடும் என்றனர்

நாடு இன்று பஞ்சத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறது

நிர்வாகங்களுக்கு அரசாங்கம் உந்தை என்கிறார் இராஜாராம்

(அட்டன் நிருபர்)

கோட்டாபய ராஜபக்ஷ நிர்வாகத்தில் மலையகமெங்கும் பாலாறும் தேனாறும் ஓடும் என ஆரம்பத்தில் தம்பட்டம் அடிக்கப்பட்டது. ஆனால் நாடு இன்று பஞ்சத்தை நோக்கியே பயணித்துக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்த மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர்.இராஜாராம், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக அடக்குமுறை பிரயோகித்து காட்டுமிராண்டித்தனமாக செயற்படும் பெருந்தோட்ட நிர்வாகங்களுக்கு அரசாங்கம் உடந்தையாக இருக்கின்றது என்றும் கூறினார்.

தலவாக்கலையில் நேற்றுமுன்தினம் (25) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எனும் தேசிய இனத்தின் குரல்வளை நசுக்கப்படும்போதும் உரிமையற்றவர்களாக சொந்த மண்ணில் நடத்தப்படும்போதும் கேள்விகளை எழுப்பினால் அவர்களுக்கு எதிராக அடக்குமுறை பிரயோகிக்கக்கூடிய காட்டுமிராண்டித்தனமான செயற்பாட்டை தோட்ட நிர்வாகங்கங்கள் முன்னெடுத்து வருகின்றன. இதற்கு அரசாங்கமும் உடந்தையாக இருக்கின்றது.

20 கிலோ கொழுந்து பறித்தால் மட்டுமே ஆயிரம் ரூபா சம்பளம் வழங்க முடியும் எனக் கூறி தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களுக்கு அழுத்தங்களை பிரயோகிக்கின்றன. உரிய பராமரிப்பு இன்மையால் தோட்டங்கள் காடுமண்டிக் காணப்படுகின்றன.

தோட்ட நிர்வாக அதிகாரிகள் இவ்வறான தேயிலை மலைகளில் இறங்கி 20 கிலோ கொழுந்து பறித்துக் காட்டினார்கள் என்றால் அவர்கள் விதிக்கின்ற நிபந்தனைகளுக்கு கட்டுப்பட முடியும். தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களுமே அழுத்தம் பிரயோகிப்பது அரசாங்கம் அறியாததல்ல. பெருந்தோட்ட நிர்வாகத்தின் அழுத்தங்களையும் கெடுபிடிகளையும் அரசாங்கம் வேடிக்கை பார்க்கின்றது. இதனாலேயே நிர்வாக அடக்குமுறைக்கு எதிராக பெருந்தோட்ட மக்கள் வீதியில் இறங்கி போராடுகின்றார்கள்.

மலையக மக்களை மாற்றான் பிள்ளைகளாகவும் அடிமைகளாகவும் வைத்துக் கொள்வதே அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கின்றது. மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அரசாங்கத்தின் பங்காளிகளாக இருப்பவர்களும் போலியான பிரசாரங்களையே முன்னெடுத்து வருகின்றனர். மேலும் கோட்டாபய ராஜபக்ஷ சிறந்த நிர்வாகி என்றும் ஆகவே அவருடைய நிர்வாகத்தில் மலையகமெங்கும் பாலாறும் தேனாறும் ஓடும் என்று கூறப்பட்டது. ஆனால் நாடு இன்று பஞ்சத்தை நோக்கியே பயணித்துக்கொண்டிருக்கிறது. எனவே போக்கு மாற்றியமைக்கக்கப்பட வேண்டும் என்றார்.

உலக சுகாதார அமைப்பின்

கொவிட் விழிப்புணர்வு தமிழ் மொழிமூல சுவரொட்டிகள்

கொவிட் விழிப்புணர்வு தொடர்பிலான உலக சுகாதார அமைப்பின் தமிழ் மொழி மூலமான சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களின் பிரதிகள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமானிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன. இவ்விக்கைக்கான உலக சுகாதார ஸ்தாபனத்தின் கிளையின் அழைப்பின்பேரில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான், வைத்தியர் அமல் ஹர்ஷா மற்றும் யுனிசெப் தலைவர் ஆகியோர் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

காணவில்லை

(குவரெலியா நிருபர்)

தலவாக்கலையை வசிப்பிடமாக கொண்ட சி.முத்துசாமி ஐயர் (வயது 72) கடந்த 18ஆம் திகதி வியாழக்கிழமை வீட்டிலிருந்து சென்ற நிலையில் இதுவரை வீடு திரும்பவில்லையென குடும்பத்தார் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பில் தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. இவரை கண்டவர்கள் 076 6940905, 076 6184984 தொலைபேசி இலக்கங்களுக்கு தகவல் தருமாறு கோரப்பட்டுள்ளது.

அட்டன் நிர்வாக வலய காதி நீதிவான் நியமனம்

(செங்கடகல நிருபர்)

அட்டன் நீதி நிர்வாக வலயத்தின் முஸ்லிம் விவாக விவாகரத்து பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் பொருட்டு காதி நீதிமன்ற நீதிவானாக நாவலப்பிட்டிய காதி நீதிமன்ற நீதிவான் மௌலவி எம்.ஏ.எம். பாஸில் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் அட்டன் நீதி நிர்வாக வலயத்தின் காதி நீதிமன்ற நீதிவானாக கடமையாற்றி வந்த ஈ.எம்.நஸீர் அண்மையில் காலமானதை டுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நாவலப்பிட்டிய மகாமுப்ர பிரதேசத்தைச் சேர்ந்த காதி நீதிவான் பாஸில், மாத்தளை உல்பத் மடவலயுசபியா அரபுக் கல்லூரியின் உப அதிபராக கடமையாற்றி வருவதுடன் கம்பளை கடமை பளாத்த நீதி நிர்வாக வலயத்தின் பதில் காதி நீதிவானாகவும் கடமையாற்றி வருகின்றார்.

ஒன்றரை மாத வேலை நிறுத்த போராட்டம் முடிவுக்கு வந்தது

திங்கள்முதல் பணிக்குத் திரும்புவதாக அறிவிப்பு

தலவாக்கலை கட்டுக்கலை பெருந்தோட் டத்தில் கடந்த ஒன்றரை மாதகாலமாக முன்னெடுக்கப்பட்டு வந்த வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று (26) வெள்ளிக்கிழமையுடன் முடிவுக்கு வந்துள்ளது.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் மாநில இயக்குனர் தேவாசீர்வாதம் மற்றும் சங்கத்தின் தொழில் உறவுகள் இயக்குனர் நல்லதம்பி ஆகியோர் தலைமையில் தோட்ட நிர்வாகத்துடனும் தோட்டத் தலைவர்களுடனும் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளின் பின்னர் இந்த வேலை நிறுத்தப் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. கட்டுக்கலை தோட்டக் காரியாலயத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் தோட்டத் தலைவர் சி.செல்வராஜ் உள்ளிட்ட தலைவர்கள், தோட்டத்தின் பிரதிப் பொது முகாமையாளர் வீரகோன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கட்டுக்கல தோட்டத் தொழிலாளர் முன்னெடுத்து வந்த வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு தீர்வு வழங்குவதாக ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டதை தொடர்நது இந்த வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. இதனையடுத்து எதிர்வரும் திங்கட்கிழமை முதல் கட்டுக்கலை தோட்டத் தொழிலாளர்கள் பணிக்குத் திரும்புவதாக தெரிவித்துள்ளனர்.

மண்டூர் - வெல்லாவெளி பாதையில் வெள்ளம்; போக்குவரத்து பாதிப்பு

(பட்டிருப்பு, பெரிய போரதீவு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்துவரும் கடும் மழை காரணமாக போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

சீற்றற காலநிலை காரணமாக மண்டூர் வெல்லாவெளி பிரதான பாதையூடாக வெள்ள நீர் பாய்வதன் காரணமாக அதன் ஊடான போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

குறித்த வீதியூடாக பாடசாலைகள், அலுவலகங்களுக்கு செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதுடன் போரதீவுப் பற்று பிரதேச சபையினால் விசேட போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டன.

இதேபோன்று காக்காச்சிவட்டை ஆனைகட்டியவெளி பிரதான வீதியும் வெள்ளம் காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகள் ஊடாக வெல்லாவெளி பொலிஸாரும் போரதீவுப்பற்று பிரதேச சபையும் இணைந்து மக்கள் பாதுகாப்பாக பயணிப்பதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளதை காணமுடிந்தது.

இதேபோன்று ஏறாவூர்ப்பற்று, கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளிலும் போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டுள்ள நிலையில் கடற்படையினராலும் இராணுவத் தினராலும் விசேட படகு சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு பொதுமக்கள், அலுவலகர்கள் செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பண்ணைத் தொழிலில் ஆர்வம் கொண்டவர்களை ஊக்குவிக்கும் திட்டதுக்கமைவாக "எழுகம்மான்" திட்டத்தின் கீழ் அக்கலரப்பற்று பிரதேச செயலகத்தின் ஆலிம் நகர், பள்ளிக்குடியிருப்பு மற்றும் இங்கங்கணிச்சேமை ஆகிய பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பண்ணைத்தொழிலில் ஈடுபடுகின்ற மற்றும் ஆர்வமுள்ள சுமார் அறுபது பயனாளிகளுக்கான இரண்டு நாள் முழுநேர பயிற்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் காகு சிலங்குடா பண்ணையாளர்கள் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது இந் நிகழ்வில் பிரதிதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம். தமீம், பயிற்சி நிலைய அதிபரும் வளவாளருமான டாக்டர் ஏ.எச்.எம் ஹபீழ், அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எஸ்.எச்.தம்ஜீத், கே.எல். லதயூப், ஐ.எல்.எம்.இர்பான் மற்றும் வளவாளர்களான டாக்டர் எம். கெளஸ், எஸ்.சீ.சபியுள்ளாஹ் எம். கெளசாத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ஒலுவில் மேலதிக நிருபர்)

கிழக்கில் அமைந்திருக்கும் அனைத்து பாலங்களையும் ஆராய்வதற்கு குழு

குற்றவாளிகள் தப்ப முடியாது; ஆளுநர் அனுராதா யஹம்பத்

(கந்தளாய் மேலதிக நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் அமைந்திருக்கும் அனைத்து பாலங்களினதும் தற்போதைய தரம் குறித்து ஆராய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதற்காக விசேட குழுவொன்று அனுப்பி வைக்கப்படும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்துள்ளார்.

சம்பவத்தின் பின்னணியிலான குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டோம். பொறுப்பிலிருந்து யாரும் தப்ப முடியாது என்றும் கூறியுள்ளார்.

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகுப் பாதை விபத்தின் போது காயமடைந்து சிகிச்சை பெற்று வருவோரை பார்ப்பதற்காக நேற்றுமுன்தினம் (25) கிண்ணியா தளவைத்தியசாலைக்கு சென்றபோது ஊடகவியலாளர்களிம் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆளுநர் மேலும் கூறியுள்ளதாவது:

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகுப் பாதை விபத்து போன்ற அனர்த்தங்கள் இனிவரும் காலங்களில் இடம்பெறாதிருக்க வேண்டும். நடந்துவிட்ட சம்பவம் தொடர்பில் ஒருவரையொருவர் விரல் நீட்டும் நேரம் இதுவல்ல. யுத்தம் நிறைவுக்கு வந்ததன் பின்னர் இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான பாலங்கள் கிழக்கு மாகாணத் திலேயே கட்டப்பட்டன.

புதையல் தோண்டிய பதினொருவர் கைது

(திருக்கோவில் நிருபர்)

திருக்கோவில் வில்காமம் மலைப் பிரதேசத்தில் புதையல் தோண்டியதாக கூறப்படும் 11பேர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை (25) இரவு கைது செய்யப்பட்டுள்ளதுடன் புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்திய தாகக் கூறப்படும் உபகரணங்களையும் மீட்டுள்ளதாக திருக்கோவில் பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த மலைக்கு அருகில் புதையல் தோண்டும் நடவடிக்கை இடம்பெறுவதாக தகவல் கிடைத்ததையடுத்து அப்பகுதியை முற்றுகையிட்ட பொலிசார் தம்பிலுவில் மற்றும் திருக்கோவிலைச் சேர்ந்த 11பேரை மடக்கிப்பிடித்து கைது செய்துள்ளனர்.

குறிஞ்சாக்கேணி மக்களுக்கான கடற்படையின் படகுச் சேவை

(திருமலை மேலதிக நிருபர்)

குறிஞ்சாக்கேணி பிரதேசத்துக்கான படகுப் போக்குவரத்து சேவையை கடற்படையினர் ஏற்பாடு செய்துள்ளனர். குறிஞ்சாக்கேணி பாலத்தின் கட்டுமானப் பணிகள் முடிவடையும் வரை இப்படகுகிக்கான படகுப் போக்குவரத்து சேவையை கடற்படையினர் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சஸ்கமம்
Saturday Special

கொழும்பு, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த 22ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்ற "வானொலி அரச விருது" வழங்கும் விழாவில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அரச நடன குழு வழங்கிய நடன நிகழ்வை காணலாம்.
(படப்பிடிப்பு : எஸ்.எம்.சுரேந்திரன்)

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் நினைவு வளாகத் திறப்புவிழா கடந்த 17 ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது. சுவாமி விபுலானந்தர் மணிமண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் சாரதா மகளிர் இல்ல மாணவிகள் வழங்கிய கிருஷ்ணா நடனத்தை காணலாம்.
(படப்பிடிப்பு: எஸ்.எம்.சுரேந்திரன்)

எவோட்ஸ்-2021 பரிசளிப்பு விழா

தலைநகரில் 41 ஆண்டுகளாக இயங்கிவரும் புதிய அலை கலை வட்டம் இவ்வாண்டில் சமூக வலைத்தளங்கள் ஊடாக எவோட்ஸ் கலை, கலாசாரப் போட்டிகளை நடத்தி வருகிறது. கடந்த ஜூலை மாதம் இவ்வாறு நடத்தப்பட்ட அமரர் திருமதி ஜெய மணி ஞாபகார்த்த சிறுகதைப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் டிசம்பர் 5ஆம் திகதி கொழும்பு 11, கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வினில் புரவலர் புத்தகப் பூங்காவின் நிறுவுநர் ஹாசிம் உமர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு மூன்று பணப்பரிசில்களையும் வழங்கவுள்ளார். சிறப்பு அதிதியாக கொழும்பு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய அறங்காவலர் கனக ரகுநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். விழா தலைமையை புதிய அலை கலை வட்டத்தின் ஸ்தாபகரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான ராதாமேத்தா ஏற்கிறார். முதலாமிடத்தை யாழ்ப்பாணம், காரவெட்டியைச் சேர்ந்த சராகவனும், இரண்டாம் இடத்தை பதுளை, பொராஹஸ் பிரதேசத்தை சேர்ந்த பாலராஜ் ஜெப்பிரியாவும் மூன்றாம் இடத்தை கொழும்பு வெல்லம்பிட்டியை சேர்ந்த புர்கான் பீ இப்திகாரும் பெறுகின்றனர்.

ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 96 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு கடந்த 23 ஆம் திகதி பம்பலப்பிட்டி வஜிரா பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்தில் ஸ்ரீ சத்ய சாயி பாபா சர்வதேச நிறுவனம் ஏற்பாடு செய்த பஜனை இடம்பெற்றது. வைபவத்தில் சாய் லக்ஷ்மி லோகேஸ்வரன் குழுவினர் பஜன் பாடல் இசைப்பதையும் திருமதி மயூரி உதயநாயகன் வீணை உரையாற்றுவதையும் காணலாம்.
(படப்பிடிப்பு: எஸ்.எம்.சுரேந்திரன்)

கொடகே தேசிய சாகித்திய விருதுகள்

மல்லிகை சி.குமாரின் 'வேட்தனம்' நூல் தெரிவு

23ஆவது கொடகே தேசிய சாகித்திய விருது முடிவுகள் வெளியாகியுள்ளன. 2020 ஆம் ஆண்டு தமிழில் வெளிவந்த நூல்களில் சிறந்த நூல்கள் விருதுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி 2020 ஆம் ஆண்டு வெளிவந்து, தெரிவுக்கு வந்த சிறுகதைத் தொகுப்புகளில் மல்லிகை சி.குமாரின் "வேட்தனம்" தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மலையக மண்வாசனை சொட்ட அம் மக்களின் வாழ்வியலை தன் படைப்பிலக்கியத்தின் ஊடாக பறைசாற்றி நின்ற கவிஞர், சிறுகதையாசிரியர், ஓவியர் என பல்பரிமாணம் கொண்ட மூத்த இலக்கியவாதி, மக்கள் கவிஞர் மல்லிகை சி.குமார் தனது சிறுகதைகள் கவிதைகள் மூலம் மலையக மக்களின் வாழ்க்கையை பதிவு செய்தது மட்டுமின்றி பிழைப்புவாத அரசியலை எள்ளி நகையாடி சமூக விடுதலையை வலியுறுத்தி வந்துள்ளார்.

அந்தவகையில் அவரது மாடும் வீடும், மனுஷியம் ஆகிய மக்களுக்கான இலக்கிய படைப்புகள் ஏற்கனவே வெளிவந்த நிலையில், கடந்த 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இவரது வேட்தனம் நூல் கொழும்பு தமிழ் சங்கத்தில் வெளியீடு செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வந்ததிலையில் ஜனவரிமாதம் 27ஆம் திகதி எதிர்பாராத நிலையில் இயற்கை எய்தினர். இந்நிலையில் அவரது இறுதி நிகழ்வின் போது இந்த வேட்தனம் சிறுகதை நூல் வெளியீடு செய்யப்பட்டது. இந்த நூல் சிறந்த சிறுகதை தொகுப்புக்கான கொடேகே தேசிய சாகித்திய விருதை பெறுகின்றது.

2020 ஆம் ஆண்டு வெளிவந்த கவிதைத் தொகுப்புகளில் சிறந்த கவிதைத் தொகுப்பாக வெலிமடை ரபீக்கின் "ஒரு நானும் இன்னும் ஒரு நானும்" தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் சிங்களத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த நாவலாக எம்.ரிஷான் ஷரீப்பின் மொழிபெயர்ப்பில் வெளிவந்திருக்கும் சுத்யானா அமரசிங்ஹவின் "தாணி" எனும் நாவல் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

2020 ஆண்டு வெளிவந்து, தெரிவுக்கு வந்த நூல்களில் இளம் படைப்பாளியின் நூலுக்கான விருது ஆ.லெ.மு.இர்ஷாத்தின் "ஒளிபூக்கும் இரவு" எனும் ஹைக்கூ தொகுதி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கிழக்குப் பல்கலையில் சர்வதேச ஆய்வு மாநாடு

(களுவாஞ்சிக்குடி நிருபர்)

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான சர்வதேச ஆய்வு மாநாடு மட்டக்களப்பு, கல்லடி அழகியற் கற்கைகள் நிறுவக இராசதுரை அரங்கில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி புளோரன்ஸ் பாரதி கென்னடியின் வழிகாட்டலில், கலாநிதி ஜெயரஞ்சினி ஞானதாஸ் தலைமையிலான இந்நிகழ்வில், கொழும்பு பல்கலைக்கழக கட்புல ஆற்றுகைகள் கலைகள் உயர் பட்டப்படிப்புகள் பீடீ பீடாதிபதி பேராசிரியர் சௌமிய லியனஹே சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்திருந்தார்.

இணையவழி தொழில்நுட்பம் ஊடாகவும் நடத்தப்பட்ட இந்நிகழ்வில், சென்னை கலாசேத்ரா கலைக்கல்லூரியின் வருகை தரு பேராசிரியரும், மீனம்பாக்கம் ஏ.எம். ஜெயின் கல்லூரியின் இணைப்பேராசிரியருமான முனைவர் சே.இரகுராமன் ஆதார சுருதி, தனதுரையை பரதமும் ஆய்வும் என்ற தலைப்பில் நிகழ்த்தியிருந்ததுடன், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக இசைத் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் ஞானா குலேந்திரன், கிழக்குப் பல்கலைக்கழக திருமலை வளாக முதல்வர் பேராசிரியர் வ.கனகசிங்கம், பேராதனைப் பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் கலாநிதி சுதேஷ் மணிதிலஹே ஆகியோரும் உரையாற்றியிருந்தனர்.

ஆய்வுக்கட்டுரைகள் ஆய்வாளர்களால் வாசிக்கப்பட்டதுடன் பல்கலைக்கழக மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இதன்போது இடம்பெற்றது.

கிளிநொச்சியில் 57 நாட்களில் 1452 பேருக்கு கொரோனா

113 மாணவர்களும் உள்ளடக்கம் -மருத்துவர் நிமால் அருமைநாதன்

(கரைச்சி நிருபர்)

கிளிநொச்சியில் கடந்த 57 நாட்களில் 113 பாடசாலை மாணவர்கள் அடங்கலாக 1452 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது என மாவட்ட தொற்று நோயியலாளர் மருத்துவர் நிமால் அருமைநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சியில் கடந்த 57 நாட்களில் 1452 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் 113 மாணவர்களும் அடங்குகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இன்று இரண்டுதடுப்பூசிகளையும் பெற்றவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசியாக பைசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி மற்றும் பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் மற்றும் கிளிநொச்சி பொது வைத்தியசாலை ஆகிய இடங்களில் இத் தடுப்பூசி ஏற்றும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றார்.

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசி 29ஆம் திகதியிலிருந்து ஏற்றப்படும்

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன்

(எம்.நியூட்டன்)

கொரோனா தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மேலதிகமாக மூன்றாவது தடவையாக தடுப்பூசியானது எதிர்வரும் 29 ஆம் திகதியிலிருந்து வழங்கப்பட உள்ளது என மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

60 வயதுக்கு மேற்பட்டவர்களில் ஏற்கனவே சினோபாம் கொவிட்19 தடுப்பூசியை இரண்டு தடவைகள் பெற்றுக்கொண்டவர்கள் மட்டுமே இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து ஆகக்குறைந்தது மூன்று மாத இடைவெளியின் பின் இத் தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளலாம்.

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நிலையங்கள், திகதிகள் பற்றிய விபரங்கள் அந்தந்த பிரதேசங்களுக்குரிய சுகாதார வைத்திய அதிகாரிகளினால் அறியத்தரப்படும். கொவிட்19 இற்காக இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்ட 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் தமது தடுப்பூசி அட்டையினை சமர்ப்பித்து தமக்குரிய மூன்றாவது தடுப்பூசியினை பெற்றுக்கொள்ள முடியும்.

தடுப்பூசி அல்லது வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை உடையவர்களுக்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் 04, 11 ஆம் திகதி சனிக்கிழமைகளில் தடுப்பூசி வழங்குவதற்கு யாழ். மாவட்டத்தில் யாழ். போதனா வைத்திய சாலை மற்றும் பருத்தித்துறை, ஊர்காவற்துறை, தெல்லிப்பளை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைகளிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட பொது வைத்தியசாலைகளிலும் இத்தடுப்பூசிகள் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறான நிலைமைகள் இருப்பதாக சுத்தேகிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள் தடுப்பூசி வழங்கும் நிலையத்தில் உள்ள வைத்திய அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைகள் ஏதாவது ஒன்றில் தமக்குரிய தடுப்பூசியினை பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

பருத்தித்துறை நகரசபை தவிசாளர் உட்பட 17 பேர் தனிமைப்படுத்தல்

(வடமாரட்சி நிருபர்)

பருத்தித்துறை நகரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட அமர்வில் கலந்து கொண்ட பருத்தித்துறை நகர சபை தவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் இரண்டு உத்தியோகத்தர்கள் ஆகியோர் உள்ளடங்கலாக. 17 பேர் நேற்று முன்தினமிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது

பருத்தித்துறை நகரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட வாக்கெடுப்பு இடம்பெற்ற வேளை அங்கு கலந்து கொண்டிருந்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் ஒருவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவ் அமர்வில் கலந்து கொண்ட 14 உறுப்பினர்களுடன் ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் ஒரு எழுதுநர் ஆகியோர் நேற்று முன். தினத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த தனிமைப்படுத்தலை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை கிண்ணியா குறிஞ்சாக் கேணி படகு விபத்தில் உயிரிழந்த மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு யாழ் பல்கலைக்கழக மாணவ சமூகம் மலர் தூவி, மெழுகுவர்த்தி ஏற்றி ஆத்மார்த்தமான முறையில் அஞ்சலி செலுத்தியுள்ளது

(எம்.நியூட்டன்)

புலிகளின் தலைவர் பிரபாகரனின்

பிறந்தநாளை யாழ்.பல்கலைக்கழகத்தில் கேக் வெட்டி கொண்டாடிய மாணவர்கள்

(எம்.நியூட்டன்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாளை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கேக் வெட்டி கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் 67ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நேற்று யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் மாணவர்கள் அவரது உருவப்படத்துக்கு முன்பாக கேக் வெட்டி கொண்டாடியுள்ளனர்.

அதேவேளை மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில், யாழ்.பல்கலைக்கழக சூழல் உள்ளிட்ட பகுதிகளில் ஆயுதங்களுடன் இராணுவத்தினர், பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளதுடன், புலனாய்வாளர்களின் கண்காணிப்புப் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், பல்கலைக்கழகத்தினுள் மாணவர்கள் கேக் வெட்டி பிறந்தநாளை கொண்டாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.குருநகர் வீதியில் டயரை எரித்த மூவர் கைது

(எம்.நியூட்டன்)

யாழ்.குருநகர் வீதியில் டயர் எரித்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள், மாவீரர் வாரம் என கண்காணிப்புகள் மற்றும் கெடுபிடிகள் யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ளநிலையில் நேற்று வெள்ளிக்கிழமை குருநகர் வீதியில் டயர் எரிக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மூவர்கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த மூவரும் கடும் போதையிலே கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உத்தரகிரியை அழைப்பிதழும் நன்றி நவிலலும்

தோற்றம்
1952
12
07

மறைவு
2021
11
14

வீறுநடை போட்டாயோ விசாலாட்சி ?

அன்புக்குப் பாத்திரமாய் அறிவுக்கு நேத்திரமாய்
அனைவருக்கும் துணையாகி அகமகிழ்ந்த குலவிளக்கே!
இன்பத்தின் எல்லையிலே எமையெல்லாம் ஆடவைத்து
எந்நாளும் பார்த்திருந்த ஏகாந்த குளிர்நிலவே!
துன்பத்தின் சாயல்தனை தொலைதூரம் ஓடவைத்து
தொட்டதெல்லாம் துலங்கவைத்த சுடர்க்கொடியே விசாலாட்சி!
கண்சிமிட்டும் வேளையிலே காலனவன் அழைத்திடவே
விண்ணுலகம் நோக்கியேதான் வீறுநடை போட்டாயோ ?

காட்சிக்கு அமைதியாக கடுஞ்சொல் இல்லாமல்
கருத்தான கணவருடன் கண்ணான பிள்ளைகளும்
மீட்சிக்கு வந்துதித்த மேலான பேரர்களும்
மெச்சிடவே இல்லறத்தில் ஐம்பத்தைந்து ஆண்டுகள்
ஆட்சிக்கு குறைவின்றி அழகான புன்சிரிப்பால்
சுற்றத்தார் மகிழ்ந்திருக்க சுகமான மொழிபேசி
மோட்சத்தில் இடம்பிடித்த மோகனமே! பொக்கிஷமே!
நெஞ்சத்தில் உனைவைத்து நாள்தோறும் போற்றிடுவோம் !

அமரர் திருமதி விசாலாட்சி ஜெகதீஸ்வரன்

(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதியமைச்சருமான எஸ்.ஜெகதீஸ்வரனின் பாரியார்)

இல.217/2. திம்புள்ள வீதி. அட்டன் முகவரியை வசிப்பிடமாகக் கொண்ட எமது குடும்ப விளக்காக ஒளிவீசி வந்த திருமதி விசாலாட்சி அம்மையார் 2021.11.14இல் இறைவனடி சேர்ந்ததை முன்னிட்டு எதிர்வரும் 2021.11.29 திங்கட்கிழமையன்று நாவலப்பிட்டி இல.78/2. பெனிநுட்டுமுல்ல. மகளின் இல்லத்தில் அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்துக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உத்திரகிரியை நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி நவில்கின்றோம்

எமது பாசமிகு குடும்பத் தலைவி விசாலாட்சி அம்மையாரின் மறைவின் போது தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு அனுதாபம் தெரிவித்த அமரர் ஆறுமுகன் தொண்டமானின் மூத்த சகோதரி தமிழ்நாடு திருமதி அனு அம்மையார், அவரது துணைவியார் திருமதி ராஜலெட்சுமி தொண்டமான் அம்மையார், செந்தில் தொண்டமான் குடும்பத்தினர், இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட இ.தொ.கா. முக்கியஸ்தர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியுறிதலை தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்தோடு.தொலைபேசி ஊடாக ஆறுதல் தந்த LANKA HOSPITAL Dr. ABIஅவர்களுக்கும். இறுதிச் சடங்கின் போது நேரில் கலந்து கொண்டும். தொலைபேசியில் தொடர்பு கொண்டு அனுதாபம் தெரிவித்தும் எமது குடும்பத்தின் துயரில் பங்கு கொண்ட அரசியல் பிரமுகர்கள். தொழிற்சங்கவாதிகள். வர்த்தகப் பிரமுகர்கள். உற்றார் உறவினர்கள். நண்பர்கள். நலன் விரும்பிகள் அனைவருக்கும் இதயபூர்வமான நன்றியை சமர்ப்பிக்கின்றோம்!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி !

என்றும் உம் நினைவில் வாடும் குடும்ப உறுப்பினர்கள்

எஸ். ஜெகதீஸ்வரன் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், பிரதியமைச்சர்)
முரளிதரன் (மகன் – அவுஸ்திரேலியா)
வாணி (மகள் – கோல்டன் டெக்ஸ்டைல்ஸ், நாவலப்பிட்டி)
மணிமொழி (மகள் –UK)
ரேணுகா (மருமகள் – அவுஸ்திரேலியா)
S.ரவி (மருமகன் – கோல்டன் டெக்ஸ்டைல்ஸ், நாவலப்பிட்டி)
தினேஸ்குமார் (மருமகன் –UK) மற்றும்
பேரப்பிள்ளைகளான ட்ரசான் யஸ்வந்த், காவியா பிரணதி, சஷ்மிகா ரவி, எனய்லி தாமரின், நியூலி அமாயா ஆகியோர்.

தொலைபேசி:051 – 2224 318, 071 – 7379 583

டிங்கர்...

(தொடர்ச்சி)

நேற்று அதிகாலை பொலிஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கஞ்சத்துறை, வலய குற்றத் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால், மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டொன்றை தேடுவதற்காக குறித்த சந்தேகநபர் அழைத்துச்செல்லப்பட்டுள்ளார். இச்சந்தர்ப்பத்தில் கஞ்சத் துறை வடக்கு, நியமப பகுதியில் வைத்து பொலிஸார் மீது கைக்குண்டை எறிந்து தாக்க முற்பட்டபோது, பொலிஸ் துப்பாக்கிசூட்டில் டிங்கர் லசந்த உயிரிழந்ததாக பொலிஸார் கூறினர். பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவவும் இதனை உறுதி செய்தார்.

இந்த சம்பவத்தில் 2 பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்து கஞ்சத்துறை வைத்தியசாலையில் சிகிச்சைப் பெறுவதாக அவர் குறிப்பிட்டார். எவ்வாறாயினும் டிங்கர் லசந்த கஞ்சத்துறையிலுள்ள வீடொன்றில் மறைந்திருந்த சந்தர்ப்பத்தில் கஞ்சத்துறை வலய குற்றத்தடுப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் (25) கைது செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் அன்றைய தினம் இரவு வேளையில், டிங்கர் லசந்த ஆயுதங்கள் காண்பிக்கவென அழைத்துச் செல்லப்பட்டு கொல செய்யப்படவுள்ளதாக அவரது சட்டத்தரணி உள்ளிட்டவர்களுக்கு தகவல் கிடைத்திருந்தது. இதனை யடுத்து குறித்த தகவல் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரிகள் இருவர் ஊடாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இதனைவிட ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் கிடைத்த தகவல் பொலிஸ் ஊடகப் பேச்சாளருக்கும் அவரது அலுவலகத்துக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் அலுவலகம், டிங்கர் லசந்த எனும் பெயரிலான சந்தேக நபரை கைது செய்துள்ளீர்களா என ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிப்பதற்காக, கஞ்சத்துறை வலய குற்றத் தடுப்பு பிரிவிடம் விசாரித்த போது, அவ்வாறான கைது நடவடிக்கை எதுவும் இல்லை என பதிலளிக்கப்பட்டதாக ஊடகவியலாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. இவ்வாறான நிலையில், டிங்கர் லசந்தவின் சட்டத்தரணி சஞ்சய ஆரியதாஸ இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பிரிசுக்கும் இது தொடர்பில் அறிவித்திருந்த நிலையில், ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் இது தொடர்பில் பொலிஸ் மா அதிபரை மின்னஞ்சல் ஊடாகவும் குறுந்தகவல் ஊடாகவும் தெளிவுபடுத்தியுள்ளார். இவ்வாறு பல தரப்பினராலும் டிங்கர் லசந்த பொலிஸாரால் கொல செய்யப்பட் போவதாக தகவல் வழங்கப்பட்டிருந்த பின்னணியிலேயே நேற்று அதிகாலை அவர் ஆயுதம் காண்பிக்கவென அழைத்து செல்லப்பட்ட வேளையிலேயே உயிரிழந்தார்.

டிங்கர் லசந்த என அழைக்கப்படும் லுனு விலேக லசந்த, பாதாளக் குழுவினரின் துப்பாக்கிதாரி என்பதுடன் போதைப் பொருள் கடத்தல் பலவேறு குற்றச்செயல்கள் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் என சம்பவத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ கூறினார்.

அவருக்கு எதிராக பல நீதிமன்றங்களில் வழக்குகள் உள்ளதாகவும் கஞ்சத்துறை பகுதியில் மற்றொரு கொலைக்கு சந்தேக நபர் தேடப்பட்டுக்கொண்டிருந்த நிலையிலேயே, கஞ்சத்துறை வலய குற்றத் தடுப்புப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். கடந்த செப்டெம்பர் 4 ஆம் திகதி மாத்தறை கொட்டவில பொலிஸ் பிரிவில் சன் ஷைன் சுத்தா எனும் பாதாள உலகக் குழு உறுப்பினரின் கொலையுடன், டிங்கர் லசந்த பிரதான சந்தேக நபர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சம்பவம் தொடர்பில் கஞ்சத்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ், வலய குற்றத் தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை நடத்துவதாகவும் அவர் கூறினார்.

35,000...

(தொடர்ச்சி)

கூறிய போதும் வரவு செலவுத் திட்டத்தில் அதனைக் காணவில்லை. சேதன விவசாயத்துக்காக விவசாயிகளுக்கு 6 இலட்சம் ரூபாவை கொடுக்கும் அதேவேளை மறுபக்கம் இரசாயன உரத்தை கொண்டு வர திட்டமிடுகின்றனர். அப்படியாயின் சேதன பயிர்செய்கைக்காக வழங்கப்பட்ட நிதிக்கு என்னவானது என மனுஷ நாணயக்கார கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தின் கமத்தொழில் அமைச்சு, நீர்ப்பாசன அமைச்சு உள்ளிட்ட நான்கு அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான விவாதத்தில் உரை யாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

இரசாயன உரத்துக்கான தடையை எக்காரணத்துக்காகவும் நீக்க மாட்டேன் என்று அடிக்கடி ஜனாதிபதி கூறிவந்தார். சர்வதேச நாடுகளுக்கும் இதனை கூறினார். ஆனால் இறுதியில் அந்த வர்த்தமானிகளை மீளப் பெற்றுக்கொண்டுள்ளார்.

இதேவேளை பசுமை விவசாயத்துக்காக பயிர் தலைமையில் செயலணியும் அமைக்கப்பட்டது. இந்தக் குழுவினர் தமது பணிகளை நிறைவேற்றியுள்ளனர். இந்நிலையில் விசாயத்துறைக்கு ஏற்பட்டுள்ள நிலைமையை மஹிந்தானந்த அளுத்கமகே மீது சுமத்த முயற்சிக்கின்றனர். ஆனால் இது ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் வேலை. இதில் மஹிந்தானந்த அரசியலில் இருந்து ஒதுக்கும் நிலைமையே ஏற்பட்டுள்ளது. வரவு செலவுத் திட்டத்தில் விவசாயத் துறை அமைச்சருக்காக 24 பில்லியன் ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் இராஜாங்க அமைச்சருக்கு அவர் ராஜபக்ஷ என்பத னாலா என்று தெரியவில்லை. அவருக்கு 45.8 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சேதன பயிர்ச்செய்கைக்காக 35,000 பில்லியன் ரூபாவை ஒதுக்குவதாக கூறிய போதும் வரவு செலவுத் திட்டத்தில் அதனைக் காணவில்லை. சேதன விவசாயகத்துக்காக விவசாயிகளுக்கு 6 இலட்சம் ரூபாவை கொடுக்கும் அதேவேளை மற்றைய பக்கத்தில் இரசாயன உரத்தை கொண்டுவர திட்டமிடுகின்றனர். அப்படியாயின் சேதன பயிர்செய்கைக்காக வழங்கப்பட்ட நிதிக்கு என்ன ஆனது. இதில் குழுவொன்று இலாபம் அடைந்துள்ளது. அதாவது இது சால்வை போரனை அடையும் வரவு செலவாகவே உள்ளது. இதில் மூலம் சேதனப் பசளை நாடகமே நடத்துள்ளது.

தேயிலை, கறுவா, நெல், சோளம் உள்ளிட்ட அனைத்து பயிர் செய்கைகளும் வீழ்ச்சியடைந்துள்ளன. சோளம் வீழ்ச்சியால் கோழித்தீனிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு முட்டை விலையும் அதிகரிக்கின்றது. இந்த நிலைமையில் சேதனப் பசளைக்கு போவதாக கூறிக்கொண்டு சேர் அனைத்திலும் தோல்வியடைந்துள்ளார்.

சாதாரணமாக அரசை செய்யும் போது, வரலாற்றுக் காலத்தில் அரசர்களுக்கு மந்திரிமாலோசகர்கள் இருப்பார்கள். அவர்கள் படித்த, அறிவாளர்தவர்களாக இருப்பர். ஆனால். அதேபோன்று இப்போது, கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அருகில் இருந்து கொண்டு ஆலோசனை வழங்குபவராக மகிந்தானந்த அளுத்கமகேவும் மகிந்த ராஜபக்ஷவுக்கு அருகில் இருந்து ஜோன்ஸ்டன் பொன்னம்பேரும் பலில் ராஜபக்ஷவுக்கு ரோஹித அபேகுணவர்தனவும் இருக்கின்றனர். இவர்கள் மூவருமே அவர்களுக்காக முன்னிறுப்பவர்கள். அவர்கள் கூறுவதை அப்படியே கூறுகின்றனர். இதன் மூலம் இந்நாடு எங்கே போகின்றது என்று தெரியவில்லை என்றார்.

எரிபொருள்...

(தொடர்ச்சி)

குறைவடையும்போது அதன் நிவாரணத்தை மக்களுக்கு உடனடியாக வழங்க முடியாது. ஏனெனில் கடந்த எட்டு மாத காலத்துக்குள் எரிபொருளின் விலை 36 சதவீத்தினால் உயர்வடைந்துள்ளது. எரிபொருள் விலை நிர்ணயத்துக்காக விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

வலுசக்தி அமைச்சின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

2021ஆம் ஆண்டு 21ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 5ஆம் பகுதியில் தேசிய கனிய வளங்கள் கண்காணிப்பாளராக கடமையாற்றுவதற்கு நிறுவனம் ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும் எனவும் அந்நிறுவனம் தேசிய கனிய வளங்கள் கண்காணிப்பாளராக விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சரினால் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளிப்படுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோல் 2020ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அமைச்சரவை அங்கீகரித்த தேசிய எரிவாயு கொள்கைக்காக தேசிய கனிய வளங்கள் கண்காணிப்பாளர் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. தேசிய கனிய வளங்கள் கண்காணிப்பாளராக இலங்கை எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனம் என்ற பெயரில் இலங்கை பெற்றோலிய வளங்கள் கூட்டுத்தாபன நிர்வாகத்தில் நிறுவனம் ஒன்றை ஸ்தாபிக்க 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் திகதி அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இலங்கையில் கனிய வளங்கள் மற்றும் எரிவாயு ஆய்வு நடவடிக்கைகளுக்காக முன்வரும் நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து பங்காண்மை நிறுவனமாக செயற்பாடுவது இந்நிறுவனத்தின் பிரதான பொறுப்பாகும். அத்தகையில் இலங்கையில் கனிய வளங்கள் மற்றும் எரிவாயு தொடர்பில் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் இந்நிறுவனத்துக்கு 15 சதவீத உரிமத்தை வழங்க வேண்டும்.

எரிபொருள் விலையை நிலையான மட்டத்தில் பேணுவதற்காக நிதியத்தை ஸ்தாபிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரிக்கப்படும்போது அதன் சுமையை மக்கள் மீது செலுத்தாமல் நிதியத்தின் ஊடாக அப்போதைய சூழ்நிலையை முகாமைத்துவம் செய்வது நிதியத்தின் பிரதான பொறுப்பாகும். உலக சந்தையில் எரிபொருளின் விலை குறைவடையும்போது அதன் நிவாரணத்தை மக்களுக்கு நேரடியாக வழங்க முடியாது. நிவாரணத்தை நிதியத்தின் ஊடாக சேமிக்கப்படும்.

வலுசக்தி அமைச்சின் மேலதிக செயலாளர் நிதியத்தின் தலைவராகவுள்ளார். அரச நிதிக் கொள்கை நிதைணக்களத்தின் பணிப்பாளர், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதிகள், எல்.ஜ.ஒ.சி நிறுவன பிரதிநிதிகள், கடற்றொழில் அமைச்சினால் பெயர் குறிப்பிடப்படும் கடற்றொழிற்சங்கத்தின் பிரதிநிதி, போக்குவரத்து அமைச்சினால் பெயர் குறிப்பிடப்படும் போக்குவரத்து சங்கத்தின் பிரதிநிதி மற்றும் வலுசக்தி அமைச்சினால் பெயர் குறிப்பிடப்படும் பொருளாதாரம் மற்றும் கணக்கியல் திறன்கொண்ட இரு பிரதிநிதிகள் நிதியத்தின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவார்கள். எரிபொருள் விலையை நிலையான தன்மையில் பேணும் நிதியம் இனி எரிபொருளின் விலையை தீர்மானிக்கும்.

எரிபொருள் விலையை நிலையாக பேணுவதற்கான நிதியத்தை ஸ்தாபிப்பதற்கான அமைச்சரவை யோசனை மார்ச் மாதம் 15ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு கடந்த 23ஆம் திகதி அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த எட்டு மாத காலத்துக்குள் எரிபொருளின் விலை 36 சதவீத்தினால் உயர்வடைந்துள்ளது. ஆகவே இந்நிதியத்தின் ஊடாக மக்களுக்கு விரைவாக நிவாரணம் வழங்க முடியாது.

எரிபொருளுக்காக விலை சூத்திரம் அறிமுகப்படுத்துவது அவசியமாகும். முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர அறிமுகப்படுத்திய விலை சூத்திரத்தில் இரண்டு பிரதான குறைபாடுகள் காணப்பட்டன.

அறிமுகப்படுத்தப்பட்ட விலை சூத்திரத்தில் வெளிப்படைத் தன்மை காணப்படவில்லை. மாதமொருமுறை எரிபொருளில் விலை இவ்வளவு ரூபாவினால் அதிகரிக்கப்படும், குறைவடையும் என குறிப்பிடப்பட்டாலும் அதனை வகுக்கும் முறைமை தெளிவுப்படுத்தப்படவில்லை. உலக சந்தையில் எரிபொருளின் விலை குறைவடைவதற்கு அமைவாக விலை குறைக்கப்படவில்லை.

எக்காரணங்களுக்காகவும் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 2 நாட்களுக்கு தேவையான அளவில் எரிபொருள் காணப்படும் பொய்யான பிரசாரத்தை கருத்திற்கொண்டு நுகர்வோர் தேவைக்கு மேலதிகமாக எரிபொருள் பெறும்போது எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் தான் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும்.

1956ஆம் ஆண்டு தான் முதலாவது கூட்டணி அரசாங்கம் உருவாக்கப்பட்டது அப்போதைய காலக்கட்டத்தில் இருந்து கூட்டணி அரசாங்கத்தில் பிரச்சினைகள் தோற்றம் பெறுவது இயல்பு. பல்வேறு கொள்கைகள் உள்ள அரசியல் கட்சிகள் ஒன்றிணையும் போது முரண்பாடுகள் தோற்றம் பெறுவதொன்றும் பெரிதுப்படுத்த வேண்டிய விடயமல்ல என்றார்.

உரப்பிரச்சினை...

(தொடர்ச்சி)

இடையிலான நட்புறவை தொடர்ந்தும் பாதுகாக்க வேண்டியது மிக அவசியமானது என விவசாயத்துறை இராஜாங்க அமைச்சர் ஷவுக்தீநிர ராஜபக்ஷ சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கமத்தொழில் அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சு உள்ளிட்ட மூன்று இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், நாட்டு மக்களை நோயாளர்களாக மாற்றும் பூமியை நாசமாக்கும் நாட்டின் வெளிநாட்டு கையிருப்பை அழிக்கும் வகையிலும் 100150 பில்லியன் ரூபாவை ஒருசிலர் பங்குபோடும் விதமாக முன்னெடுக்கும் விவசாய முறைமையை முழுமையாக கைவிட்டு, மக்களை ஆரோக்கியமாக வாழவிடும் வேலைத்திட்டத்தையே நாம் முன்னெடுத்து வருகின்றோம். எனினும் இந்த ஒட்டுமொத்த வேலைத்திட்டத்தையும் அழிக்கும் கூட்டமொன்று மக்களை குழப்பியடித்துக்கொண்டுள்ளது. இதில் எதிர்க்கட்சிகள், இடதுசாரி கட்சிகள் அவர்களுக்கு துணைபோகும் ஊடகங்கள் தொடர்ச்சியாக செயற்பட்டுக்கொண்டுள்ளன.

எந்த சவால்கள் வந்தாலும் அவற்றை தாண்டி எமது கொள்கையை முன்னெடுப்போம். ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்த காரணத்தினால் இன்று விவசாயிகளுக்கு உரம் கிடைக்கவில்லை. இட்டமிட்ட முறையில் கொண்டுவரப்பட்ட உரக் கப்பல் 70 நாட்களுக்கு மேலாக இன்றும் ஆழ்கடலில் நிற்கின்றது. துக்கத்திலும் சந்தோசத்திலும் எம்முடன் நின்ற எமது நண்பனும் சகோதரனுமான சீன இராச்சியம் அதிருப்தியில் அந்நியப்பட்டுள்ளது. இதற்கு ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலரும் ஊடகங்களும் பொறுப்புக்கூற வேண்டும்.

இலங்கையின் இரண்டு பரிசோதனை கூடங்களில் ஒரே உரம் குறித்த இரண்டு மாறுபட்ட பெறுபேறுகள் வெளிப்படுத்தப்படுகின்ற நிலையில் சீனா எம்மீதான வேதனையான நிலையில் குரல் எழுப்பி கேட்கின்றது. சீனஇலங்கை நட்புறவு சகலதையும் விட உயர்வானது. உர விவகாரத்தில் என்ன தீர்மானம் எடுத்தாலும் அதனை தாண்டிய இரு நாடுகளுக்கு இடையிலான நட்புறவை தொடர்ந்தும் பாதுகாக்க வேண்டியது மிக அவசியமானது.

மறுபுறம் இந்தியாவிடம் இருந்து நானோ நைற்றிஜன் உரம் இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனையும் ஊழல் எனக்கூறி அதனையும் குழப்பியடிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இவ்வாறான சவால்களுக்கு மத்தியிலேயே பெரும் போகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தேசிய உர உற்பத்தியாளர்களைக் கொண்டே இவை இறக்போது கையாளப்படுகின்றன. எவ்வாறிருப்பினும் பெரும்போகத்தில் எந்த பாதிப்புக் ஏற்படாது. அதேபோல் விவசாயிகளுக்கும் நன்மை கிட்டும் என்றார்.

கொவிட்...

(தொடர்ச்சி)

பயன்படுத்தப்பட்டு வரும் மோல்னுபிரவிர் மருந்து வில்லைகளை (Molnupiravir Capsule) பெற்றுக்கொடுப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அத்தோடு 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு நடமாடும் சேவையூடாக மூன்றாம் கட்ட தடுப்பூசியை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கொவிட் செயலணி கூட்டத்தின் போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த விடயங்கள் தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

இரண்டாம் கட்டமாக கொவிட் தடுப்பூசிகளைப் பெற்று இரண்டு மாதங்கள் நிறைவடைந்துள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாம் கட்ட தடுப்பூசியை நடமாடும் சேவையூடாக வழங்குவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

வைத்தியசாலைகளுக்கு மருத்துவ தேவைகளுக்காக வருகை தரும் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு, அந்த சந்தர்ப்பத்திலேயே மூன்றாம் கட்ட தடுப்பூசியை வழங்குவதற்கு இதன்போது தீர்மானிக்கப்பட்டது. இரண்டாம் கட்ட தடுப்பூசியைப் பெற்று ஒரு மாதம் நிறைவடைந்துள்ள 20 வயதுக்கு மேற்பட்ட தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு மூன்றாம் கட்ட தடுப்பூசியை வழங்குவதற்கும் இதன் போது தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்தவர்கள், இரத்த மாற்றம் செய்யும் நோயாளர்கள், தொற்றா நோயால் பாதிக்கப்பட்டதன் காரணமாக நோய் எதிர்ப்பு சக்தி குறைவாகக் காணப்படுபவர்கள் உள்ளிட்ட சகலரும் விசேட வைத்திய பிரிவுகளின் ஆலோசனைக்கமைய மருத்துவ ஆலோசனைக்கமைய மூன்றாம் கட்ட தடுப்பூசி வழங்கப்படும்.

உரிய கிளினிக்குகள் அல்லது ஒவ்வொரு பாராளுமன்ற தேர்தல் நடத்தப்பட்ட போதும் நாம் மைத்திரிபால சிறிசேன தலைமையில் வேறு குழுவாக ஆதரவளிக்கவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியாகவே செயற்பட்டோம்.

நாம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடனும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடனும் புரிந்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளோம். இவற்றில் நாம் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி என்ற பெயரிலேயே கையெழுத்திட்டுள்ளோம். மாறாக தனியொரு பெயராக அல்ல. எனவே நாம் அரசாங்கத்திற்குள் அங்கத்துவம் வகித்தாலும் சுதந்திர கட்சி என்ற ரீதியில் அரசியலில் ஈடுபடுவதற்கான உரிமை எமக்கிருக்கிறது. அந்த உரிமையை எவராலும் தடுக்க முடியாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பலப்படுத்தும் வேலைத்திட்டத்தை எவராலும் தடுத்து நிறுத்தவும் முடியாது. கட்சியைப் பலப்படுத்துவதற்கு யாரிடமும் அனுமதி பெற வேண்டிய தேவையும் எமக்கு கிடையாது. அரசாங்கம் எம்மை கவனத்தில் கொள்ளவில்லை என்று கூறிக்கொண்டிருக்கத் தேவையில்லை. பிரதேசவை, மாகாணசபை, பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களின் போதே எமது பலம் வெளிப்படுத்தப்படும்.

சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களின் சனிக்கிழமைகளிலும் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளுக்குச் சென்று மேற்கூறப்பட்ட பிரிவினர் மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விதேச வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

கொவிட் நோயாளிகளுக்காக, பிரித்தானியா உள்ளிட்ட சில நாடுகளில் தற்போது பயன்படுத்தப்படும் வரும் மோல்னுபிரவிர் வில்லை (Molnupiravir Capsule) பெற்றுக் கொடுப்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. அத்துடன், கொவிட் வைரஸுக்கு எதிரான தடுப்பூசிகளை நாட்டுக்குக் கொண்டுவந்தது போன்றே, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் ஊடாக இந்த வில்லைகளையும் நாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு, இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். கொவிட் தொற்றுப் பரவல் தொடர்பில் கிராமிய மக்கள் கொண்டுள்ள கவனக் குறைவு தொடர்பிலும் இதன்போது பேசப் பட்டதுடன், கிராமிய ரீதியில் பரவும் கொவிட் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தல் மற்றும் அது தொடர்பில் அவர்களுக்குத் தெளிவுபடுத்தல்களை முன்னெடுப்பது தொடர்பிலான வேலைத்திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கட்சியிலிருந்து...

(தொடர்ச்சி)

ஈடுபடுவதற்கான உரிமை காணப்படுகிறது. அந்த உரிமையை எவராலும் தடுக்க முடியாது. கட்சியிலிருந்து விலகிச் சென்றவர்கள் மீண்டும் இணைவதற்காக தாய் வீட்டின் கதவுகள் திறந்தே காணப்படுவதாக இராஜாங்க அமைச்சர் துமிந்த திலநாயக்க தெரிவித்தார்.

அரசாங்கம் எம்மை கவனத்தில் கொள்ளவில்லை என்று கூறிக் கொண்டிருக்கத் தேவையில்லை. பிரதேசவை, மாகாண சபை, பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களின் போதே எமது பலம் வெளிப்படுத்தப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் துமிந்த திலநாயக்க கட்டிக் காட்டினார்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற கட்சியின் மறுசீரமைப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் போன்று இலங்கையில் வெற்றியீட்டிய வேறு எந்த கட்சியும் இல்லை. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவராகவே அன்று யுத்தத்தை வெற்றி கொண்டார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வெற்றிபெறச் செய்த போதும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர்களின் தற்கான உரிமை எமக்கிருக்கிறது. அந்த உரிமையை எவராலும் தடுக்க முடியாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பலப்படுத்தும் வேலைத்திட்டத்தை எவராலும் தடுத்து நிறுத்தவும் முடியாது. கட்சியைப் பலப்படுத்துவதற்கு யாரிடமும் அனுமதி பெற வேண்டிய தேவையும் எமக்கு கிடையாது. அரசாங்கம் எம்மை கவனத்தில் கொள்ளவில்லை என்று கூறிக்கொண்டிருக்கத் தேவையில்லை. பிரதேசவை, மாகாணசபை, பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களின் போதே எமது பலம் வெளிப்படுத்தப்படும்.

சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவடைந்திருக்கலாம். இதற்கான காரணம் கட்சிக்குள் ஏற்பட்ட சில முரண்பாடுகள், கருத்து வேறுபாடுகளாகும். எவ்வாறிருப்பினும் எம்மிலிருந்து பிரிந்து சென்ற அனைவருக்கும் அவர்களது தாய் வீடு சுதந்திரக் கட்சி என்பது நினைவிலிருக்கும். எனவே தற்போது சிறியதாக தெரியும் சுதந்திரக் கட்சியே உங்களது தாய் வீடு என்பதை மறந்து விட வேண்டாம். சில காரணங்களால் பிரிந்து சென்றவர்கள் மீண்டும் இணைவதற்கு தாய் வீட்டின் கதவுகள் திறந்தே உள்ளன என்றார்.

யுகதனவி...

(தொடர்ச்சி)

அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்திதாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான பரிசீலனைக்கு பூரண நீதியரசர்கள் அமர்வொன்று நிறுவப்பட்டுள்ளது.

சட்ட மா அதிபர் சார்பில் கடந்த நவம்பர் 12 ஆம் திகதி உயர் நீதிமன்றில் சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பர்சனா ஜமில் இதற்கான கோரிக்கையை முன் வைத்திருந்த நிலையில் ஜவர் கொண்ட நீதியரசர்கள் குழாம் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 3 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நேற்று (26) நீதியரசர் முர்து பெர்னான்டோ தலைமையிலான காமினி அமரசேகர மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய நீதியரசர்கள் அடங்கிய குழாம் முன்னிலையில் ஆராயப்பட்டது.

இதன்போதே, இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள், பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனேக அளுவிஹார, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட மற்றும் எல்.ரி.பி. தெஹிதெனிய ஆகியோர் அடங்கிய ஜவர் கொண்ட நீதியரசர்கள் முன்னிலையில் எதிர்வரும் 29 ஆம் திகதி நிங்களன்று பரிசீலிக்கப்படும் என நீதிமன்றம் அறிவித்தது.

பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் எல்லே குணவன்ச தேரர், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார, மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க மற்றும் இலங்கை மின்சார தொழிற்சங்கத்தின் பொதுச்செயலாளர் ரஞ்சன் ஜயலால் பெரேரா ஆகியோரால் இந்த 3 அடிப்படை உரிமை மீறல் மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சரவை அமைச்சர்கள் 27பேர், இலங்கை மின்சார சபை, வெஸ்ட் கோஸ்ட் பவர் தனியார் நிறுவனம், லக்தனவி நிறுவனம், இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், கொள்வனவு செய்யும் அமெரிக்க நிறுவனமான நியூ போர்ட்ரிஸ் எனர்ஜி, நிதி, மின்சார, வலு சக்தி அமைச்சுக்களின் செயலாளர், அமைச்சரவையின் செயலர் உள்ளிட்ட 43 தரப்பினர் மனுவின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

இவர்களின் அமைச்சரவை அமைச்சர்கள், அரச அதிகாரிகளுக்காக சட்ட மா அதிபர் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவில் ஆஜராகும் நிலையில், அமைச்சரவை அமைச்சர்களான விமல் வீரவங்ச, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் சார்பில் தனிப்பட்ட சட்டத்தரணி ஒருவர் ஆஜராவதாக நேற்று நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

அதன்படி இம்மூவர் தொடர்பிலும் சட்ட மா அதிபர் இம்மனுவில் பிரதன்மனாவதில்லை எனவும் அவர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி உதித்த இகல

பிரபாகரனுக்கு...

(தொடர்ச்சி)

உள்ளிட்ட மூன்று இராஜாங்க அமைச்சக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலே பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

தமிழினத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு எனது பிறந்த நாள் வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். சங்க காலத்து மன்னர்களை பற்றி நாம் படித்திருக்கின்றோம். ஆனால் இந்தக்காலத்தில் அவர் எங்களுக்கு முன் வாழ்ந்து காட்டிய மிகப்பெரும் தலைவன்.அவருக்கு எனது பிறந்த நாள் வாழ்த்துக்கள் என்றார்.

வலுவான...

(தொடர்ச்சி)

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹோலிக்குக் தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று வெள்ளிக்கிழமை உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றிருந்தது. இதன்போது, புதிய அரியலமைப்பு சம்பந்தமான விடயங்கள் பற்றிய கவனம் செலுத்தப்பட்டபோதே சித்தார்த்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது, வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்பட வேண்டிய உட்கட்டமைப்பு விடயங்கள் பற்றி சித்தார்த்தன் எம்.பி. அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார். அத்துடன், வடக்கு, கிழக்கு பகுதிகளில் கல்வித்துறை மேம்பாட்டிற்கான ஒத்துழைப்புக்களை அவுஸ்ரேலிய மேம்பட்ட நீதியில் தொடர்ந்தும் வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார். அதனையடுத்து சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் உயர்ஸ்தானிகருக்கும், சித்தார்த்தனுக்கும் இடையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இச்சமயத்தில் தமிழ் மக்களின் பொறுப்புக்கூறல் விடயத்தில் சர்வதேசத்தின் அழுத்தங்கள் தொடர்ந்தும் வலுவாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்று சித்தார்த்தன் உயர்ஸ்தானிகரிடத்தில் கோரியுள்ளார்.

தற்போதைய அரசாங்கம் பொறுப்புக்கூறல் விடயத்தில் சிரத்தையின்றி இருப்பதை கட்டிக்காட்டியதோடு, தமிழ் மக்கள் நீண்டகாலமாக நீதிக்காக போராடிக்கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனைத்தொடர்ந்து புதிய அரசியலமைப்பு விடயம் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டுள்ளது. அச்சமயத்தில், தற்போதை அரசாங்கம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையிலான ஒரு அரசியலமைப்பினை உருவாக்கும் என்றும் நம்பிக்கை கொள்ளவில்லை. மேலும் சமகால நிலைமைகளின் பிரகாரம் உருவாக்கப்படுகின்ற புதிய அரசியலமைப்பானது நிச்சயமாக வலுவான ஒற்றையாட்சிக் கட்டமைப்பைக் கொண்டதாகவும், பௌத்த, சிங்களத்தை அடிப்படையாகவும், முன்னிலைப்படுத்தியதாகவும் தான் அமைவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகமாக உள்ளதாகவும் சித்தார்த்தன் எடுத்துரைத்துள்ளார்.

இந்த விடயத்தில், அவுஸ்ரேலியா உள்ளிட்ட ஏனைய அதன்நட்புநாடுகளும் விசேட கரிசனைகொள்ள வேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியதோடு, தமிழர்களுக்காக அவுஸ்ரேலியா வழங்கிய இதுகாலவரையிலான ஒத்துழைப்புக்களுக்கும், ஆதரவுக்கும் நன்றிகளையும் தெரிவித்துள்ளார்.

சிலிண்டர்...

(தொடர்ச்சி)

விபத்து ஒருபோதும் ஏற்படாது. எரிவாயு கசிவு ஏற்படுவதன் காரணமாக விபத்து ஏற்படலாம். எரிவாயு சிலிண்டரை தொடர்புபடுத்தி தொடர்ச்சியாக விபத்துக்கள் இடம்பெறுவதாக குறிப்பிடுகின்றமை பிரச்சினைக்குரியது. இவ்விடயம் தொடர்பில் அரச தரப்பிலும் நிறுவன மட்டத்திலும் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என லிட்ரோ நிறுவனத்தின் சுகதாரம் மற்றும் பாதுகாப்பு பிரிவு பணிப்பாளர் ஜயந்த பல்நாயக்க தெரிவித்துள்ளார். நுகர்வோர் எரிவாயு சிலிண்டர் பாவனையின் போது அதிக கவனமாக செயற்பட வேண்டும். எரிவாயு சிலிண்டரிலிருந்து அடுப்பிற்கு வாயுவை விநியோகிக்கும் குழாய் 2 வருடத்திற்கொரு முறை கட்டாயம் மாற்றப்பட வேண்டும். அத்துடன் சிலிண்டரில் உள்ள ரெக்யூலேட்டர் 5 வருடத்திற்கொருமுறை கட்டாயம் மாற்றப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எரிவாயு சிலிண்டர் கலவையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படும் செய்தி அடிப்படையற்றதாகும். முழுமையாக உற்பத்தி செய்யப்பட்ட எரிவாயு இறக்குமதி செய்யப்படுகிறது. ஆகவே எம்மால் சிலிண்டர் கலவையில் மாற்றம் ஏற்படுத்த முடியாது. எரிவாயு சிலிண்டர் வெடிப்பிற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. சிலிண்டரின் அடிப்பகுதி அல்லது முனை பகுதி துருப்பிடித்த நிலையில் காணப்பட்டால் நிச்சயம் எரிவாயு கசிய ஆரம்பிக்கும். அவை குறித்து பாவனையாளர்கள் தான் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

எரிவாயு சிலிண்டர் வைக்கப்பட்டுள்ள இடம் எப்போதும் காற்றோட்டமாக காணப்பட வேண்டும். ஆகவே எரிவாயு சிலிண்டர் பாவனையின் போது பின்பற்ற வேண்டிய அடிப்படை வழிமுறைகள் தொடர்பில் பாவனையாளர்கள் அதிகம் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

சவேந்திர...

(தொடர்ச்சி)

தொடர்புபட்டிருப்பதாக நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் இலங்கையின் இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவிற்கு எதிராக மெக்னிற்ஸ்கி முறையிலான தடையை விதிக்குமாறு பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்களான எலியற் கொல்பேர்ன் மற்றும் தெரேஸா வில்லியர்ஸ் ஆகிய இருவரும் பிரிட்டனின் வெளிவிவகாரச் செயலாளரிடம் கோரியுள்ளனர்.

அமெரிக்காவில் நடைமுறையிலுள்ள மெக்னிற்ஸ்கி சட்டத்தின் ஊடாக மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடையவர்கள் மற்றும் பாரிய ஊழல் மோசடிகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் அமெரிக்காவிற்குள் நுழைவதற்கு எதிராகத் தடைவிதிக்கமுடியும் என்பதுடன் அவர்களின் சொத்துக்களையும் முடக்கமுடியும்.

இந்நிலையில் குறிப்பாக இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப்போரின்போது இராணுவத்தின் 58 ஆவது படையணியின் கட்டளைத்தளபதியாகச் செயற்பட்ட சவேந்திர சில்வா மீதான நம்பத்தகுந்த மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களின் விளைவாக அவருக்கு எதிராக அமெரிக்கா பயணத்தடையை விதித்துள்ளது. எனவே இவ்விடயத்தில் அமெரிக்காவைப் பின்பற்றிச் செயற்படவேண்டியது அவசியமாகும் என்று அவ்விரு பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்டிக்காட்டியுள்ளனர்.

'சவேந்திர சில்வாவிற்கு எதிராக அமெரிக்கா பயணத் தடையை விதித்துள்ளது. இந்நிலையில் பிரிட்டனும் அதனைப் பின்பற்றிச் செயற்படவேண்டிய தருணம் இதுவாகும். அதன்மூலம் நாம் மனித உரிமை மீறல்களை ஒருபோதும் சகித்துக்கொள்ளமாட்டோம் என்பதை வெளிக்காட்டவேண்டும்' என்று தெரேஸா வில்லியர்ஸ் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இலங்கை இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவிற்கு எதிராகத் தடைவிதிப்பதற்கு ஆதரவளிக்குமாறு பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் சாரா ஜொன்ஸ் அந்நாட்டு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

மனித உரிமைகள் உறுதிசெய்யப்படுவதற்கான தலைமைத்துவத்தை பிரிட்டன் வழங்கவேண்டும். பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கான செயல்வடிவிலான நடவடிக்கைகளை தற்போதைய தேவையாக இருக்கின்றன. இலங்கையிலும் உலகம் முழுவதிலும் வாழும் தமிழர்களுக்காக நாம் அதனைத் தொடர்ந்து வலியுறுத்த வேண்டும் என்று சாரா ஜொன்ஸ் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பூஜித்...

(தொடர்ச்சி)

தொடர்பில் குற்றவியல் பொறுப்புச் சாட்டப்பட்டு, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில், எதிர்வரும் 29 ஆம் திகதி நிங்கனன்று சாட்சியமளிக்க வருமாறு தற்போதைய பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்னவுக்கு மேல் நீதிமன்றம் அறிவித்தல் அனுப்பியுள்ளது.

இந்த விவகாரத்தில் தொடரப்பட்டுள்ள வழக்குகளை விசாரிக்க விஷேட ட்ரயல் அட்பார் நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த வழக்குகளானது கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலல்லே தலைமையிலான, மேல் நீதிமன்றின் ஆதிநிய பட்டபெந்திகே மற்றும் மொஹம்மட் இல்லதீன் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன் விசாரணை நேற்று 4 ஆவது நாளாக விசாரணை செய்யப்பட்ட போதே இந்த அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டது.நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, வழக்குத் தொடுநர் சட்ட மா அதிபர் சார்பில் மன்றில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நிலீப பீரிஸ், வழக்கில் 1214 ஆவது சாட்சியாளரான தற்போதைய பொலிஸ் மா அதிபரை சாட்சியம் வழங்க அடுத்த வழக்குத் திகதியில் மன்றில் ஆஜராக அறிவித்தல் பிறப்பிக்குமாறு கோரினார். அதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் வழக்கை எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து அன்றைய தினம் மன்றில் ஆஜராக பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்னவுக்கு உத்தரவிட்டது.

7 மில்லியன்...

(தொடர்ச்சி)

எதிர்க்கட்சி உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கமத்தொழில் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு ஆகியவற்றின் மீதான குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

விவசாயிகளுக்கு இலவசமாக உரம் வழங்குவதாகவே அரசாங்கம் தெரிவித்திருந்தது. ஆனால் இன்று பணம் கொடுத்து வாங்கவும் உரம் இல்லை. இரசாயன உரத்துக்கு திடீரென தடைவிதித்ததாலே இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது. அரசாங்கத்தின் பிழையான தீர்மானம் காரணமாக விவசாயிகளுக்கு இன்று விவசாயம் விரக்தியாகி இருக்கின்றது. விவசாயத்தை பாதுகாப்பதற்காக நிலம்தித் வைக்கும் உருவ பொம்மையை அவர்கள் எரித்து வருகின்றனர். ஆனால் அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயை நிலம்தித் வைத்திருக்கின்றது. அதனால் அமைச்சரின் உருவ பொம்மையை விவசாயிகள் எரித்து வருகின்றனர். ஆனால் அரசாங்கம் விவசாயிகளுக்கு பல வாக்குறுதிகளை வழங்கியே ஆட்சிக்கு வந்தது. வாக்குறுதி அளித்த எதனையும் அரசாங்கம் விவசாயிகளுக்கு செய்யவில்லை. இரசாயன உரத்தை தடைசெய்ததன் விளைவாக எதிர்வரும் மார்ச், ஏப்ரல் மாதமாகும்போது நாட்டில் பாரியளவில் உற்பத்தி வீழ்ச்சியடையும். எனவே அரசாங்கம் தடைசெய்த இரசாயன உரத்தை மீண்டும் அனுமதியளிக்க வர்த்தமானி அறிவிப்பை வாபஸ் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றார்.

ஆளுந்தரப்பு...

(தொடர்ச்சி)

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை, கமத்தொழில் அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

விவசாயத்துறை அமைச்சர் நேற்று சபையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறித்து சபையில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். அவர் பாவித்த வாகனங்கள், அவரது வீட்டின் நீளமும் அகலமும் குறித்தெல்லாம் பேசினார். அதேபோல் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவருக்கு முன்னர் ஆட்சிசெய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தவறான செயற்பாடுகள் குறித்து குற்றம் சுமத்தினார். அவர் விமானங்களை பாவித்த முறைமை, ஹெலிகொப்டர்களை பாவித்த விதம் குறித்தெல்லாம் பேசியுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தற்போதைய ஜனாதிபதி எவ்வாறு மக்கள் பணத்தை வீணாக்கி துஷ்பிரயோகம் செய்கின்றார் என்ற காரணிகளை கூறுகின்றார்.

ஆகவே இந்த சபையிலிருந்து நடப்பவற்றை பார்த்துக் கொண்டிருந்தால் இந்தநாட்டிற்கு என்னசாபக்கேடு ஏற்பட்டுள்ளது என்பதை அறிந்துகொள்ள முடியும். இந்த குப்பைகளை மேலும் கிளறினால் அதிகமாக நாற்றம் வீசும் என்பதையும் இவர்கள் இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்த குப்பைகளை அனைவரும் ஒன்றிணைந்து மூடிவிடுவோர்கள், அதற்கான பொது இணக்கப்பாடு ஒன்றினை இவர்கள் எட்டுவார்கள் என்பதே எமக்கு தெரிகின்றது. ஏனென்றால் இந்த குப்பையை மேலும் கிளறப்போனால் அளவுக்கு அதிகமாக காரணிகள் வெளிவரும். ஆனால் இந்த குப்பைகளை நீங்கள் கிண்டுவதையே நாம் விரும்புகின்றோம் என்றார்.

நியாயமான...

(தொடர்ச்சி)

பிரித்தானியா செயற்பட்டதைப் போன்று தமிழ் மக்கள் நியாயமான அரசியல் தீர்வினைக் காண்பதற்காக கூட்டு ஒத்துழைப்பு தொடர்ந்தும் வழங்கப்படும் என்று அந்நாட்டின் பொதுநலவாய வெளிவிவகாரங்கள் மற்றும் மனித உரிமைகள் அமைச்சரும் பாலியல் வன்முறைகளைத் தடுப்பதற்கான பிரதமர் பொறிஸ் ஜோன்சனின் விசேட பிரதிநிதியும், தெற்காசிய மற்றும் ஐநா விடயங்களை கையாள்பவருமான தாரிக் அஹமட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க, கனேடிய பயணங்களை நிறைவு செய்து கொண்டு பிரித்தானியாவுக்குச் சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும், யாழ்.பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனுக்கும், பிரித்தானிய அமைச்சர் தாரிக் அஹமட்டுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றிருந்தது. இச்சந்திப்பின்போதே மேற்கண்டவாறு அமைச்சர் தாரிக் அஹமட் தெரிவித்துள்ளார்.

அச்சந்திப்பு தொடர்பில், சுமந்திரன் எம்.பி. பிரித்தானியாவில் இருந்தவாறே வீரகேசரிக்கு தெரிவிக்கையில்,

பிரித்தானிய வெளிவிகவார அமைச்சருடனான சந்திப்பானது மிகவும் ஆக்கபூர்வமாக அமைந்திருந்தது. அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் இடம்பெற்ற முக்கிய சந்திப்புக்களின் தொடர்ச்சியாகவே இந்தச் சந்திப்பும் நடைபெற்றிருந்தது. குறித்த சந்திப்பின்போது, இலங்கை அரசாங்கத்தினை பொறுப்புக்கூறலை செய்ய வைப்பதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் பிரித்தானியா இணை அனுசரணை நாடுகளின் தலைமையில் 46/1 பிரேரணையை முன்தரத்தி நிறைவேறியமைக்காக தமிழினத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்திருந்தேன். அத்துடன் பொறுப்புக்கூறல் விடயத்தில் நீதி நிலைநாட்டப்படும் வரையில் பிரித்தானியாவின் தொடர்ச்சியான வகிபாகம் தீர்க்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தேன்.

அதேநேரம், அமெரிக்கா மற்றும் கனடாவில் நடைபெற்ற பேச்சுக்களின் அடிப்படையில் தமிழ் மக்களுக்கான ஒரு நியாயமான அரசியல் தீர்வினை பெற்றுக்கொள்வதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் எம்மால் எடுத்துரைக்கப்பட்ட விடயங்களை அவருடன் (அமைச்சர் தாரிக் அஹமட்) பகிர்ந்து கொண்டேன். இந்த விடயத்தில் அடுத்து வரும் காலத்தில் அமெரிக்க, இந்திய கூட்டில் புதியதொரு கொள்கையை வகுப்பதற்கான ஏதுநிலைகள் இருப்பதை குறிப்பிட்டுக்கூறியதோடு, கனடா பிரித்தானியா உள்ளிட்ட நாடுகள் அவ்விடயத்தில் பூரணமான பங்களிப்பினை வழங்க வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு என்பதையும் கூறினேன். அதன்போது, இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறலைச் செய்வதற்காக பிரித்தானியா எவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையில் செயற்பட்டதோ அதேபோன்று, அரசியல் தீர்வு விடயத்திலும் அவ்விடயத்தில் கரிசனை கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் ஏனைய நாடுகளுடனும் கூட்டிணைந்து செயற்படுவதற்கான ஒத்துழைப்புக்களை பிரித்தானியா வழங்கும் என்று அவர் (அமைச்சர் தாரிக் அஹமட்) தெரிவித்தார். அத்துடன், இச்சந்திப்பில், அண்மைக்காலத்தில் வடக்கு, கிழக்கு மற்றும் இலங்கையின் அரசியல் நிலைமைகள் உட்பட தமிழ் மக்கள் முகங்கொடுத்துவரும் பிரச்சினைகள் பற்றியும் கவனத்திற்கொள்ளப்பட்டது என்றார்.

காந்தியின்...

(தொடர்ச்சி)

ஞாபகார்த்தமாக இந்த சபையில் சமர்ப்பிக்கின்றேன் என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பி.யும் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கமத்தொழில் அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சு உள்ளிட்ட 3 இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

இவ்வாரம் வடகிழக்கு தமிழ் மக்களுக்கு ஒரு முக்கிய வாரம். வீரமறவன் அடைந்த மாவீரரை நினைவுறுத்தும் வாரம். அதுவும் இன்றைய தினம் இவ்வாரத்தினுள் அதி விசேட நினம். இந்தநாளில் பிரிட்டிஷாருக்கு எதிராக ஆயுதம் தாங்கிய சுபாஷ் சந்திரபோஸ் பற்றி அஹிம்சா வாதியான மகாத்மா காந்தி கூறிய வாசகங்கள் சிலவற்றை உங்களுக்கு நினைவுறுத்த விரும்புகின்றேன்.

"நேதாஜியின் தேசப்பற்று எவர்க்கும் குறைந்ததல்ல. அவரின் வீரம் அவரின் சகல காரியங்களிலும் பளிச்செனப் பிரதிபலிக்கின்றன. அவர் உன்னத குறிக்கோள்களை முன்வைத்தார். ஆனால் தோல்வியுற்றார். ஆனால் யார் தான் தோல்வியைத் தழுவாதவர்கள்?" இன்னொரு சந்தர்ப்பத்தில் காந்தியவர்கள் பின்வருமாறு கூறினார்கள். "இந்தியாவிற்கு ஆற்றிய அவரின் சேவையின் நிமித்தம் நேதாஜி என்றென்றும் சிரஞ்சீவியாக மக்கள் மனதில் வாழ்வார்'

அஹிம்சையின் பால் ஈர்க்கப்பட்டவன் என்ற முறையில் மேற்கண்ட காந்திஜியின் வாசகங்களை இலங்கையில் வடக்கு, கிழக்கை மையமாக வைத்து அங்கு உதித்த வீரத் தமிழனின் இன்றைய பிறந்தநாள் அன்று அவர் ஞாபகார்த்தமாக சமர்ப்பிக்கின்றேன் என்றார்.

கண்ணீர் அஞ்சலி

மலர்வு உதிர்வு

01 25

08 11

1960 2021

அமரர் திருமதி கணேசன் நவனேஸ்வரி

நுவரெலியா, ஆவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய சீத்தா எலிய ஸ்ரீ சீதையம்மன் ஆலய நிர்வாக சபை காப்பாளர் திருகணேசன் அவர்களின் மனைவியான மருதை நவனேஸ்வரி அவர்கள் கடந்த 25.11.2021 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இலக்கம் 26, நவம்கொட, ஆவேலியா, நுவரெலியா இல்லத்தில் வைக்கப்பட்டு 27.11.2021 இன்று சனிக்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்று காலை 10.00 மணியளவில் நுவரெலியா பொது மயானத்திற்கு எடுத்து சென்று நல்லடக்கம் செய்யப்படும்.

அன்னாரின் மறைவையொட்டி துயரத்தில் வாடும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நுவரெலியா ஆவேலியா
ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய சீத்தா எலிய ஸ்ரீ சீதையம்மன் ஆலய பரிபாலன சபையினர்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு இறப்பு

08 08

03 12

1950 2020



திரு. பரமசிவம் சுப்பரமணியம் முதலியார்

திதி : 27.11.2021

அன்பு நிறைந்த தந்தையாய்
எங்களை எல்லாம் வழி நடத்தி
எமெக்கெல்லாம் துணையற்ற
இல் வாழ்க்கை துணைகளை தந்து
எம்மை நிறைவோடு வாழவைத்து விட்டு
எம்மிடம் சொல்லாமல் சென்றதேன்
நீங்கள் மண்ணை விட்டு மறைந்தாலும்
எம்மனதில் என்றும் நிறைந்திருப்பீர்கள்
ஒரு முறை வாராயீரே எம் துயர்த்தீர்க்க
இப்பூமியில் வாழும் வரை
உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனை அனுதினம் இறைஞ்சி நிற்கும்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தகவல் :- திரு.எஸ் சந்திரமோகன் (முதலியார்)
(Shanu Industries, Wattala)
இல.22/2C. அல்விஸ் வத்த. வேகந்த
தொ.இல: 077 2421669, 077 2261669

3ம் ஆண்டு நினைவு நாள்

இன்னுகை வாழ்வில் : 04.01.1929
முடிவில்லா நித்திய வாழ்வில் : 27.11.2018

திரு.கிங்ஸிலி இம்மானுவேல் பெனடிக்ற்

கண்முனே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முனியே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
பிள்ளைகள் சிறப்பாக வாழ
வழிகாட்டிய அன்புத் தந்தையே
உம் நினைவுடன் நாம் வாழும்வரை
நீங்களும் எம்முடன் வாழற்து
கொண்டிருக்குமிரகள்.

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே
என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறந்தாலும் வாழ்வார்"

என்றும் உம் நினைவுடன் வாழும் குடும்பத்தினர்.

சிவமயம்

உத்திரகிரியை பத்திரிகை

அன்புடையீர்!
நிகழும் பிலவ வருடம் ஐப்பசி மாதம் 27ஆம் நாள் 13.11.2021 சனிக்கிழமை மாலை 6.41 மணியளவில் தசமி திதியில், சதயம் நட்சத்திரத்தில்
திருச்சி மாவட்டம் காவிரிப்பட்டி கிராமம் காலஞ்சென்ற
திரு.க.மருதைப்பிள்ளையின் மனைவியும்
(கொல்லாந்தை மோகனா ஸ்டோர்ஸ் உரிமையாளர்)
எங்கள் அன்புத்தாயாருமான
திருமதி ம.பாப்பு அம்மாள்
அவர்கள் இறைவன் திருவடியடைந்ததை முன்னிட்டு 28.11.2021 நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை எமது இல்லத்தில் அந்திசாஸ்தி நிமித்தம் மறுநாள் 29.11.2021 திங்கட்கிழமை காலை கண்டி தென்னங்கும்புர ஆற்றங்கரையில் கருமகாரியமும் நடைபெறும் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மகன்கள் : ம.முரளிதரன், ம.ஸ்ரீதரன்
மகள் : பா.மோகனா தேவி
071 1919786,
077 5510325

இங்ஙனம்
மருமகன்: மு.பாலராஜ்
மருமகன்: ஸ்ரீ.தவண்யா
மூ.யுமுனா
மற்றும் பேரப்பிள்ளைகள்

இல.14, Lady Torighton Road, Kandy (Arupala Road)

வீரகேசரி சிறுவிளம்பரங்கள்

ஜோதிடம்

பிரிவால் வேதனையா நல்ல நட்பை இழந்து விட்டீர்களா? வீண் கவலை வேண்டாம் நீங்கள் நினைப்பது நடக்கும் கைரேகை, எண் ஜோதிடம், ஜாதகப்பிரசன்னம் மூலம் தொழில் நஷ்டம், திருமணம், வெளிநாட்டு பயணம், அதிர்ஷ்டம், கடன் தொல்லை நீங்க மற்றும் எதிர்காலத்தை தெளிவாக அறிந்து நிம்மதியுடன் வாழ ஜோதிட மனவள ஆலோசகர் சாமி கங்காதரன் ஐயாவை தொடர்பு கொள்ளுங்கள். 077 2105957 இரகசியம் நூற்றுக்கு நூறு வீதம் பாதுகாக்கப்படும். No. 145/1, Galle Road, Colombo - 06. 0777 310088, 011 2055655

சேவை

நீங்கள் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? கவலையை விடுங்கள் நாங்கள் மீட்டு சந்தைப் பெறுமதி அவ்விடத்திலேயே தரப்படும். 077 6151283

சேவை

நீங்கள் அடகு வைத்து மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகைத்தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சினேக பூர்வமான சேவை. AAA Gold Center. 076 5684346

தேவை

Wanted Sales Boys and Girls and Field worker with Bike Licences. Contact - 077 9046514, 075 2221150, 011 2472666. Address: Independent Trading Company, No.51, 1st Cross Street, Colombo - 11

கடை வாடகைக்கு

நீர்கொழும்பில் கடை வாடகைக்கு கொடுக்கப்படும். வாகன Showroom, பார்மசி, சுப்பர்மார்க்கட்டுக்கு உகந்தது, A/C, பார்க்கிங் வசதி, கெமரா வசதிகளும் உண்டு. 076 3100142

தேவை

பேக்கரிக்கு கறி செய்ய ஆள் தேவை. வயது 25 - 40 வரை. சம்பளம் 1800/= சாப்பாட்டுக்கு 400/= தங்குமிடமும் வழங்கப்படும். தொடர்புகொள்ளவும். 076 2658003

தேவை

பத்தரமுல்ல உணவகமொன்றுக்கு 35 வயதிற்கு குறைந்த காசாளர் தேவை. 077 3409108, 077 7340748

வீடு/ காணி விற்பனைக்கு

தெஹிவளை Marine Drive இல் Barracuda Restaurant முன்பாக அழகிய கடல் முகப்புடன் 6 ஆம் மாடியில் 2 படுக்கையறைகள், 1 குளியலறை, 2 Lifts, Gym சகல வீட்டு உபகரணங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: Shegar: 077 1434343. விலை - 19.5 மில்லியன்

உங்களுக்கு அதிர்ஷ்டம்

கவலைப்படாதீர்கள்! உங்களின் வாழ்க்கையில் நீங்கள் என்றும் அதிர்ஷ்டமுடன் வாழலாம். உங்களுக்கு ஏற்படும் எல்லா விதமான பிரச்சினைகளுக்கும் நேரில் அல்லது தொலைபேசி மூலமும் தொடர்பு கொள்ளலாம். தபால் சேவையும் உண்டு. இரகசியம் பேணப்படும். 62 வருட ஆராய்ச்சியும் அனுபவமும் உள்ள உலகப்புகழ் பெற்ற உயர்வான அதி உத்தம மாமனிதர், அதிநவீன நிபுணர். தேசபந்து, தேசகீர்த்தி மௌலானா, மன்பஹா, அல்ஹாஜ், கலாநிதி ரசூல் மன்சூர் ஜேபி, Dr.Razul Manzurr, J.P. Dehiwala. Mobile: 077 2037871, 077 0809623, 076 2289457, 070 1364101

தேவை

பத்தரமுல்ல உணவகமொன்றுக்கு ப்ரைட் ரைஸ், சென்விச், பர்கர் போடுவதற்கு கோக்கிமார் மற்றும் அனுபவமுள்ளவர்கள் தேவை. 077 3409108, 077 7340748

தேவை

பஸ்யால பிரதேசத்தில் உள்ள முட்டை உற்பத்தி செய்யும் பாம்க்கு ஆண்/ பெண் வயது 30 - 55 வரை அடிப்படை சம்பளம் 35,000/= மேல். மேலதிக தகவல்களுக்கு: 077 7355722, 071 1442816

வாடகைக்கு

வெள்ளவத்தையில் அறைகள் நாள் வாடகைக்கு (Attached Bathroom) 1500/= முதல். ராமகிருஷ்ணா பெற்றோல் செட் அருகில். 077 7967878

தேவை

கொழும்பு 11 இல் அமைந்துள்ள மொத்த புடவை விற்பனை நிலையத்திற்கு (Wholesale Textiles), விற்பனையாளர் (Sales Man), பில்லிங் கிளார்க் ஆண்/ பெண் (Billing Clerk), Computer Operator தேவை. மாத சம்பளம் பெண்கள் 30,000/= முதல். ஆண்கள் 36,000/= முதல் 50,000/= வரை ஞாயிறு மற்றும் போயா விடுமுறை. தங்குமிட வசதி உண்டு. மலையகத்தவர்கள் விரும்பத்தக்கவர்கள். மூல சான்றிதழ்களுடன் நேரில் வரவும். இல.7, மூன்றாம் குறுக்குத்தெரு, கொழும்பு - 11

தேவை

கொழும்பில் பிரசித்தி பெற்ற ஹோட்டலுக்கு உதவி கோக்கி ஒருவர் உடனடியாக தேவை. 077 5731573. தொடர்பு கொள்ளவும்.

தேவை

கொழும்பிலுள்ள எங்களது தொழிற்சாலையில் மாதம் 40,000/= - 60,000/= வரை சம்பளத்துடன் வேலைவாய்ப்பு நாள், கிழமையடிப்படையிலும் சம்பளம் வழங்கப்படும். உடன் ஆண், பெண் இருபாலாரும் தேவை. தொடர்புகளுக்கு - 076 4217228, 075 3270182, 077 8672816, 072 8684986

தேவை

கொழும்பு வீடுகளில் தங்கியிருந்து சமையல் வீட்டு வேலைக்கு பெண்கள் தேவை. சம்பளம் 30,000/= - 35,000/= வழங்கப்படும். தோட்ட வேலைக்கு ஆண்கள் தேவை. 071 7539333 ஏஜன்சி

வாடகைக்கு

இல.68/2, Paman Kade Rd, வெள்ளவத்தையில் (W.A.De Silva Mawatha முடிவில்) Malkey Rent a Car ஸ்தாபனத்திற்கு அருகாமையில் மூன்று படுக்கையறைகள், மூன்று குளியலறை வசதியுடன் கூடிய தனி வீடு உடனடி வாடகைக்கு உண்டு. ஆதித்தன் - 076 9485799, 076 1168859

தேவை

வெள்ளவத்தையில் இயங்கிவரும் பிரபல்யமான புடவைக்கடைக்கு அனுபவமுள்ள, அனுபவமற்ற ஆண், பெண் வேலையாட்கள் உடனடியாக தேவை. நல்ல சம்பளம் மற்றும் வெகுமானங்கள் வழங்கப்படும். 077 6092228/ 077 4238226

தேவை

வெள்ளவத்தையில் Pharmacy இற்கு அனுபவமுள்ள Staff (Sales, Cash, Accounts) தேவை. G.C.E (A/L) படித்தவர்களுக்கும், அனுபவமுள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். தொடர்பு - 077 3013774

தேவை

கொழும்பில் உள்ள லொன்றி (Loundry) இற்கு வேலையாட்கள் தேவை. சம்பளம் நாளொன்றுக்கு 1500/= முதல், தங்குமிடம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு - 076 6997362

காணி விற்பனைக்கு

வைத்தியா ரோட்டில் 10 பேர்ச்சஸ் சதுர வடிவமான காணி விற்பனைக்குண்டு. விலை பேசித்தீர்மானிக்கப்படும். தரகர்கள் தேவையில்லை. தொடர்பு - 076 3100142

தேவை

Type setter, Minder, Binder, பொது வேலையாள் தேவை. ஆங்கில அறிவு விரும்பத்தக்கது. பகுதி நேரம், முழு நேரம். தொடர்பு - 0777 309261 WhatsApp இலும் தொடர்புகொள்ளலாம். Jasmine Printers

குத்தகைக்கு

பம்பலப்பிட்டி காலி வீதிக்கு முகப்பாக உள்ள கட்டிடமொன்றின் முதலாம் மாடி குத்தகைக்கு. 800 சதுர அடி, 1 குளியலறை, ஜெனரேட்டர் வசதி, வாகனத்தரிப்பிட வசதியுடன். ரூபா.95,000/= O.N.O. Call : 071 3015990 Between 10 am and 6 pm

தேவை

கொழும்பு 11, Main Street பிரபல புடவை கடைக்கு Salesman, Sales Girls மற்றும் பெக்கிங் கவுண்டர் வேலைக்கு ஆட்கள் தேவை. நேரில் வரவும். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். தொடர்பு - 077 3032120, 011 2332833

வாடகைக்கு

ஆமர் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய 1200 சதுர அடி கொண்ட களஞ்சியசாலை (Store) வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். 076 0628555

தேவை

புறக்கோட்டையில் இயங்கும் ஆடை காட்சியறை நிலையத்திற்கு ஆண், பெண் தேவை. G.C.E O/L பயின்ற ஆங்கில அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது. ஞாயிறு, போயா தினங்களில் விடுமுறை. வேலை நேரம் 9.00 am தொடக்கம் 6.00pm வரை. தொடர்பு - 077 4713323, 077 6703344

வீடு தேவை

யாழ்ப்பாணத்துக்குள் 02 அறை சமையலறையுடன் கூடிய வீடு தேவைப்படுகின்றது. தொடர்பு - 077 4949008

தேவை

கொழும்பில் அமைந்துள்ள தனியார் நிறுவனமொன்றிற்கு 30 வயதுக்குட்பட்ட கணனி அறிவில் தேர்ச்சி பெற்ற கொழும்பை வசிப்பிடமாகக் கொண்ட Multi Duty Clerk ஆண் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம். சகல சான்றிதழ்கள் கிராம சேவகர் சான்றிதழ்களுடன் தொடர்பு கொள்ளவும். 071 8781781

தேவை

கொழும்பில் இயங்கும் தொழிற்சாலைக்கு 55 வயதுக்கு இடைப்பட்ட ஆண் வேலையாட்கள் தேவை. சம்பளம் 50,000/= ரூபாய் வரை வழங்கப்படும். உணவு, தங்குமிட வசதி உண்டு. கிராம சேவகர் சான்றிதழ் கட்டாயம். தொடர்பு கொள்ளவும். 071 7715715

தேவை

No.478 A 1/1, 2nd Division, Maradana, Colombo - 10 இல் உள்ள நிறுவனத்திற்கு படித்த நன்கு அனுபவமுள்ள பெண் Accountant மற்றும் Office Clerk தேவை. தொடர்பு - 077 3242757

வீடு வாடகைக்கு

2 படுக்கையறைகளை கொண்ட மேல் மாடி அப்பார்ட்மன்ட் சகல வசதிகளுடன். சிறிய குடும்பத்திற்கு பொருத்தமானது. மாதமொன்றுக்கு 30,000/=. பார்க்கிங் வசதி இல்லை. ஹுசைன், இல.4, யசோதரா மாவத்தை, சரணங்கர வீதி, களுபோவில, 077 5229662

தேவை

புறக்கோட்டையில் இயங்கும் மொத்த வியாபார புடவைக் கடைக்கு Store வேலைக்கு (கல்வித் தகைமை அவசியமில்லை), விற்பனையாளர், டிரைவர் தேவை. கொழும்பை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது. 011 2336218

தேவை

கொழும்பிலுள்ள பிரசித்திப்பெற்ற Restaurant இற்கு Indian Cook, Chinese Cook, Bun Maker, ஜுஸ் மேக்கர், Restaurant Manager, Restaurant Captain, வெயிட்டர், உதவியாளர், பாதுகாப்பு உத்தியோகத்தர், Cashier, Phone Operator, கிச்சன் ஹெல்ப்பர் தேவை. 077 9621653/ 071 4776927

தேவை

திறமையான மேசன் பாஸ் ரூ.3000/=, பணியாளர்கள் ரூ.2000/=, வெல்டிங் பாஸ் ரூ.3000/=, தச்சர்கள் ரூ.3000/= தேவை. நாளாந்தம் செலவுக்கான கொடுப்பனவு. வாராந்த சம்பளம். மஹுர கம. 077 3468310, 070 3100270

தேவை

ஹோமாகம, பனாகொடை Templeburg industrial இல் அமைந்துள்ள உற்பத்தி நிறுவனமொன்றுக்கு பயிற்சியுள்ள / பயிற்சியற்ற பணியாளர்கள் உற்பத்தி பிரிவுக்கு தேவை. 18 - 32 வயதுக்குட்பட்டவர், சிறந்த சம்பளம் மற்றும் சலுகைகள். தொடர்புகளுக்கு - 077 8869803

உங்கள் சகலவிதமான விளம்பர தேவைகளுக்கும் அழைக்கவும்
011 7322738, 011 7322735, 011 7322739

தேவை

கொழும்பு-15ல் அமைந்துள்ள பிரபலமான கோவிலுக்கு
- குருக்கள்
- உதவிக்குருக்கள்
- மடப்பள்ளி ஐயர்

உடனடியாக தேவை.
தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
100, கோவில் வீதி, மோதரை, கொழும்பு-15.
Tel: 0112 524 014 / 0753 776699 / 0777 867 867
SKY LINE

தேவை

நுவரெலியா நகரிலுள்ள பிரபல ஜவுளி மாளிகைக்கு
சேல்ஸ் மேன் (Sales Man),
சேல்ஸ் கேர்ள்ஸ் (Sales Girls).
சோரூம் கெசியர் (Show Room Cashier)
தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு
077 3607463

பெயர் மாற்றம்

கிண்ணியா, ஆலங்கேணி - 02 எனும் முகவரியைச் சேர்ந்த தேசிய அடையாள அட்டை இல **810522844V** கொண்ட **சித்திரிதவேல் பரமேஸ்வரி** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **சித்திரவேல் பரமேஸ்வரன்** என மாற்றிக்கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

2021.11.25 சித்திரவேல் பரமேஸ்வரன்

அனுபவமுள்ள சமையலாளர்கள் தேவை

யாழ்நகரில் அமைந்துள்ள பிரபல நட்சத்திர விடுதியொன்றிற்கு அனுபவமுள்ள
Indian, Chinese, western, Pastry சமையலாளர்கள் தேவை
தங்குமிடம் மற்றும் உணவு இலவசமாக வழங்கப்படும்
தொடர்புகளுக்கு 0766248529 0779261780

இயற்கையின் ரம்மியமான சூழலில் மகிழ்ச்சியாக பொழுதை கழியுங்கள்.

விசேட விலைக்கழிவுகள்!

குளிரூட்டப்பட்ட ஆடம்பர திருமண மண்டபமும், தேன் நிலவு அறையும் இலவசம்!
(100 பேருக்கு மேல் உணவுத் தொகுதி Package எம்மிடம் ஓடர் பெறுபவர்களுக்கு மட்டும்)

- Swimming pool - 1 நபருக்கு ரூபா.400/- 2 மணித்தியாலங்களுக்கு
- ஆடம்பர குளிரூட்டப்பட்ட அறைகள்
  - Single Room 4000/=
  - Double Room 5000/=
  - Triple Room - 6000/=
  - Family Room - 7000/=

1 டிசம்பர் முதல் 15% விலைக்கழிவுண்டு
- பிறந்தநாள் வருட இறுதி நிகழ்வுகளுக்கு (out party) வெளிப்பகுதியில் ஒழுங்கு செய்து தரப்படும்.

மின்னஞ்சல்:hotelsunnyfish@gmail.com
தொ.பே:065 2052035, 077 4677201

அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் படி கீழ் குறிப்பிடப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் :- லக்ரொன் (பிரைவட்) லிமிட்டட்
பதிவு இல :- PV 00248254
பதிவு முகவரி :- இல.162/230, மாதம்பிட்டி வீதி, கொழும்பு - 15

கம்பனி செயலாளர்
சுலேக்கா சஞ்சீவனி

Vacancy - Quantity Surveyor

வடமாகாணம் மற்றும் இலங்கையின் முன்னணி நிறுவனம் ஒன்றிக்கு 4 வருட அனுபவமுள்ள **B.SC Quantity Surveyor** தேவை.

குறிப்பு: கட்டட துறையில் முன் அனுபவமும் **Pre Tender & Post Tender** இலும் அனுபவமும் உள்ளவர்கள் வரவேற்கத் தக்கது.

Contract Number: 021 222 4840, 077 220 0546 (Office Time Only)
Address : No.469 Kandy Road, Jaffna.
E.mail Id : Adminjaffna@sanken.lk

உடனடி வேலை வாய்ப்பு

யாழ். நகர் சுண்டுக்குளியை அண்மித்த பிரதேசத்திலுள்ள ஹோட்டல் ஒன்றிற்கு முழுநேர, பகுதிநேர பணியாளர்கள் தேவை மேலாளர், Room Assistant (அறை உதவியாளன்) ஆண்/ பெண் துப்பரவு பணியாளர் தலா ஒருவர் தேவை. பின்வரும் +44 7397 910 191 என்ற இலக்கத்திற்கு Whatsup/ Viber மூலமாகவோ பிற்பகல் ஒரு மணிக்குப்பின் தொடர்பு கொள்ளவும்.

நம்பகத்தன்மையான நடைமுறை தகவல்கள் துரிதமான விபரங்களுடன்
www.virakesari.lk

விளையாட்டு

ஆஸி. தலைவராகிறார் கம்மின்ஸ்

அவுஸ்திரேலிய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவராக வேகப்பந்து வீச்சாளர் பட் கம்மின்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார். அதன்படி 65 வருடங்களுக்குப் பின் அவுஸ்திரேலிய டெஸ்ட் அணியின் தலைவராக நியமிக்கப்படும் வேகப் பந்து வீச்சாளர் என்ற பெருமையை கம்மின்ஸ் பெற்றுள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் கற்றுப் பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. ஆஷஸ் தொடரின் முதல் இரு டெஸ்ட் போட்டிக்கான 15 பேர் கொண்ட அவுஸ்திரேலிய அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் பாலியல் சர்ச்சை காரணமாக ஆஸி. அணித் தலைவர் டிம் பெய்ன் தலைவர் பதவியிலிருந்து விலகிய நிலையிலேயே புதிய தலைவராக பட் கம்மின்ஸ் நியமிக்கப் பட்டுள்ளார்.

நியூஸியின் தொடக்க ஜோடியை வீழ்த்த திணறும் இந்திய பந்து வீச்சாளர்கள்

இந்தியா–நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டி கான்பூரில் நடைபெற்று வருகிறது. ஷ்ரேயாஸ் அய்யர் அறிமுக போட்டியிலேயே சதம் அடிக்கில் 52 மற்றும் ஜடேஜா 50 ஓட்டங்களைப் பெற இந்தியா 111.1 ஓவர்களில் 345 ஓட்டங்களைக் குவித்தது.

நியூஸிலாந்து அணியில் டிம் சௌதி 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஜேமிசன் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

பின்னர் நியூஸிலாந்து அணி முதல் இன்னிங்ஸை தொடங்கியது. லதம், வில் யங் ஆகியோர் தொடக்க வீரர்களாக களமிறங்கினர். இருவரும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இந்திய அணியின் பந்து வீச்சாளர்களால் இந்த ஜோடியை பிரிக்க எடுத்த முயற்சிகள் அனைத்திற்கும் பலன் கிடைக்கவில்லை.

இதனால் இருவரும் அரைச்சதம் அடித்தனர். ஐந்து பந்து வீச்சாளர்களையும் சோர்வடையச் செய்த நியூஸிலாந்து தொடக்க ஜோடி விக்கெட்டை இழக்காமல் 57 ஓவர்களில் 129 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் 2ஆவது நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

லதம் 50 ஓட்டங்களுடனும், வில் யங் 75 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இளையோர் பகிரங்க கொல்ப் சம்பியன்ஷிப் இந்திய டுபாய் வீரர்களும் பங்கேற்பு

படப்பிடிப்பு: எஸ்.எம்.சுரேந்திரன்

இலங்கை இளையோர் பகிரங்க கொல்ப் சம்பியன்ஷிப் எதிர்வரும் டிசம்பர் மாதம் ஆரம்பமாகின்றது. இந்தத் தொடரில் இந்தியா மற்றும் டுபாய் நாடுகளின் வீர ,வீராங்கனைகளும் பங்கேற்கவுள்ளனர்.

கொரோனா தொற்று பரம்பல் காரணமாக ஒரு வருடம் தடைப்பட்டிருந்த போட்டிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்றன. இலங்கை இளையோர் பகிரங்க கொல்ப் சம்பியன்ஷிப் எதிர்வரும் டிசம்பர் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதிவரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் தொடருக்கு இவ்வாண்டும் பிரீமா சிலோன் அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

அடிமட்டத்தில் இவ்விளையாட்டினை மேம்படுத்துவதில் இலங்கை கொல்ஃப் யூனியன் மேற்கொள்ளும் திட்டங்களின் ஊடாக முக்கியமாக இவ்விளையாட்டு பிரபல்யம் அடைந்து வருவதை காண முடிகின்றது. எதிர்காலத்தில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பிரதிநிதித்துவப்படுத்தும் இளம் திறமைசாலிகளை அடையாளம் கண்டு அவர்களை மேம்படுத்தல் மற்றும் ஊக்கப்படுத்தும் நோக்கில் இத்தொடர் நடைபெறுவதாக இலங்கை இளையோர் கொல்ஃப் அபிவிருத்தி குழுவின் தலைவர் நிலோ ஜெயதிலக்க தெரிவித்தார்.

தென் ஆபிரிக்காவில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டதிலேயே மிக மோசமான புதிய வகை கொரோனா வைரஸ் தொற்று

விஞ்ஞானிகள் எச்சரிக்கை

தென் ஆபிரிக்காவில் தடுப்பூசி மருந்துகளுக்குத் தாக்குப்பிடித்துப் பரவக் கூடிய திரிபுநிலைக்குள்ளான புதிய வகை கொவிட்-19 கொரோனா வைரஸ் பரவி வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பில் உலகளாவிய விஞ்ஞானிகள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

30க்கும் மேற்பட்ட பிறழ்வுகளைக் கொண்டுள்ள பி.1.1.529 என உத்தியோகபூர்வமாகவும் நியூ என சில தரப்பினராலும் அழைக்கப்படும் இந்த வழமைக்கு மாறான திரிபுநிலைக்குள்ளான வைரஸானது உடலின் நோயெதிர்ப்பு சக்தியை வலுவிழக்கச் செய்து மேலும் தீவிரமாகப் பரவக்கூடிய ஆற்றலைக் கொண்டுள்ளதாக தோன்றுவதாக விஞ்ஞானிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இதுவரையும் தென் ஆபிரிக்காவில் இந்த வைரஸ் தொற்றுக்குள்ளான 77 பேர் கண்டறியப்பட்டுள்ளனர். அதேசமயம் பொட்ஸ்வானாவில் நால்வரும் ஹொங் கொங்கில் இருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த வைரஸ் தொற்று தற்போது இஸ்ரேலில் மலாவியிலிருந்து திரும்பிய ஒருவருக்கு ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. பெல்ஜியத்திலும் மேற்படி வைரஸ் தொற்றுக்குள்ளான இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்த வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களது உண்மையான தொகை மதிப்பிடப்பட்டதிலும் அதிகமாக இருக்கலாம் என நம்பப்படுவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். பிரித்தானியாவானது மேற்படி வைரஸ் தொற்றுத் தொடர்பில் தென் ஆபிரிக்கா, நமிபியா, லெஸோதோ, பொட்ஸ்வானா, எஸ்வாதினி மற்றும் சிம்பாப்வேயிலிருந்து வரும் விமானங்களை நேற்று வெள்ளிக்கிழமை நண்பகலிலிருந்து இடைநிறுத்தம் செய்துள்ளது. அதேசமயம் இஸ்ரேல் மேற்பட 6 நாடுகளிலிருந்து வரும் விமானங்களுக்கு மேலதிகமாக மொலாம்பிக்கிலிருந்து வரும் விமானங்களை நேற்று முன்தினம் வியாழக்கிழமை முதல் இடைநிறுத்தம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றியம், சிங்கப்பூர், ஜப்பான் மற்றும் இந்தியாவும் இது தொடர்பான கடும் கட்டுப்பாடுகள் குறித்து நேற்று வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளன.

தென் ஆபிரிக்காவில் கொவிட்-19 கொரோனா வைரஸ் தொற்றால் இதுவரை 89 ஆயிரத்து 771 பேர் பலியானதுடன் 29 இலட்சத்து 52 ஆயிரத்து 500 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். உலகளாவிய ரீதியில் இந்த வைரஸால் 52 இலட்சத்து 2 ஆயிரத்து 770 பேர் பலியானதுடன் 26 கோடியே 4 இலட்சத்து 73 ஆயிரத்து 494 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அதேசமயம் தொற்றுக்குள்ளானவர்களில் 23 கோடியே 54 இலட்சத்து 43 ஆயிரத்து 967 பேர் குணமடைந்துள்ளனர்.

உலகச் செய்திகள்

சுரங்க அனர்த்தத்தில் 51 பேர் உயிரிழப்பு

ரஷ்யாவில் நிலக்கரிச் சுரங்கமொன்றில் இடம்பெற்ற தீ அனர்த்தத்தில் பலியானவர்கள் தொகை 51 ஆக நேற்று வெள்ளிக்கிழமை உயர்ந்துள்ளது. முதல் நாள் வியாழக்கிழமை இரவு இந்த அனர்த்தத்தில் 52 சுரங்கத் தொழிலாளர்கள் பலியானதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் அவர்களில் ஒருவர் உயிருடன் இருப்பது பின்னர் கண்டறியப்பட்டுள்ளது.

சைபீரியாவிலுள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் காற்றோட்ட வசதிக்கான பகுதியில் நிலக்கரித் தூசு சேர்ந்து தீப்பற்றி எரிந்து சுரங்கத்திற்குள் புகை நிரம்பியதால் இந்த அனர்த்தம் இடம் பெற்றுள்ளது.

இதன்போது புகையால் மூச்சுத் திணறி மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்ட 6 மீட்புப் பணியாளர்கள் உட்பட 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

அந்த சுரங்கத்திற்குள் மேலும் பலர் சிக்கியுள்ள நிலையில் அவர்களில் எவரும் உயர் தப்பியிருக்க வாய்ப்பில்லை என அவசர சேவைப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

மொஸ்கோவின் கிழக்கே 3,500 கிலோ மீற்றர் தொலைவில் கெமெரோவோ பிராந்தியத்திலுள்ள லிட்ல்யஸனயா சுரங்கத்தில் இந்தத் தீ அனர்த்தம் இடம்பெற்ற போது அங்கு 285 பேர் பணியாற்றிக் கொண்டிருந்தாக தெரிவிக்கப்படுகிறது.

சொலமன் தீவுகளில் தொடரும் வன்முறைகளால் பதற்றநிலை

சொலமன் தீவுகளில் அந்நாட்டு பிரதமர் மனாஸ்ஸே சோகவாருக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொடர்ந்து மூன்றாவது நாளாக நேற்று வெள்ளிக்கிழமை வன்முறை ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

இந்நிலையில் பொலிஸார் வீதிகளில் களம் இறங்கி ஆர்ப்பாட்டக்காரர்களைப் பின்வாங்கச் செல்ல வைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

நேற்றைய தினம் சைனா டவுண் பிராந்தியத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களில் ஒரு பகுதியினர் கொள்ளையிடுவதிலும் கட்டிடங்களுக்கு தீ வைப்பதிலும் ஈடுபட்டதால் அங்கு பதற்றநிலை நிலவுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் பிரதமரின் தனிப்பட்ட இல்லத்தை நோக்கிச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர்.

இந்நிலையில் மக்கள் பதற்றநிலையைத் தூண்டும் நடவடிக்கையில் ஈடுபடக் கூடாது என பொலிஸ் ஆணையாளர் மொஸ்ரைன் மங்கவ வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் சோகவாரி பதற்றநிலையைத் தணிவிக்கக் கடந்த புதன்கிழமை அந்நாட்டு தலைநகரில் 36 மணி நேர ஊரடங்கு சட்டத்தைப் பிறப்பித்துள்ள போதும், அந்நகரில் தொடர்ந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

புதிய மாணவர் அனுமதி – 2022
அல் ஜாமிஅதுல் கௌஸிய்யா - الجامعة الغوثية
228/4 ஹில் வீதி, தெஹிவளை.

சுன்னத் வல்ஜமாஅத் கொள்கை அடிப்படையில் இயங்கும் எமது அரபுக் கலாபீடத்துக்கு ஹிப்ழு பிரிவிலும், கிதாபு பிரிவிலும் 2022 இல் மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் கலாபீட பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

தகைமைகள் - ஹிப்ழு பிரிவு

- குர்ஆனை சரளமாக ஓதத் தெரிந்திருத்தல் வேண்டும்
- தரம் 06 க்கு சித்தியடைந்தவராக இருக்க வேண்டும்
- 13 வயதுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்

தகைமைகள் - கிதாபுப் பிரிவு

- குர்ஆனை சரளமாக ஓதத் தெரிந்திருத்தல் வேண்டும்
- தரம் 09 க்கு சித்தியடைந்தவராக இருக்க வேண்டும்
- 16 வயதுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்

நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 28.11.2021, ஞாயிறு காலை 9.00 மணிக்கு நடைபெறும். தகுதியுள்ள மாணவர்கள் தரம் 6/ தரம் 9 சித்தியடைந்ததை அத்தாட்சிப்படுத்தும் பாடசாலை அதிபரின் கடிதத்துடனும் தமது பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்துடனும் நேரடியாக நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தெரிவுசெய்யப்படும் இரு பிரிவு மாணவர்களும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கும் அதன் பின்னர் உயர்தரப் பரீட்சைக்கும் தோற்றுவதற்கான பொதுக்கல்விக் கற்பித்தலும் இடம்பெறும்.

அனுகூலங்கள்:

- தகுதியும் அனுபவமும் வாய்ந்த உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயிற்சிபெற்ற விரிவுரையாளர்கள்
- நேர்த்தியான வகுப்பறை வசதிகள்
- சகல வசதிகளும் கொண்ட மாணவர் தங்குமிடத்திற்கான பல மாடிக் கட்டடத்தொகுதிகள்
- மாணவர்களின் மேலதிக தேடலுக்கான சகலவசதிகளும் கொண்ட நூலகம்
- மாணவர்களின் மேலதிக தொடர்பாடல் கற்கைக்கான கணனிப் பாடநெறி
- Spoken English பாட மேலதிக வகுப்புகள்

குறிப்பு:
நேர்முகப்பரீட்சாத்திகள் அனைவரும் எமது கலாசாலையில் பட்டம் பெற்ற ஆலிம் ஒருவரின் அல்லது தங்களது பிரதேசத்தில் உள்ள சுன்னத் வல்ஜமாஅத் கொள்கை சார்ந்த ஆலிம் ஒருவரின் கையெழுத்திடப்பட்ட பரிந்துரைக் கடிதம் ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும். மேற்படி பரிந்துரைக் கடிதம் பரிந்துரை வழங்கும் ஆலிமின் முகவரி, தெலைபேசி இலக்கம், பட்டம் பெற்ற கலாசாலையின் பெயர் என்பன குறிப்பிடப்பட்டு கடித உறையில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மேலதிக தொடர்புகளுக்கு
அதிபர்,
அல் ஜாமிஅதுல் கௌஸிய்யா,
தெஹிவளை
தொ.இ. 0112730153.

Printed and published by Express Newspapers (Cey) (Pvt) Ltd. at No. 267, Raja Mawatha, Ekala, Ja-Ela. On Saturday, November 27, 2021